மாலை 48 மணி 1 ஜனவரி 2006 விலை ரூ10

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு

ஸ்ரீராமானுஜரின் தாமான திருமேனி தரிசனம்

நவ திருப்பதிகள்
நவ கயிலாயங்கள்

அகத்தியர் உபதேசித்த ஆதித்ய இருதயம்

குழந்தைப்பேறு சுகப்பிரசவப் பிரார்த்தனைத் திருத்தலம்

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

மருதமலை - கோவை 46.

0422-2422490



திருப்பணிகள்

திருக்கோயிலில் இராஜகோபுர திருப்பணி, இளைப்பாறும் மண்டபம் கட்டுதல், புதிய படிக்கட்டுகள் அமைக்கும் பணி போன்ற திருப்பணிகள் நடைபெறுவதால் இத்திருப்பணிக்கு நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

கிருத்திகை பிரசாதம்

இத்திருக்கோயிலில் ரூ. 200/- செலுத்தி தங்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டால் அர்ச்சனை செய்து அவர்களது முகவரிக்கு ஓராண்டிற்கு தபாலில் பிரசாதம் அனுப்பி வைக்கப்படுகிறது.

நித்திய பூஜை கட்டளை

இத்திருக்கோயிலில் நித்தயபடி பூஜைக்கு ரூ. 8,000/- செலுத்தினால் அதிலிருந்து பெறப்படும் வட்டித்தொகையைக்கொண்டு வருடத்திற்கு ஒரு நாள் - தாங்கள் விரும்பும் நாளில், விரும்பும் பெயரில் பூஜை செய்யப்பட்டு அருட்பிரசாதம் வழங்கப்படுகிறது.

தங்கரதப் புறப்பாடு

தங்கரதப் புறப்பாடு தினந்தோறும் மாலை 6.00 மணிக்கு நடைபெறுகிறது. ரூ. 1000/- செலுத்தி தாங்கள் விரும்பும் நாளில் தங்கரம் புறப்பாடு செய்யலாம்.

தானத்தில் சிறந்தது அன்னதானம்

பக்தர்கள் தம்முடைய பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள் மற்றும் விரும்பிய நாட்களில் தானத்தில் சிறந்த அன்னதானத்திற்கு நாள் 1-க்கு ரூ. 1,500/- செலுத்தியும் (நாள் 1-க்கு 150 பக்தர்களுக்கு மதிய உணவு அளித்தல்) நிரந்தர கட்டளை ரூ. 15,000/- ம் செலுத்தி பங்கேற்க அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தைப்பூசத்தேர்த் திருவிழா - 2006

11-02-2006-ல் நடைபெற இருக்கும் தேர்த் திருவிழாவிற்கு மெய்யன்பர்கள் அனைவரும் வருகை புரிந்து மருதமலையானின் திருவருளினைப் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்திட வேண்டுகிறோம்.

ஆர். சுதர்சன், பி.எஸ்சி., பி.எல்.,
துணை ஆணையர் - செயல் அலுவலர்

டாக்டர் நல்லா. ஜி. பழனிசாமி
அறங்காவலர் குழுத்தலைவர்

அறங்காவலர்கள்

கே. வெங்கிடபதி, டி.எஸ். ரங்கராஜ், கே.பி. காளியப்பன், டி.கே. ஜெயா துரைசாமி

திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2036 பார்த்திப தை
மாலை 48 மணி 1 ஜனவரி 2006

அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

''உண்டி கொடுத்தோர்
உயிர் கொடுத்தோரே!''

என்பது இன்று நேற்றல்ல, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்த்திருநாட்டில் ஓங்கி ஒலித்த பொன்மொழி ஆகும்.

தமிழகத்தை ஆண்டிருந்த மன்னர் பெருமக்களும், வள்ளல்களும், தானத்தில் சிறந்த அன்னதானத்தைக் கண்ணெனப் போற்றி அறம் வளர்த்தார்கள்.

அதனால் தான் தமிழக வரலாறு எழுதிய அறிஞர் பெருமக்கள் பலரும் சங்க காலத் தமிழகத்தைத் தங்ககாலத் தமிழகமெனப் போற்றிப் புகழ்ந்துள்ளார்கள்.

நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருக்கோயில் அன்னதானத் திட்டத்தை மயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் 23.3.02 அன்று தொடங்கி வைத்து அறநிலையத்துறையில் ஒரு பொற்காலச் சரித்திரத்தைத் தொடங்கிவைத்தார்கள்.

நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திருக்கோயில் அன்னதானத் திட்டம் தொடங்கப்பட்டபோது, முதல் கட்டமாக 63 திருக்கோயில்களில் தான் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டது.

படிப்படியாக இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுத் தமிழகத்தின் புகழ்பெற்ற 180 திருக்கோயில்களில் இன்று மகத்தான அன்னதானத் திட்டம் சிறப்பாகச் செயற்படுத்தப்பட்டு வருவதைப் பக்தர்கள் எல்லோரும் மனமாரப் பாராட்டிப் புகழ்ந்து வருகிறார்கள்.

நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேலும் 180 திருக்கோவில்களில் அன்னதானத் திட்டத்தை வரும் பொங்கள் திருநாள் 14.1.2006 முதல் செயல்படுத்திட தற்போது ஆணை வழங்கியிருப்பது தமிழக மக்களை பெருமகிழ்ச்சி அடைய செய்யும்.

ஆழ்வார்களும், நாயன்மார்களும், அருளாளர்கள் பல்லோரும் கண்ட கனவுகளை எல்லாம் நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சீரிய முறையில் ''திருக்கோயில் அன்னதானத் திட்ட''த்தின் மூலம் நிறைவேற்றி வருவதாகத் தமிழக மக்கள் யாவரும் மனமாரப் பாராட்டிப் புகழ்ந்து ''அறநிலையத்துறையின் பொற்காலம்'' என வாழ்த்துக்களைக் குவித்து வருவதை 2006 புத்தாண்டு தொடங்கும் இப்பொன்னான நேரத்தில் ''திருக்கோயில்'' வாசகர்களாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடும் மனிதநேயம் கொண்ட நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நம் இந்துத் திருக்கோயில்களில் மட்டும் அல்லாமல், இஸ்லாமிய தர்காக்களிலும், கிறித்துவ தேவாலயங்களிலும் கூட அன்னதானத் திட்டத்தைத் தொடங்கி அதனைச் சிறப்புடன் செயற்படுத்த ரூபாய் ஒரு கோடி மூலதனமாக வழங்கி என்றென்றும் தமிழகச் சரித்திரம் போற்றிப் பாராட்டும் ''பசிப்பிணி மருத்துவராகத்'' திகழ்கின்றார்கள் என்பதைப் பெருமிதத்தோடு நான் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

மங்கலமார்கழியும், தைத்திங்கள் திருமகளும் கைகோர்த்து வரும் இனிய புத்தாண்டு 2006- ஜனவரி ''திருக்கோயில்'' இதழில் உங்கள் உள்ளங்களுக்குப் பக்திப் பெருவிருந்து படைக்கும் ஆன்மீகப் பொங்கல் மிக நன்றாகவே பரிமாறப்பட்டுள்ளது. படித்து மகிழ்ந்திட வேண்டுகிறேன்.

''இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை''
என்பது அப்பரடிகளின் அருள் வாக்கு.

''என்றும் இன்பம் பெருகும்''
என்பது சேக்கிழாரின் செந்தமிழ்.

இனிய புத்தாண்டில் - பொங்கல் திருநாளில் எல்லாவளங்களும் நலங்களும் நிறைய என் மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

அன்புள்ள

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
ஆணையாளர்

மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர் அவர்களின் அறிக்கை :

மேலும் 180 திருக்கோவில்களுக்கு அன்னதானத் திட்டம்

தமிழ்நாட்டில், தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்கோவில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு அத்திருக்கோவில்களிலேயே இலவசமதிய உணவு அளிக்கும் வகையில், அன்னதானத் திட்டத்தைக் கடந்த 23.3.2002 அன்று, சென்னை மைலாப்பூரில் உள்ள கபாலீஸ்வரர் திருக்கோவிலில் நான் தொடங்கி வைத்தேன்.

முதல் கட்டமாக 63 திருக்கோவில்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் தொடர்ந்து படிப்படியாக விரிவுப்படுத்தப்பட்டு, தற்போது மொத்தம் 180 திருக்கோவில்களில் சிறப்பாகச் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் மட்டுமன்றி, பிற மாநிலங்களில் இருந்து தமிழகத்திற்கு வருகை தருகின்ற பக்தர்களின் ஏகோபித்த பாராட்டையும், வரவேற்பையும் பெற்றுள்ள இந்தத் திட்டத்தை மேலும் பல திருக்கோவில்களில் செயல்படுத்த வேண்டும் என்று ஆன்மீக ஆர்வலர்களிட மிருந்தும் இறை அன்பர்களிடமிருந்தும் எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.

இந்தக் கோரிக்கையினை ஏற்று, மேலும் 180 திருக்கோவில்களில் அன்னதானத் திட்டம் செயல் படுத்த நான் தற்போது ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மேலும் 180 திருக்கோவில்களில் அன்னதானத் திட்டத்தை 14.1.2006 முதல் செயல்படுத்திட தற்போது ஆணையிட்டுள்ளேன்.

இதன் மூலம், தமிழ்நாட்டில் அன்னதானத் திட்டம் செயலபடுத்தபடும் திருக்கோவில்களின் எண்ணிக்கை மொத்தம் 360 ஆக உயர்ந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதழின் உள்ளே ....

1.	மாண்புமிகுதமிழ்நாடுமுதலமைச்சர் அவர்களின் அறிக்கை : மேலும் 180 திருக்கோவில்களுக்கு அன்னதானத் திட்டம்	2
2.	குழந்தைப்பேறு, சுகப்பிரசவப் பிரார்த்தனைத் திருத்தலம் திருச்சி அருள்மிகு தாயுமான சுவாமி திருக்கோயில்	3
3.	காலச்சுவடுகள் : திருத்தணி திருப்புகழ் படிவிழா வரலாறு - திருப்புகழ்மாமணி மு. அருணகிரி	6
4.	மலைத் தலங்களில் சிறந்த தணிகைத் திருத்தலம்	8
5.	இறைமை கலந்த தமிழ் - "எழுத்துச்சித்தர்" பாலகுமாரன்	11
6.	திருப்பல்லாண்டு பாடிய சேந்தனார் - பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்	14
7.	கேள்வி - பதில்	15
8.	தாமிரபரணி நதிஓரம் அமைந்த நவதிருப்பதிகள் - அருள்செல்வி	16
9.	தாமிரபரணி நதிஓரம் அமைந்த நவகயிலாயங்கள் - நிறைமதி, பி.எல்.,	19
10.	திருவிளையாடல் புராணம் - இரா. அரங்கசாமி	22
11.	அகத்தியர் உபதேசித்த ஆதித்ய இருதயம்	23
12.	மகாபாரதம் - முனைவர் த. அமிர்தலிங்கம்	25
13.	திருமந்திர உபதேசம் - திருமந்திரச்செல்வர் டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. (ஓய்வு)	28
14.	ஆண்டாள் ஆண்ட தமிழ் - டாக்டர் பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.	30
15.	தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை - அழுகுணிச் சித்தர் - முனைவர் இரா. செல்வக்கணபதி	32
16.	திருக்குறட்செல்வர் - நேயத்தே நின்றவர் - கே. பாலசுந்தரி, எம்.ஏ.	34
17.	நாரதர் தந்த நன்மை	36
18.	புன்னை நல்லூர் மாரியம்மன் புகழைப் பாடுவோம்	37
19.	திருவரங்க அற்புதம் - ஸ்ரீ ராமானுஜரின் தாமான திருமேனி தரிசனம்	39
20.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ள புத்தாண்டு வாழ்த்துச்செய்தி	40

குழந்தைப்பேறு, சுகப்பிரசவப் பிரார்த்தனைத்தலம்

திருச்சி அருள்மிகு தாயுமானசுவாமித் திருக்கோயில்

இறைவன் தாயும் ஆன வரலாறு

- பொ. ஜெயராமன், பி.எஸ்.ஸி., பி.எல்.,
உதவி ஆணையர், செயல் அலுவலர்

காவிரிப்பூம்பட்டினம்:

சோழநாட்டின் பழைய தலைநகரங்களுள் ஒன்று காவிரிப்பூம்பட்டினம், சிறந்த துறைமுகப் பட்டினமும் ஆகும். சோழநாட்டின் கிழக்கு எல்லையாகிய வங்கக்கடல் பகுதியை அடுத்து இருப்பது. காவிரி கடலில் சென்று புகும் பட்டினம் ஆதலின், காவிரிப் பூம்பட்டினம் எனப் பெயர் பெற்றது. இதைப் புகார் என்றும், பூம்புகார் என்றும் அழைப்பர். சிறந்த கடற்கரை நகரமும் ஆகும்.

இரத்தினகுப்தன்:

பூம்புகார் பகுதியில் உள்ள பட்டினப்பாக்கத்தில் வாழ்ந்த உள்நாட்டு பெரும் வணிகர்களில் ஒருவன் இரத்தினகுப்தன். இவன் தன் கற்புக்கரசியான மனைவியுடன் வாழ்ந்து வந்தான். அந்தணர்களுக்கும், துறவிகளுக்கும், உறவினர்களுக்கும், எளியவர்களுக்கும் எண்ணற்ற உதவிகளைச் செய்து வந்தான். விருந்தினர்களைச் சிறப்பாக உபசரித்து, திருக்கோயிலுக்குச் சென்று இறைவழிபாடுகளும் செய்து வந்தான். இதனால் மற்ற வணிகர்கள் அனைவராலும் சிறப்பாகப் போற்றப்பட்டான்.

மக்கட்பேறு:

மனைக்கு விளக்காகிய மனைவியுடன் நடத்திய குடும்ப வாழ்வு, மற்றோர் வியக்கும் வண்ணம் சிறப்பாக இருந்தது. நெடுங்காலம் மகப்பேறு இல்லாமையால் நாளும் திருக்கோயில் சென்று வழிபட்டு வந்த காரணத்தால் இறைவன் அருளால் ஒரு பெண் மகவு பெற்று அப்பெண்ணிற்கு இரத்தினாவதி எனப் பெயர் வைத்துச்சிறப்பாக வளர்த்து வந்தனர்.

திருமணம்:

இரத்தினாவதி தந்தையாலும் தாயாலும் தங்கள் குலமரபிற்குரிய பண்புநலங்கள் எல்லாம் அறிவுறுத்தப்பட்டுக் கலைகள் பல கற்று, ஆடல்

பாடல்களில் சிறந்து விளங்கினாள். அழகும், அறிவும், ஆற்றலும் உடையவளாகத் திருமணப் பருவம் அடைந்தாள். இரத்தினகுப்தன் தன் மகளை திருமணம் முடிக்க விரும்பி, திருச்சிராப்பள்ளியின் மலைக்கோயிலைச் சுற்றியுள்ள பகுதியில் வாழ்ந்து வந்த தனகுப்தன் என்னும் வணிகர் குலதிலகனுக்குத் திருமணம் செய்து கொடுத்துத் தக்க சீர்வரிசைகளுடன் பூம்புகார் நகர மக்கள் வியக்கும் வண்ணம் திருச்சிராப்பள்ளிக்கு அனுப்பி வைத்தார்.

மகப்பேறு அடைதல்:

தனகுப்தனுடன் திரிசிராமலைக்கு வந்த இரத்தினாவதி சிறப்பாக இல்லறம் செய்துவந்தாள். ஒவ்வொரு நாளும் திரிசிராமலைமேல் உறையும் செவ்வந்திநாதரை வழிபட்டுவந்தாள். செவ்வந்தி நாதரின் அருளால், இரத்தினாவதி தாயாகும் பேறு



அடைந்தாள். பேறுகாலம் நெருங்கவே அச்செய்தியைக் காவிரி பூம்பட்டினத்தில் வாழும் தன்தாய்க்குத் தெரிவித்தாள்.

தாயும் மகளைக் காணவும், பேறுகாலத்தில் உதவிகள் செய்யவும், மகளுக்கு வேண்டிய மருந்து, எண்ணெய் போன்ற பொருட்களுடன் காவிரி பூம்பட்டினத்தை விட்டுத் திருச்சிராப்பள்ளியை நோக்கி வரும்போது காவிரியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக காவிரியைக் கடக்க இயலவில்லை. இதனால் தாயின் வரவு தடைப்பட்டது. ஆனால் மகள் இரத்தினாவதியோ தாய் பிரசவத்திற்குரிய மருந்து பொருள்களுடன் இன்று வருவாள், நாளை வருவாள் என எதிர்பார்த்து காத்து இருந்தாள்.

செவ்வந்திநாதரைப் போற்றி வேண்டுதல்:

கருவுயிர்க்கும் நேரம் நெருங்கியும் தாய் வரவில்லை. இதனால் இரத்தினாவதி மலைமேல் இருக்கும் செவ்வந்திநாதரை நினைத்து ''சிவபரம்பொருளே! நீசங்கரன், சதாசிவன், ஈசானன், புங்கவன், திரிபுராந்தகன், புராதனன், புராணன், புண்ணியன்'' என்று போற்றி கங்கையைத் தலையில் வைத்திருப்பவர், நஞ்சு உண்ட கழுத்தை உடையவர், நெற்றிக் கண்ணை உடையவர் , மிகவும் பெரியவர், மிகவும் நுண்ணியர், எங்கும் பரிபூரணமாக இருப்பவர், பரத்துவம் உடையவர், பராபரமாக இருப்பவர், வெள்ளிமலையில் வாழ்பவர், மன்மதனை எரித்தவர், எமனை உதைத்தவர், யானையை உரித்து அதன் தோலைப் போர்த்தியவர், வேதங்களின் பொருளாக இருப்பவர். திருமால் பிரம்மனாலும் காணமுடியாதவர் என்றெல்லாம் ஆதியும் அந்தமும் இல்லாத அருட் பெருஞ்சோதியான இறைவனின் சிறப்பைக் கூறிப் போற்றி உருகி வழிபட்டாள்.

இறைவன் தாயாக வந்து மருத்துவம் பார்த்தல்:

கல்லினுள் இருக்கும் தேரைக்கும் கருணை செய்யும் இறைவன் தன்னுடைய சிவசொரூபத்தை மறைத்துக் கொண்டு, இரத்தினாவதிக்கு உதவ அவள் தாய் வடிவில் வந்தார். நரைத்த முடியுடன், தளர்ந்த நடையுடன், கையில் மூங்கில் தடியைப் பிடித்துக் கொண்டு முதிர்ந்த இரத்தினாவதி

தாய்போலவே, மருந்து, எண்ணெய் பொருட்களும், விலை உயர்ந்த பொன்முத்து நகைகளும், உயர்ந்த ஆடைகளும் கொண்டு இரண்டு சேடிப்பெண்களுடன் வந்தார்.

நிறைமாதத்தில் தவித்துக் கொண்டு இருந்த இரத்தினாவதியும் வந்தவரைத் தாய் என்றே எண்ணி எதிர் சென்று தாய் பாதங்களில் பணிந்தாள். அன்னையும் ஆன இறைவன் அன்போடு தழுவிக் கொண்டு தக்கவாறு மருத்துவம் பார்த்தார்.

இரத்தினாவதியும் ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். குழந்தையை ஈன்ற அப்பெண்ணிற்கு மருந்து எண்ணெய் கொடுத்து நாள்தோறும் செய்ய வேண்டிய செயல்களை எல்லாம் செய்து குழந்தையையும், தாயையும் ஏழு நாட்கள் பேணி வந்தார்.

''குழவி ஈன்றவட்கு அருமருந்து எண்ணெயும் கொடுத்தே
எழு தினத்து அளவு இழைத்திடும் செயல் எலாம் இயற்றி
அழகு தொட்டினுள் துயிற்றி அங்கு ஒரு மதி அள்வாம்
மழ களிற்றினை முருகவேள் எனும்படி வளர்த்தாள்''

செவ்வந்திப்புராணம் (524)

இறைவனே தாயாகி வந்து தன் பக்தைக்கு மகப்பேறு மருத்துவத் தொழில் புரிந்த அற்புதத்தை இப்பாடல் கூறுகிறது.

உண்மைத்தாய் வருதல்:

காவிரியில் பெருகிய வெள்ளம் வடிந்தது. காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து வந்து காவிரியின் வடகரையில் பல நாள் காத்துக் கிடந்த இரத்தினாவதியின் உண்மைத்தாய் காவிரியைக் கடந்து சிராமலைநகரை அடைந்து, இரத்தினாவதி இல்லத்தை அடைந்தாள். வந்த தாயை இரத்தினாவதி கண்டாள். திகைத்தாள்! இரு தாயாருள் எவர் உண்மை தாய் என கவனித்தாள். அப்போது தாயாக சுகப்பிரசவ மருத்துவம் பார்த்த செவ்வந்திநாதர் மறைந்தார். வானில் இறைவி மட்டுவார் குழலம்மையுடன் ரிஷிபவாகனத்தில் காட்சி தந்தார்.

இரத்தினாவதி என்ற எளிய பெண்ணின் பேரன்பிற்காக செவ்வந்திநாதர் தாயும் ஆனதால், இத்தலத்து இறைவன் தாயுமானசுவாமி என்று போற்றப்படுகிறார். இரத்தினாவதி இத்தல இறைவனை நாளும் வழிபட்டு இப்பேறு பெற்றமையால் இத்தலத்தில் தல அடியவர்களுள் ஒருவராக விளங்குகிறார்.

செட்டிப்பெண் மருத்துவம்: (சித்திரைத் தேர்த்திருவிழா ஐந்தாம் நாள் விழா)

அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயிலில் ஆண்டுதோறும் நடக்கும் சித்திரைத் தேர்த்திருவிழாவின்போது ஐந்தாம் நாள் திருவிழாவாகச் செட்டிப்பெண் மருத்துவம் நிகழ்கிறது. இவ்விழாவின்போது மருந்து திருக்கோயில் மூலம் வழங்கப்படுகிறது. இம்மருந்து பெற்று சுகப்பிரசவம் அடைந்தோரை கணக்கிட்டுக் கூற முடியாத பெருமையை உடையது இத்திருத்தலம்.

சுகமான மகப்பேறு நிகழ உதவும் மறைமொழி:-

''எம்பெருமானே! நிறைமங்கலப் பொருளே!
மன்மதனை எரித்தவரே!
பிரமன் முதலிய தேவகணங்களின் தலைவரே!
என் உயிர் நாயகனே! உமையொருபாகனே!
இளம் பிறைச் சந்திரனைத் தலையில் அணிந்தவரே!
தொடர்ந்து வரும் பாவங்களின் வேரை அழிப்பவரே!
ஒளிரும் மூவிலைச்சூலம் ஏந்தியவரே!
சிவபெருமானே! அருட்கடலே!
சுகமான குழந்தைப் பேறு நிகழ அருள்புரிவாய்!
தாயுமான ஈசரே!
உன் திருக்கோயில் வந்து வழிபடுவேன்
நின் திருவடிகளுக்குப் போற்றி! போற்றி!''

சுகப்பிரசவம் அடைந்தோர் செய்ய வேண்டியவை:

குழந்தைப்பேறு அடைந்து சுகப்பிரசவம் ஆனபிறகு சுவாமிக்குப் பால் அபிஷேகம் மற்றும் வாழைப்பழத்தாரை அர்ப்பணம் செய்யலாம். நேரில் காணிக்கை செலுத்த இயலாதவர்கள் அதற்கான தொகையைத் திருக்கோயில் முகவரிக்கு அனுப்பினால் பிரார்த்தனை நிறைவேற்றிப் பிரசாதம் அனுப்பி வைக்கப்படும். வரமுடிந்தவர்கள் சேயுடன் தாயும் வந்து இத்திருத்தல இறைவனை வணங்கி நீண்ட ஆயுளைப் பெறலாம்.

		கட்டணம் ரூ.
1.	அர்ச்சனை	-25
2.	வாழைப்பழத்தார்	-150
3.	அருள்மிகு தாயுமானசுவாமி அபிஷேகம்	-250
4.	அருள்மிகு மட்டுவார் குழலம்மை அபிஷேகம்	-250

கோமாதா

இந்துக்கள் பசுவை (கோமாதாவை) வணங்குவதைப் பெரும் புண்ணியமாக நினைக்கின்றனர். காரணம், பசுக்கொம்புகளின் அடியில் பிரம்மனும் திருமாலும் உறைகின்றனர். கொம்புகளின் நுனியில் கோதாவரி முதலிய புண்ணிய தீர்த்தங்களும், சராசர உயிர் வர்க்கங்களும் உறைகின்றன.

திருத்தணித் திருப்புகழ்த் திருப்படிவிழா வரலாறு

–திருப்புகழ் மாமணி மு, அருணகிரி

அருணகிரியார் தலயாத்திரையின் போது திருத்தணி முருகனைத் தரிசித்தார். கோடாத வேதனுக்கு யான் செய்த குற்றமென்ன? எனும் கேள்வியைத் (கந்தரலங்காரம்பாடல்) தொடுத்தார்.

இதே வினாவை திருப்புகழ் அடியார்கள் தொடுக்காது இருக்க எண்ணினார் தணிகேசன். இதனைப் பூர்த்தி செய்ய, தணிகேசனே, ஆங்கிலப் புத்தாண்டு ஆரம்பத் தினத்தன்று, அடியார்கள் யாவரையும், திருத்தணிக்கு வரவழைத்து, தரிசனம் தரும் பொருட்டே, வள்ளிமலை திருப்புகழ் சச்சிதானந்த சுவாமிகளை மூல புருஷராகத் தோற்றுவிக்க கருணை உள்ளம் கொண்டார் போலும் எனக் கருத முடிகிறது.

''அவசியம் உனைவேண்டிப் - பலகாலும்
அறிவினுணர்ந்து ஆண்டுக் - கொரு நாளில்
தவசெபமும் தீண்டிக்கனிவாகிச்
சரணமதும் பூண்டற் - கருள்வாயே''

எனும் பாடலின் அடிப்படையிலே, வள்ளிமலை திருப்புகழ் சுவாமிகள், 1921-ம் ஆண்டின் ஆரம்ப முதல் தேதியன்று, தணிகை மணி, வ.சு. செங்கல்வராயப்பிள்ளையுடன், 6 அடியார்களையும் சேர்த்துத் திருத்தணி சென்றார். ஏனையோரும் மலைப்பாதை வழியாக திருப்புகழைப் பாடிக் கொண்டே சென்றனர். அன்று தொடங்கித் திருத்தணித் திருப்புகழ்த் திருப்படிவிழா எனும் தலைப்பில், விழாவினுக்கு வித்திட்டார். இது யாரும் மறைக்கவோ, மறுக்கவோ இயலாத தொன்றாகும்.

எந்த ஒரு ஆலயமோ, இறைபணியோ, ஞானிகளாலும் அருளாளர்களாலும் துவக்கி வைக்கப்படுமேயானால், நாளடைவில் அது விரிவடைந்து சிறப்புடன் துலங்கும் என்பதனை உறுதிப்படுத்தும் வகையில், வள்ளிமலை திருப்புகழ் சுவாமிகளால் துவக்கப்பட்ட இவ்விழாவானது இன்றைய நாள் வரை சிறப்போடு கொண்டாடப்பட்டு வருவது கவனிக்கற்பாலது.

சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்னரே, அருணகிரியார் பாடிய பாடல் ஒன்றில்,

''திருப்புகழோதும் கருத்தினர் சேரும்
திருத்தணி மேவும் - பெருமாளே''

எனப் பாடியுள்ளது இன்று வரை ஜீவனுள்ள பாடலாக விளங்குவதைக் காண முடிகிறது.

'வாக்கிற்கு அருணகிரி' எனும் ஆன்றோர்களின் முதுமொழிக்கு மேலே குறிக்கப்பட்ட பாடல் ஒன்றே போதுமான சான்றாகும்.

புதுவருட தினத்தன்று தங்களது ஆங்கிலேய துரை மார்களைக் கண்டு, பூமாலைகளையும், பழங்களையும் தந்து அவர்களது நன்மதிப்பை பெறுவது அன்றைய வழக்கம். இதனைத் திருப்புகழ் சுவாமிகள் விரும்பாது, எல்லோர்க்கும் மேலான துரையான திருத்தணி முருகனை தரிசித்து அவனது திருவருளைப் பெற முயற்சிப்பதே சாலச் சிறந்ததாகும் என உணர்த்தக் கருதினார். அதனடிப்படையில் துவங்கி வைத்ததுதான் திருத்தணித் திருப்புகழ்த் திருப்படி விழா ஆகும்.

நின்தண்டையந்தூள் சூடும் சென்னியையும், தொழக்கைகளையும், நின் அழகைக் கண்டு ரசிக்க கண்களையும், நின் புகழையே பாட நாவையும், யாவர்க்கும் அருள்வாய் முருகா ! கண் மலராலும், மனமலராலும் கைம்மலராலும் நாம் போற்றி, நாடி வரும் வினைகளை ஓடிட அதனால் வெல்வோமாக.

விண்ணோர் வியக்கவும், மண்ணோர் மதிக்கவும், ஏற்ற வகையில்,

''எத்திக்கும் உற்ற புகழ் வெற்றித்

திருத்தணியில்
இற்றைத் தினத்தில் வரவேணும்''

எனும் அருணகிரியார் வாக்கினை உறுதிப் பத்திரமாக நினைவில் கொண்டு முருகனது அருளையும், குருவின் அருளையும் பெறத் திருத்தணிக்குப் புத்தாண்டு முதல் தேதியன்று புறப்படுவோம் வாருங்கள்.

மலைத்தலங்களில் சிறந்த தணிகைத் திருத்தலம்

திருமுருகாற்றுப்படையில் ''குன்று தோறாடல்'' எனச் சிறப்பிக்கப் பெற்ற முருகனின் ஐந்தாம் படைவீடாகிய திருத்தலமே திருத்தணிகைமலை ஆகும்.

அருணகிரிநாதர் 64 திருப்புகழ் பாக்களால் இத்திருத்தணிகை மலையைப் போற்றிப் பரவியுள்ளார்.

''புவிமீதே பிரபலமுள்ள சுத்ததனிமலை''
''இமையவர் பணி திருத்தணி பொற்பதி''
''எத்திக்குமுற்ற புகழ் வெள்ளித் திருத்தணி''
''திரைக்கடல் சூழும் புவிக்குயிராகும் திருத்தணி''

என்று இணையிலாத் திருத்தணிகையின் பெருமையைப் போற்றி மகிழ்கின்றார் அருணகிரிநாதர்.

மலர்களில் சிறந்த தாமரையைப் போல் நதிகளில் சிறந்த கங்கையைப் போல், ஊர்களில் சிறந்த காஞ்சியைப் போல் மலைகளில் சிறந்தது தணிகைமலை என்று போற்றியுள்ளார் கச்சியப்ப சிவாச்சாரியார் தாம் அருளியுள்ள கந்தப்புராண நூலில்.

''விரையிடங்கொளும் போதினுள் மிக்க பங்கயம்போல்
திரையிடங்கொளும் நதிகளிற்சிறந்த கங்கையைப்போல்
தரையிடங்கொளும் பதிகளிற் காஞ்சியந்தலம்போல்
வரையிடங்களில் சிறந்ததித் தணிகைமால் வரையே''

வள்ளிநாயகியை இவ்வொப்பற்ற திருத்தலத்தில் திருமணம் புரிந்து கொண்ட முருகப் பெருமான், குற்றங்கள் பல புரிந்தவரும் இப்புண்ணிய தலத்தை வந்து வணங்கினால் தம் தீவினைகள் யாவும் தீர்ந்து திருமால் நான்முகன் போல் சிறப்பினைப் பெறுவர் என்று கூறியிருப்பது கொண்டு இத்திருத்தலத்தின் பெருமையை ஒருவாறு நாம் உணரலாம்.

''பாதகம்பல செய்தவர் ஆயினும் பாவங்கள்
ஏதும் நித்தலும் புரிபவர் ஆயினும் எம்பால்
ஆதரங்கொடு தணிகைவெற் படைவரேல் அவரே
வேதன் மாலினும் விழுமியர் எவரினும் மிக்கார்''

என்பது கந்தபுராணம் ஆகும்.

''தணிகைமலையைச் சாரேனோ''
சாமியழகைப் பாரேனோ''

என்று மனமுருகிப் பாடிய அருட்பிரகாசவள்ளலாருக்கு அவர் இல்லத்தில் கண்ணாடியில் திருவுருவம் காண்பித்து ஆட்கொண்ட எல்லையிலாப் பேரருளாளர் திருத்தணிகை முருகன் ஆவார்.

காதர் என்ற இசுலாமியரின் துன்பத்தைத்

திருக்கோயில்
திங்கள் இதழ்



தனி இதழின் விலை	ரூ 10/
ஓராண்டுச்சந்தா	ரூ 120/
பத்து ஆண்டுச்சந்தா	ரூ 1000/
ஆயுட்காலச்சந்தா	ரூ 1500/

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!

திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :

1. பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்)	ரூ 15,000/
2. முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்)	ரூ 10.000/
3. பின்பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்)	ரூ 7,500/
4. உள்புறம் முழுப்பக்கம்	ரூ 5,000/
5. உள்புறம் அரைப்பக்கம்	ரூ 3,000/

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.



தணிகை முருகன் தீர்த்தருளிய காரணத்தால். அவ்வன்பர் தம் அன்பின் பெருக்கால் அமைத்துத் தந்த நவாப் வாத்திய மண்டபமும். பிரசன்ன காதர் ஈசுவரர் சன்னதியும் சமய ஒருமைப்பாட்டுச் சின்னமாக தணிகையில் அமைந்து விளங்கி அனைத்துச் சமயத்தார் போற்றும் அரும்பெருங் கடவுள் முருகன் என்ற உண்மையை நிலைநாட்டிக் கொண்டிருப்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும்.

"திருப்புகழ் ஓதும் கருத்தினர் சேரும்
திருததணி மேவும் பெருமாளே"

என்று அருணகிரிநாதர் பாடியிருப்பதற்கேற்ப ஆங்கிலப் புத்தாண்டு, தமிழ்ப்புத்தாண்டு, ஆடிக்கிருத்திகை ஆகிய விழா நாட்களில் இலட்சக்கணக்கான முருகன் அடியார்கள் திருப்புகழை ஓதிக்கொண்டும், மலர்க்காவடி, பால்காவடிகளை ஏந்திக்கொண்டும் திருத்தணிகை மலையேறிவரும் காட்சி, கண்கொள்ளாக் காட்சியாகும்.

இருப்பிடம்

திருத்தணிகை என்னும் புகழ்மிக்க திருமுருகனின் தலம், திருவள்ளூர் மாவட்டத்தில், சென்னையிலிருந்து பம்பாய் செல்லும் இருப்புப்பாதை வழியில், அரக்கோணத்திற்கு வடக்கே 13 கிலோமீட்டர் தொலைவிலும் உள்ளது. சென்னையில் இருந்து வடமேற்கே 84 கிலோமீட்டர் தொலைவிலும் உள்ளது.

தணிகை - பெயர் விளக்கம்

முருகப்பெருமான் தேவர்களின் துயரம் நீங்கும் பொருட்டு சூரபதுமனுடன் செய்த பெரும் போரும், வள்ளியம்மையை மணந்துகொள்ள வேடர்களுடன் விளையாட்டாக நிகழ்த்திய சிறுபோரும் முடிந்து, தணிந்து அமர்ந்த தலம் ஆதலின் இதற்குத் தணிகை எனப் பெயரமைந்தது.

மலைகளில் சிறந்தது திருத்தணிகை மலை

இத்தலத்தில், முருகப்பெருமான் மலைமீது எழுந்தருளி வீற்றிருக்கின்றார். ஒரு தனிமலையின் சிகரத்து உச்சியில், கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. முருகன் எழுந்தருளி விளங்கும் மலையின் இருபுறங்களிலும், மலைத் தொடர்ச்சிகள் பரவிப் படர்ந்துள்ளன. வடக்கே உள்ள மலை சிறிது வெண்ணிறமாக இருப்பதால் "பச்சரிசி மலை" என்றும், தெற்கே உள்ள மலை கருநிறம் வாய்ந்திருப்பதால் "பிண்ணாக்கு மலை" என்றும் கூறப்படுகின்றன. இருப்புப்பாதை நிலையத்தி லிருந்து தென்மேற்கே சுமார் இரண்டு கிலோமீட்டர் தொலைவில் மலையடிவாரம் உள்ளது. "சரவணப் பொய்கை" என வழங்கும் புகழ்மிக்க "குமார தீர்த்தம்" என்னும் பெரிய திருக்குளம் மலையடி வாரத்தில் உள்ளது. பக்தர்கள் இதிலேயே பெரும்பாலும் நீராடுவது வழக்கம். இத்தீர்த்தத்தைச் சுற்றிப் பல மடங்கள் உள்ளன. அதனால் இப்பகுதிக்கு "மடம்கிராமம்" என்று பெயர் வழங்குகிறது. திருக்குளத்தில் தென் மேற்கு மூலையில், மலையடிவாரம் இருக்கின்றது.

திருக்குளத்தின் கிழக்குக் கரையினின்று மலையைப் பார்த்தால், வளைவாக இடம் பெற்ற ஒரு மாலை போலவும். மூவுருவம் எடுத்த ஒரு பரம்பொருள் போலவும், மூன்று மலைகள் விளங்கும். அவற்றின் மத்தியில் திருமுருகன் திருக்கோயில் நடுநாயகமாகச் சிறந்தோங்கி விளங்கின்றது. அக்காட்சி மிகவும் அழகு வாய்ந்து திகழும். அதனால் அருணகிரிநாதர் இதனை "அழகுத் திருத்தணிமலை" என்று புகழ்ந்து போற்றியிருக்கின்றார். திருமுருகனுக்கு இணையான தெய்வங்கள் எதுவும் இல்லாமை போலவே திருத்தணிகைக்குச் சமமான தலமும் வேறேதுவும் இல்லை எனலாம்.

தேவேந்திரன் இங்கு முருகப் பெருமாளை நீலோற்பலம் என்னும் கழுநீர் மலர்கொண்டு பூசித்தான் என்பது தலவரலாறு. ஆதலின் 'கல் மலிந் தோங்கும் கழுநீர்க் குன்றம்' என்று திருநாவுக்கரசர் இத்தலத்தையும் இத்தலத்தின் வரலாற்றையும் குறிப்பிட்டிருப்பது, பெரிதும்

போற்றி உணர்ந்து மகிழ்தற்குரியது, இதனால் சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்னரே, திருநாவுக்கரசருக்கு முற்பட்ட மிகப்பழங் காலத்திலேயே புகழ்மிக்க பெருந்தலமாக விளங்கியிருந்திருத்தல் வேண்டும் என்னும் உண்மை புலனாகின்றது.

திருத்தணி முருகனை வழிபட்டோர்

சிவபிரான்: திருததணிகையில் முருகப் பெருமானைத் தியானித்துச் சிவபெருமான் பிரணவப் பொருள் உபதேசிக்கப் பெற்றார்.

திருமால்: திருத்தணிகையில் முருகனை வழிபட்டு, தாரகாசுரனால் கவரப்பட்ட தமது சக்கரம் சங்கு முதலியவற்றைத் திருமால் மீண்டும் பெற்றார், அவர் உண்டாக்கிய விஷ்ணுதீர்த்தம், மலையின்மேல், கோயிலுக்கு மேற்கே உள்ளது.

இராமபிரான்: இங்கு முருகனை வழிபட்டு இராவணனை வெல்லும் ஆற்றலையும் அருட் படைகளையும் பெற்றதுடன், இராவணனை வென்றபிறகு வந்து, மீண்டும் முருகனைப் பூசித்துச் சிவஞானம் பெற்றார்.

பிரம்மதேவர்: திருத்தணிகையில் பிரம்ம தேவர் முருகப்பெருமாளைப் பூசித்துப் படைப்புத் தொழில் செய்யும் ஆற்றலைப் பெற்றார்.

திருநந்திதேவர்: பதி, பசு, பாசம் என்னும் இறை உயிர் தளை ஆகிய முப்பொருள் இயல்புகளைக் கூறும் சைவ சித்தாந்த நுட்பங்களை, இங்கு முருகனை வழிபட்டுத் திருநந்தி தேவர் அறிவுறுத்தப்பெற்றார்.

வாசுகி நாகம்: தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்தபோது மந்தர மலையை மத்தாகவும், வாசுகி என்னும் நாகத்தினை நாணாகவும் கொண்டு கடைந்தனர், அங்ஙனம் கடைந்தபோது வாசுகி நாகத்தின் உடலிற் பல வடுக்களும் புண்களும் தழும்புகளும் ஏற்பட்டுப் பெரிதும் துயர் விளைவித்தன. ஒரு சுனையில் நாடோறும் முறையாக நீராடி, முருகனை வழிபட்டு, வாசுகி நாகம் அத்துயரங்களினின்று நீங்கி உய்ந்தது. அது நீராடிய சுனை ''நாகசுனை'' என வழங்கி வருகின்றது. ஆதிசேடனும் இவ்வாறு வழிபட்டு அருள்பெற்றான். ஆதிசேட தீர்த்தம் விஷ்ணுதீர்த்ததிற்கு மேற்கே மலைப் பாதைக்குத் தென்புறம் இருக்கின்றது.

அகத்தியமுனிவர்: இங்கு முருகனை வழிபட்டு, அகத்திய முனிவர் முத்தமிழ்ப் புலமையும், சிவஞானத் தெளிவும் பெற்றார். அவர் உண்டாக்குவித்த அகத்திய தீர்த்தம், ஆதிசேட தீர்த்தத்திற்குத் தென்கிழக்கில் உள்ளது.

நாரத முனிவர்: நாரதமுனிவர் ஞானத்திலும் பக்தியிலும் சிறந்து விளங்குபவராயினும் அவருக்குச்சில ஐயப்பாடுகள் இருந்து வந்தன. இவ் ஐயப்பாடுகள் நீங்கி மெய்யுணர்வு பெறுவதற்காக, நாரதர் இங்கு முருகனை வழிபட்டு அருள் பெற்றார். அவர் ஏற்படுத்திய நாரததீர்த்தம், அகத்திய தீர்த்தத்திற்குக் கிழக்கேயுள்ளது.

ஏழு முனிவர்கள்: சப்த ரிஷிகள் என்று கூறப்பெறும் வசிட்டர் முதலிய ஏழு முனிவர்கள், இங்கு முருகனைப் பூசித்தனர், அவர்கள் பூசித்த இடம், மலையின் தென் கீழ்த்திசையில் உள்ளது. அவர்கள் அமைத்த ஏழு சுனைகளும், கன்னியர் கோயிலும் இங்கு உள்ளன.

சந்தனப்பிரசாதம்

தணிகை முருகனின் திருவுருவத்தை ஊன்றி நோக்கினால் மார்பில் சிறிது பள்ளமாக இருக்கும். தாரகாசுரன் திருமாலிடமிருந்து பறித்துக் கொண்ட சக்கரத்தை முருகன், அவனை வென்றபோது, தாம் எடுத்து, திருமாலுக்குப் பின்னர் வழங்குவதற்காக அதனைச் சிறிதுகாலம் தம் மார்பில் அணிந்து கொண்டார். இதன் அடையாளமாகவே, தணிகை முருகனின் திருமார்பில் ஒரு சிறு பள்ளம் ஏற்பட்டுள்ளது, அதன் மீது அணிவிக்கப்பெறும் சந்தனமே அடியவர்களுக்கு அருட்கொடையாக வழங்கப் பெறுகின்றது. இது திருமேனிப் பூச்சு (ஸ்ரீ பாத ரேணு) எனப்படும். இச்சந்தனத்தை உட்கொள்ளம் பக்தர்கள் நோய்கள் பலவும் தீரப்பெறுவர்.

திருத்தணிகை ஒரு சிறந்த பிரார்த்தனைத் தலம். தன்பால் அன்புடன் நேர்த்திக் கடன் செய்து கொள்ளும் அன்பர்களுக்கு அவர்கள் வேண்டும் நலங்களையும் வரங்களையும், கலியுகத்திற்கு கண்கண்ட கடவுளாகச் சிறந்து திகழும் தணிகை முருகன், விரைந்து அருள்புரிந்து வருகின்றான். திருப்பதி மலைக்கு செல்லும் பக்தர்கள், அங்கு செல்லும் முன்னரோ, சென்ற பின்னரோ இங்குவந்து முருகனைத் தரிசித்தால் தான், அவர்களின் யாத்திரையும் வழிபாடும் நிறைவு பெற்றதாகும் என்பது பெரியவர்களின் கொள்கை. அதனாலேயே திருப்பதிக்குச் சென்று வரும் யாத்திரீகளுக்கு உணவு அளிப்பதற்காக, அறக்கட்டளைகள் பல ஏற்பட்டிருந்ததனை, ஆயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டனவாய், இங்குள்ள பழைய கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

அருட்பிரகாசருக்குக் கிடைத்த அருள் தரிசனம்

இராமலிங்கருக்கு வயது ஒன்பதாக இருந்தபோது நிகழ்ந்த அதிசயம் இது.

தனது தனியறையில் திருத்தணி முருகரைத் தியானித்தவாறு இருந்தான் இராமலிங்கம்.

சுவரில் சாற்றியிருந்த நிலைக் கண்ணாடியில் வள்ளிதெய்வயானையரோடு மயில் மேல் வீற்றிருந்த திருத்தணிகை முருகப் பெருமான் இராமலிங்கத்திற்குத் திருக்காட்சி வழங்கித் திருவருள் புரிந்த அற்புதம் நிகழ்ந்தது.

இறைமை கலந்த தமிழ்

"எழுத்துச்சித்தர்" பாலகுமாரன்

இது மார்கழி மாதம். மழையால் ஏற்பட்ட குளிர், வாடைக்காற்றால் அதிகரித்து புவியிலுள்ள தாவரங்களை வருடிக் கொண்டிருக்கின்ற மாதம். சூரியன் பூமியை விட்டு சற்று விலகி நிற்க, குளிர் இறுகப் பூமியை தழுவிக் கொஞ்சுகின்ற மாதம்.

பெரிய விழிகளும், மீசையும், நல்ல உயரமும், கையில் சங்கும் ஏந்தித் தன் குடும்பத்தாரோடு நிற்கின்ற திருவல்லிக்கேணி பார்த்தசாரதியைத் தரிசித்து வலம் வரும் போது ஸ்ரீகிருஷ்ணரைப் பற்றியே மனம் சுற்றிச்சுற்றி வந்தது.

தமிழகத்திலிருந்து பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால், தொலைவில் குஜராத் மாநிலத்தின் கடற்கரைப் பகுதியில் பிறந்து வளர்ந்த ஸ்ரீகிருஷ்ணர் என்ற மனித வியக்தியை இந்தப் பரதகண்டம் விதம் விதமாகக் கொண்டாடியிருக்கிறது.

தமிழகத்தின் தெற்குப் பகுதியில் வறண்ட ஒரு நிலப்பரப்பில் ஒன்பது மாதம் வெய்யிலும், ஒரு மாதம் மழையும், இரண்டு மாதம் குளிருமாய் இருக்கின்ற ஒரு பகுதியில் வாழ்ந்து வந்த பெரியாழ்வார் என்ற மனிதரை அது எப்படி ஆட்டிப் படைத்திருக்கிறது என்று நினைக்க ஆச்சரியமாக இருந்தது. ஸ்ரீகிருஷ்ணர் என்ற வியக்தி பெரியாழ்வாரை ஆட்டிப் படைத்ததை அந்த மாமனிதர், மிகப்பெரும் கவிஞர் மிக அழகாக தன்னுடைய பாடல்களில் பதிய வைத்திருக்கிறார். பரமானந்தமாய் அந்த ஸ்ரீ கிருஷ்ணரை அனுபவித்து இருக்கிறார்.

ஆயர் குலத்திலே பிறந்த அந்தக் கோபாலன் என்னவெல்லாம் லீலைகள் செய்தான் என்று, ஸ்ரீகிருஷ்ணருடைய குறும்புகளைப் பத்துப் பாட்டில் தொகுத்திருக்கிறார். அற்புதமான ஒரு நாடகபாணியில் விளக்கி இருக்கிறார்.

அது ஸ்ரீகிருஷ்ணரின் வளர்ப்புத்தாய் யசோதையின் வீட்டு வாசல். அந்த வீடு இருக்கிற இடம் ஒரு இடையர்குடி. சுற்றியுள்ள இடைக்குலப் பெண்கள் யசோதையின் வீட்டு வாசலில் நின்று ஸ்ரீகிருஷ்ணனைப் பற்றி முறையிடுகிறார்கள். நந்தகோபன் மனைவி யசோதை. நந்தகோபர் இடையர்குலத் தலைவன். தலைவனுடைய வீட்டிலே வந்து, தலைவன் வீட்டில் வளரும் பிள்ளையைப் பற்றிக் குறை சொல்வது என்பது எளிதா? சாதாரண காரியமா? அதனால், சற்று மரியாதையோடு அதே சமயம் அந்தப் பிள்ளை செய்கின்ற குறும்புகளைப் பொறுக்க முடியாமல் சொல்லித் தான் தீரவேண்டும் என்ற வேகத்தோடு



வருகிறார்கள். அவர்கள் குரலிலே கோபமும் இருக்கிறது. கொஞ்சம் அடக்கமும் இருக்கிறது. கோபம் அடக்கமாக சொல்லப்படுகிறபோது நொந்து கொள்வது போல வெளிவருகிறது.

"வெண்ணெய் விழுங்கி வெறுங் கலத்தை
வெற்பிடை இட்டு அதன் ஓசை கேட்கும்;

கண்ணபிரான் கற்ற கல்வி தன்னைக்
காக்ககில்லோம், உன் மகனைக் காவாய்;

புண்ணிற் புளிப்பெய்தால் ஒக்கும் தீமை
புரைபுரையில் இவை செய்ய வல்ல
அண்ணற் கண்ணான் ஓர் மகனைப் பெற்ற
அசோதை நங்காய்! உன் மகனைக் கூவாய்"

பானையில் இருக்கின்ற வெண்ணெயை விழுங்கியதோடு மட்டுமல்லாமல் வேறொரு கல்லால் அந்தப் பானையை உடைத்து, அந்தப் பானை சிலீரென்ற ஒலியோடு உடையும் ஓசையைக் கேட்டுக் களிக்கின்ற அந்தக் கண்ணனைக் கொஞ்சம் கவனித்து வை. புண்ணிலே புளியை வைத்தது போல உன் பிள்ளை எரிய எரிய வைக்கிறான். அவனைக் கூவுவாய் என்று ஒரு ஆய்ச்சி கூவுகிறார்.

அடுத்த பாடல் அந்த ஆய்ச்சிக்கு பதில் சொல்வது போல யசோதை கண்ணனை நோக்கி கூவுகிறாள்.

''வருக, வருக, வருக இங்கே
வாமன நம்பீ! வருக இங்கே!
கரிய குழல் செய்ய வாய்முகத்து எம்
காகுத்த நம்பீ! வருக இங்கே!
அரியன் இவன் எனக்கு இன்று, நங்காய்!
அஞ்சனவண்ணா! அசலகத்தார்
பரிபவம் பேசத் தரிக்ககில்லேன்;
பாவியேனுக்கு இங்கே போதராயே!''

அவள் கண்ணனை எப்படிக் கோபித்துக் கொள்கிறாள் தெரியுமா? அடுத்த வீட்டுப் பெண்கள் உன்னைப் பற்றிக் குறை கூறுவதைக் கேட்கும்படியாக வைத்துவிட்டாயே கண்ணா! இது நியாயமா ? இங்கு வா. வா இங்கே என்று மெல்ல அதட்டலாக, அதே சமயம் குறை கூறியவர்களைக் குறை கூறுவது போல ஒரு கோபத்தோடு பேசுகிறாள்.

அடுத்தது இன்னொரு ஆய்ச்சிக்கு வேகம் வருகிறது.

''திருவுடைப் பிள்ளைதான் தீயவாறு
தேக்கம் ஒன்றும் இலன், தேசு உடையன்
உருக்க வைத்த குடத்தோடு வெண்ணெய்
உறிஞ்சி உடைத்திட்டுப் போந்து நின்றான்;
அருகு இருந்தார் தம்மை அநியாயம்
செய்வதுதான் வழக்கோ? அசோதாய்!
வருக என்று உன்மகன் தன்னைக் கூவாய்
வாழ ஒட்டான் மதுசூதனனே''

இதைக் கேட்டதும் கொஞ்சம் கோபம் யசோதைக்கு அதிகமாகிவிட்டது.

''கொண்டல்வண்ணா! இங்கே போதராயே!
கோயிற்பிள்ளாய்! இங்கே போதராயே!
தெண்டிரைசூழ் திருப்பேர்க் கிடந்த
திருநாரணா! இங்கே போதராயே!
உண்டு வந்தேன் அம்மம் என்று சொல்லி
ஓடி அகம்புக, ஆய்ச்சி தானும்
கண்டு எதிரே சென்றெடுத்துக் கொள்ளக்
கண்ணபிரான் கற்ற கல்விதானே!''

என்னிடம் நீ என்ன சொன்னாய். ஆய்ச்சி வீட்டில் அம்மம் சாப்பிட்டு வருகிறேன் என்று சொன்னாய். ஆனால் ஆய்ச்சியோ கையிலே செண்டு எடுத்துக் கொண்டாள். (செண்டு என்பது நீண்ட பிடியுள்ள ஒரு அடிக்கும் கருவி, மத்து போன்ற ஒன்று என்றும் வைத்துக் கொள்ளலாம்)

பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க!

ஆன்றோர்கள் இவ்வாறு வாழ்த்துவது வாழ்வில் நாம் பெறத்தக்க பதினாறு வகைப் பேறுகளைக் குறிக்கும்.

அவை பின்வருமாறு:

(1) புகழ் (2) கல்வி (3) வலிமை (4) வெற்றி (5) நன்மக்கள் (6) பொன் (7) நெல் (8) நல்லூழ் (9) நுகர்ச்சி (10) அறிவு (11) அழகு (12) பெருமை (13) இளமை (14) துணிவு (15) நோயின்மை (16) நீண்ட ஆயுள்

செண்டு எடுத்துக் கொண்டு வருவதை பெருங்குற்றமாகச் சொல்கிறாள் யசோதை.

அடுத்த ஆய்ச்சி இன்னும் வேகமாக ஒரு பெரும் குறையைச் சொல்கிறாள்.

''பாலைக் கறந்து அடுப்பு ஏற வைத்துப்
பல்வளையாள் என்மகள் இருப்ப,
மேலை அகத்தே நெருப்பு வேண்டிச்
சென்று இறைப்பொழுது அங்கே பேசி நின்றேன்
சாளக்கிராமம் உடைய நம்பி
சாய்த்துப் பருகிட்டுப் போந்து நின்றான்;
ஆலைக் கரும்பின் மொழி அன்னய
அசோதை நங்காய்! உன் மகனைக் கூவாய்''

பாலைக் காய்ச்சுவதற்காக அடுப்பில் வைத்து விட்டுக் காவலுக்கு என் மகளையும் வைத்துவிட்டு, அந்த அடுப்பை மூட்டுவதற்கு உண்டான நெருப்பை வேண்டுவதற்காக மேலை அகம் சென்றேன். (மேலை அகம் என்றால் மேற்குடி மக்கள் வாழ்கின்ற இடம்). யார் மேற்குடி மக்கள். அந்தணர்கள். அந்தணர்கள் வீட்டில் என்ன இருக்கும். அக்னி இருக்கும். எப்பொழுதும் அணையாத நெருப்பு இருக்கும். அங்கு போய் நெருப்பு வாங்கி வருவதற்காக போனேன். போய் அங்கு சிறிது நேரம் பேசியிருந்தேன். அவள் சிறிது நேரம் பேசியிருப்பாளா? (ஊர் வம்பெல்லாம் பேசியிருப்பாள்) வந்து பார்த்தால் மொத்த பாலும் சாய்ந்திருக்கிறது. இந்தக் கூத்தை நான் என்ன சொல்வேன் என்று மிகப் பெரிதாக நாடக பாணியில் பேசுகிறாள் அந்த ஆய்ச்சி.

இப்பொழுது இன்னமும் அதிகமாகிவிட்டது யசோதையின் கோபம்.

வருக வருக என்று கூவியதும், போதராயே என்று சொன்னதும் போய்...

இப்பாடலில் யசோதையின் குரல் உயருகிறது. வரப்போகிறாயா, இல்லையா என்பது போல அந்தத் தொனி இருக்கிறது.

''போதர் கண்டாய் ; இங்கே போதர் கண்டாய் ;
போதரேன் என்னாதே போதர் கண்டாய்
ஏதேனும் சொல்லி அசலகத்தார்
ஏதேனும் பேசநான் கேட்கமாட்டேன் ;
கோதுகலம் உடைக் குட்டனேயோ
குன்று எடுத்தாய் ! குடம்ஆடு கூத்தா
வேதப் பொருளே ! என் வேங்கடவா !
வித்தகனே ! இங்கே போதராயே''

அடுத்த வீட்டுப் பெண்களெல்லாம் ஏதாவது சொல்லி நான் ஏதாவது கேட்கவேண்டிய நிலையில் இருக்கிறேனே, அப்படி என்னை வைத்து விட்டாயே என்று அவனைக் கொஞ்சிய வண்ணம் கூப்பிடுகிறாள் யசோதை. ஆனால், கண்ணன் வரவில்லை.

இன்னொரு ஆய்ச்சிக்குக் கோபம் பொத்துக் கொண்டு விட்டது.

''செந்நெல் அரிசி சிறுபருப்புச்
செய்த அக்காரம் நறுநெய் பாலால்
பன்னிரண்டு திருவோணம் அட்டேன் ;
பண்டும் இப்பிள்ளை பரிசு அறிவன் ;
இன்னம் உகப்பன் நானென்று சொல்லி
எல்லாம் விழுங்கிட்டுப் போந்து நின்றான் ;
உன் மகன் தன்னை, அசோதை நங்காய் !
கூவிக் கொள்ளாய், இவையும் சிலவே !''

திருவோணத்திற்காகப் பலகாரங்கள் செய்து, அதை அவனுக்கும் சிறிது கொடுத்தால் எல்லாவற்றையும் வாங்கி விழுங்கிவிட்டு எனக்கு இன்னமும் கொடு, இன்னமும் நான் தின்பேன் என்று கால் அகட்டி நிற்கிறான். இவனைப் பற்றி நான் என்ன சொல்ல என்று பயந்து போய் சொல்கிறாள் அந்த ஆய்ச்சி.

இன்னொரு ஆய்ச்சி இன்னும் கோபமாகப் பேசுகிறாள்.

''கன்னல் இலட்டுவத்தோடு சீடை
காரெள்ளின் உண்டை கலத்தில் இட்டு
என் அகமென்று நான் வைத்துப் போந்தேன்
இவன் புக்கு அவற்றைப் பெறுத்திப் போந்தான்.
பின்னும் அகம்புக்கு உறியை நோக்கிப்
பிறங்கு ஒளி வெண்ணெயும் சோதிக்கின்றான் ;
உன்மகன் தன்னை, அசோதை நங்காய் !
கூவிக் கொள்ளாய் இவையும் சிலவே !''

அந்தக் காலத்துத் திண்பண்டங்கள் வரிசையாகச் சொல்லப்படுகிறது.

வெல்லப் பாகில் செய்த ஒரு உருண்டையோடு சீடை, எள் உருண்டை என்று பல்வேறு வகை உணவுகளைக் கலத்திலிட்டு இது என் வீடு தானே என்று வெளியே போனேன். ஆனால், என் வீட்டிற்குள் அவன் புகுந்து சகலமும் விழுங்கிவிட்டு, பிறகு வெண்ணெயினுடைய உறியையும் குறி வைக்கிறான். அவன்தான் உன் மகன் ; அவனை இங்கே வரச்சொல் என்று கூவுகிறாள்.

என்ன பேசுவதென்று யசோதைக்குப் புரிய வில்லை. இத்தனை கூப்பிட்டும் பிள்ளை வரவில்லை. குற்றமோ அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. என்ன செய்வது என்று மௌனமாய் இருக்க, இன்னொரு குற்றம் வந்து நிற்கிறது.

''சொல்லில் அரசிப் படுதி நங்காய் !
சூழல் உடையன் உன்பிள்ளை தானே ;
இல்லம் புகுந்து என்மகளைக் கூவிக்
கையில் வளையைக் கழற்றிக் கொண்டு,
கொல்லையில் நின்றும் கொணர்ந்து விற்ற
அங்கு ஒருத்திக்கு அவ்வளை கொடுத்து,
நல்லன நாவற்பழங்கள் கொண்டு,
நான் அல்லேன் என்று சிரிக்கின்றானே !''

இப்பொழுது குற்றம் மிகப் பெரிதாகிவிட்டது. என் வீட்டிற்குள் நுழைந்து என் மகளைப் பெயர் சொல்லிக் கூவி அவள் கை வளையைக் கழற்றிக் கொண்டு கொல்லைப்பக்கம் வந்து நிற்கின்ற ஒரு நாவற்பழம் விற்கின்ற பெண்ணிற்கு அந்த வளையைக் கொடுத்து நாவற்பழங்கள் வாங்கி நன்றாகத் தின்றுவிட்டு ''ஏனடா இப்படிச் செய்தாய்? என்று கேட்டால் நானல்லேன் என்று சிரிக்கின்றானே'' என்று சொல்கிறாள். நான் ஒன்னும் பண்ணலையே என்கிற குழந்தைப் பொய், நம்முன் படமாய் விரிகிறது.

தமிழ் நாகரீகம் எவ்வளவு சிறந்து விளங்கிற்று என்பதை இந்தப் பாடல்கள் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்!

மகாத்மா யார்?

ஏழைகள் படும் பாட்டைக் கண்டு எவர் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றாரோ அவரே மகாத்மா. மற்றவர்கள் துராத்மாக்கள்.

- சுவாமி விவேகானந்தர்.

திருப்பல்லாண்டு பாடிய சேந்தனார்

பருத்தியூர் டாக்டர் K. சந்தானராமன், M.A. D.Litt., Ph.D.,

காலக்கணக்கிற்கு உட்படாத, அப்பாற்பட்ட கடவுளுக்குப் பல்லாண்டு பாடியவர்கள் இருவர். ஒருவர் பெரியாழ்வார். மற்றொருவர் ஒன்பதாம் திருமுறை ஆசிரியர்களில் இரண்டாவதாகத் திகழும் சேந்தனார்.

திருவெண்காட்டுக்கு அருகில் உள்ள நாங்கூர் என்ற தலத்தைச் சேர்ந்த சேந்தனார் பட்டினத்தடிகளிடம் தலைமைக் கணக்கராகப் பணியாற்றினார். பெருஞ் செல்வந்தராகத் திகழ்ந்த பட்டினத்தடிகள் கடுந்துறவு மேற்கொண்டார். செல்வமனைத்தையும் துறந்து விட்டு வயல்வெளியில் படுத்துறங்கினார். அப்போது, இரண்டு பெண்கள் அவரைக் கண்டனர். ''எல்லாவற்றையும் துறந்தவரைப் பார்த்தாயா? வயல் வரப்பில் தலைவைத்துப் படுத்திருக்கிறார் ! அனைத்தையும் துறந்த பிறகும் உறக்கத்திற்குத் தலையணை தேவைப்படுகிறது பார்!'' என்றாள் ஒரு பெண்.

பக்குவப்பட்ட துறவியாகிவிட்ட பட்டினத்தடிகளுக்கு அப்பெண்ணின் மீது கோபம் வரவில்லை ! உண்மைத் துறவை உணர்த்த வந்த ஞானாம்பிகையின் வாக்கு எனக் கொண்டார். மேலும் கடினமான துறவை மேற்கொண்டார். எனவே, தாயுமானவர்,

''பாரனைத்தும் பொய்யெனவே
பட்டினத்துப் பிள்ளையைப் போல்
ஆரும் துறக்கை அரிது ! அரிது !''

என்று போற்றினார்.

செல்வத்தை விரும்பாத கணக்கர்

பட்டினத்தடிகள் துறவு பூண்டதன் பின்னர் அவருடைய செல்வம் அனைத்தும் சேந்தனாரின் நிர்வாகத்தின் கீழ் வந்தது. அவர் விரும்பியிருந்தால் அச்செல்வம் அனைத்தையும் கூட, தனதாக்கிக் கொண்டிருக்க முடியும். உழைப்பால் வரும் ஊதியத்தைக் கொண்டே வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற உயர்ந்த கொள்கையில் நின்றவர் சேந்தனார்.

பட்டினத்தாரின் நிதியறையைத் திறந்து விட்டார். ''ஊர்மக்களே ! உங்களுக்கு வேண்டியதை எடுத்துச் செல்லுங்கள்!'' என்றார். சில மணி நேரத்தில் செல்வம் அனைத்தும் தீர்ந்து நிதியறை காலியாயிற்று.

பட்டினத்தாரின் சுற்றத்தார் அதனை அறிந்து வெகுண்டனர். சோழ மன்னரிடம் சென்று முறையிட்டனர். சோழன் செல்வத்தை விரும்பாத, நேர்மையான, கணக்கரைச் சிறையில் அடைத்தான்.

பட்டினத்தடிகள் அதனை அறிந்து, சிவபெருமானிடம் முறையிட்டார். அவன் திருவருளால் சேந்தனார் சிறையிலிருந்து மீட்கப்பட்டார்.

கணக்கர் வேலை போனால் என்ன? கையில் வலிமை உள்ளது! விறகு வெட்டி, விற்று, வாழ்க்கையைத் தொடரலாம்! என்று துணிந்தார் சேந்தனார்.

தில்லையில் குடியேறினார். விறகு வெட்டி விற்றதில் கிடைத்த பொருளில், தினசரி ஒரு சிவனடியாருக்குத் திருவமுது படைத்து மகிழ்ந்தார்.

களியை உகந்த கண்ணுதற் பெருமான்

ஒரு நாள் சிவபெருமானே அடியார் உருவில் சேந்தனாரின் இல்லத்திற்கு எழுந்தருளினார். அன்று சேந்தனார், சிவபெருமானுக்குத் தன்னால் இயன்ற உணவான களியைத் திருவமுதாக அளித்தார். அதனை உண்டு மகிழ்ந்த சிவபெருமான் அக்களியைத் தனது திருமேனியில் காட்டியருளினார். அன்று முதல், களி சிவபெருமானுக்கு உகந்த நிவேதனமாக ஆயிற்று!

மார்கழி திருவாதிரை நாளில் களியே பெருமானுக்கு மிகவும் உகந்தது ! எனவே, தென் மாவட்டங்களில் பெண்கள் திருவாதிரை நோன்பு மேற்கொண்டு, இனிய களியை இறைவனுக்குப் படைத்து மகிழ்வர். அரிசி நொய்யில் வெல்லமும், நெய்யும், ஏலக்காயும் சேர்த்து செய்த களியில் தேங்காய்த் துருவலும் தூவிப் படைப்பார்கள். இல்லங்களில் பலவகையான பச்சைக் காய்கறி களையும் சேர்த்துக் கூட்டாகத் தயார் செய்வது வழக்கம். அதனைத் திருவாதிரைக் குழம்பு என்றும், திருவாதிரைக் கூட்டு என்றும் கூறுவர்.

பல்லாண்டு பாடிய பின்னணி

தில்லையில் மார்கழி மாதத்தில் திருவாதிரைத் திருவிழா மிகவும் சிறப்பாக நடை பெறும். ஒரு முறை மார்கழித் தேர்த் திருவிழா நடைபெற்றது. அப்போது, திருத்தேர் நகராமல் நின்று விட்டது. அடியார்கள் எவ்வளவு முயன்றும் திருத்தேரை இழுக்க இயலவில்லை. அனைவரும் திகைத்து நின்றனர். அப்போது, கூட்டத்தினர் இடையே ஒரு மூலையில் நின்று கொண்டிருந்த சேந்தனார்,

''மன்னுக தில்லை ! வளர்க நம்
பக்தர்கள் ! வஞ்சகர் போய்அகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள்உமைக்கோன்
அடியோமுக்கு அருள்புரிந்து
பின்னைப்பிறவி அறுக்க நெறிதந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே!''

என்று தொடங்கி, பதின்மூன்று பாடல்கள் கொண்ட திருப்பல்லாண்டுப் பதிகத்தைப் பாடி அருளினார். கூத்தப்பெருமானின் திருத்தேர் தானாகவே, திருவீதிகளில் ஓடி, நிலையை அடைந்தது. அடக்கமாகத் திருத்தொண்டு செய்து வந்த தனது அடியவராகிய சேந்தனாரின் பெருமையை இறைவன் உலகறியச்செய்தான்.

சேந்தனார் திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழி ஆகிய மூன்று திருத்தலங்கள் குறித்துத் திருவிசைப்பா பாடல்களும் பாடியுள்ளார். திருக்கோயில்களில் சுருக்கமாகத் திருமுறை விண்ணப்பிக்கும்பொழுது, 'பஞ்சபுராணம்' பாடுவார்கள். அதாவது, தேவாரத்திலிருந்து ஒரு பாடல், திருவாசகத்தில் இருந்து ஒரு பாடல், திருவிசைப்பாவிலிருந்து ஒரு பாடல், திருப்பல்லாண்டிலிருந்து ஒரு பாடல், பெரியபுராணத்திலிருந்து ஒரு பாடல் என்ற முறையில் பாடவேண்டும் என்பது மரபு.

ஒன்பதாம் திருமுறையிலிருந்து இரண்டு பாடல்கள் பாடவேண்டும் என்பதும், பதின்மூன்றே பாடல்கள் கொண்ட திருப்பல்லாண்டிலிருந்து ஒரு பாடல் பாட வேண்டும் என்பதும் இப்பதிகங்களின் உயர்வை உணர்த்துகின்றன.

கடல் கடந்த திருப்பல்லாண்டு

பாவைப் பாடல்களைப் போலவே திருப்பல்லாண்டுப் பாடல்களும் கடல் கடந்த நாடுகளில் பரவியிருந்தன. இந்தோனேஷியாவில் தொல்குடிச் செல்வந்தர்களின் வீடுகளில் திருமணக் காலத்தில் திருப்பல்லாண்டு ஓதப்படுகிறதென்று ஔவை. சு.துரைசாமிப் பிள்ளை அவர்கள் தமது, 'சைவ இலக்கிய வரலாறு' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

திருப்பல்லாண்டை இந்தோனேஷியர்கள், 'லாண்டுபாடு' என்று குறிப்பிடுவ்தாகவும், அப்பாடல்கள், மான்கடில் என்று தொடங்கு வதாகவும் கூறுகிறார். மன்னுகதில்லை! என்பதே அவ்வாறு சிதைந்து வழங்கிவருகிறது.

திருப்பல்லாண்டு குறிப்பிடும் செய்திகள்

சண்டேசுவரருக்கு சிவபெருமான் அருளிய திறத்தை, ''பாதகத்துக்குப் பரிசு வைத்த'' என்ற சொற்றொடரில் குறிப்பிட்டுள்ளார்.

உபமன்யு முனிவர் குழந்தையாக இருந்த பொழுது, பால்வேண்டி அழுதார். இறைவன் அவருக்குப் பாற்கடலையே ஈந்தான் என்று புகழுகிறார்.

பதில்

(இந்த இதழில் வாசகர்கள் தொடுத்திருந்த வினாக்களுக்குத் ''வாகீசகலாநிதி'' கி.வா.ஜ. அவர்கள் திருவாக்கிலிருந்து விடைகள் வழங்கப் பட்டுள்ளன என்பதை மிக்க மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்)

★★★ சத்தியநாராயணன், அயன்புரம்

கேள்வி : 'வக்ரதுண்டன்' என்று விநாயகப் பெருமானுக்குப் பெயர் வரக் காரணம் என்ன?

பதில் : விநாயகருடைய துதிக்கையை மூக்கு என்பது மரபு. யானைக்குத் துதிக்கையே மூக்காக இருக்கும். ''நெடுமூக்கிற் கரியுரித்தார்'' என்பது தேவாரம். ''வக்ரதுண்டன்'' என்பதற்கு வளைந்த மூக்கையுடையவன் என்பது பொருள்.

★★★ சுகுமாரன், சைதாப்பேட்டை

கேள்வி : முருகன் ஏறும் மயிலாகச் சூரபன்மன் ஆனான் என்று சொல்கிறார்களே ! அப்படியானால் அதற்கு முன்பு முருகனுக்கு வாகனம் இல்லையா?

பதில் : முருகனுக்குப் பிரணவமே மயிலாகத் திகழ்கின்றது. சூரனுடன் போர் புரியும் போது இந்திரன் மயிலாக வந்து முருகனைத் தாங்கினான். பிறகு சூரன் மயிலாக வரம் வேண்டிப் பெற்றான். அதை முருகப் பெருமான் வாகனமாக்கிக் கொண்டார்.

★★★ ஜி. கமலா, திருமுல்லைவாயல்

கேள்வி : துரியோதனனைத் ''தன் எச்சில் தான் உண்ணாத் தன்மையான்'' என்று பாரத வெண்பா நூல் குறிப்பிடுகிறது. இதற்கு விளக்கம் தருக.

பதில்: இது துரியோதனனுடைய செல்வச் சிறப்பைக் குறிப்பது. அவன்முன் வெவ்வேறு கலங்களில் வெவ்வேறு உணவுப் பண்டங்களை வைத்திருப்பார்கள். ஒருமுறை ஒரு கலத்திலிருந்து ஒரு பிடி எடுத்து உண்டு விட்டால் அக்கலத்தில் உள்ளது அவன் எச்சிலாகி விடுகிறது. ஆகவே அதை அப்படியே விட்டுவிட்டு வேறு கலத்தில் உள்ளதை எடுத்து உண்பானாம்.

★★★ தாமரை, சேலம்

கேள்வி : ''ஊரில் ஒருவனே தோழன்,
ஆரும் அற்றதே தாரம்''

என்ற பழமொழிக்கு விளக்கம் தாருங்கள்.

பதில் : பலர் நட்புடையவர்களாகத் தோன்றினாலும் உண்மையான உயிர்த்தோழன் ஒருவனே இருப்பான். தனக்கு வேறு பற்றோ உறவோ இல்லை; என்றும் தன் கணவன் ஒருவனே பற்றென்று எண்ணியிருப்பவளே நல்ல மனைவி என்பதும் இதன் பொருள் ஆகும்.

★★★ அருள், வடபழனி

கேள்வி : செங்கல்வராயன் என்ற பெயர் எந்தக் கடவுளைக் குறிப்பது. அந்தப் பெயர் வருவதற்குக் காரணம் என்ன?

பதில் : செங்கல்வம் என்பது செங்கழுநீர்மலர் ஆகும். திருத்தணிகையில் ஒரு பொய்கையில் மூன்று செங்கழுநீர் மலர்ந்ததனால் அதற்குச் செங்கல்வகிரி என்று பெயர். அங்கே எழுந்தருளியிருக்கும் முருகனுக்குச் செங்கல்வராயன் என்று திருநாமம்.

★★★ தெய்வானை, ஈரோடு

கேள்வி : சப்தகோடி மகாமந்திரம் என்கிறார்கள். அதற்கு ஏழுகோடி மந்திரங்கள் என்பது பொருளா?

பதில் : கோடி என்பது முடிவு என்ற பொருள் படுவதாகும். தென்கோடி, வடகோடி என்று சொல்வது போல ஏழு வகையாக முடியும் மந்திரங்களைச் சப்தகோடி மகாமந்திரங்கள் என்பர்.

அவை 1. நம, 2. சுவாஹா, 3. சுவதா, 4. வஷட், 5. வௌஷட், 6. ஹீம், 7. பட்

★★★ முத்துக்குமரன், திருச்சி

கேள்வி : கல்யாணச் சடங்குகளில் அம்மி மிதிக்கும் பழக்கம் எதை உணர்த்துகின்றது?

பதில் : 'அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து' என்று சேர்த்துச் சொல்லுவது வழக்கம்.

அம்மி கல்லான அகலிகையைக் குறிக்கும். அகலிகையைப் போல இராமல், அருந்ததி போல் இருக்கவேண்டும் என்று மணமகளை உணரச் செய்வதற்கே இப்பழக்கம் உள்ளதாகக் கூறுவர்.

அம்மி மிதிப்பதற்கு வேறு பொருளும் கூறப் படுகின்றது. வாழ்வில் எத்தனை இடையூறு வந்தாலும் இந்தக் கல்லைப் போல் மணமகள் உறுதியாக இருக்க வேண்டும் என்பது பொருள்.

மணமக்கள் இருவருமே தடைபல வென்று வானளவு உயர, நம் முன்னோர்கள் இப்பழக்கத்தை ஒரு சடங்காக உண்டாக்கி உள்ளதாக நாம் கொள்ளலாம்.

தாமிரபரணி நதி ஓரம் அமைந்த நவ திருப்பதிகள்

- அருள்செல்வி

வைணவச் சமயத்தார் கொண்டாடும் ஆழ்வார்களால் பாடல் பெற்ற 108 திவ்விய தேசங்களில், புண்ணிய நதியாம் தாமிரபரணி நதியோரத்தில் அமைந்துள்ள நவதிருப்பதிகள் யாவரும் காணவேண்டிய திருத்தலங்கள் ஆகும்.

திருப்பதி சென்று வந்தால் நம் வாழ்க்கையில் நல்ல திருப்பம் வரும் என்று பெரியவர்கள் குறிப்பிடுவார்கள். இந்த நவதிருப்பதி திவ்விய தேசங்களைப் பக்தியுடனே சென்று வழிபட்டு வந்தால் நம் வாழ்க்கையில் நிச்சயமாக பல முன்னேற்றங்கள் ஏற்படுவது திண்ணம்.

மேலும் இந்த நவதிருப்பதிகளும் நவகிரகங்களின் ஒவ்வொரு கிரகத்தின் ஆட்சி பெற்ற தலமாகவும் விளங்குவதால் இந்த நவதிருப்பதிகளைத் தரிசித்தால் நவகிரக தோஷங்கள் நீங்கிச் சந்தோஷங்கள்தழைப்பது உறுதி.

நவதிருப்பதிகளும் அவற்றிற்கு ஆட்சியாக உள்ள நவகிரகங்களும் பின்வருமாறு:

1. ஸ்ரீவைகுண்டம் - சூரியன்
2. திருவரகுண மங்கை - சந்திரன்
3. திருக்கோளூர் - செவ்வாய்
4. திருப்புளியங்குடி - புதன்
5. ஆழ்வார் திருநகரி - வியாழன்
6. தென் திருப்பேரை - சுக்கிரன்
7. தொலைவில்லி மங்கலம் ராகு (வடக்குக் கோயில்)
8. தொலைவில்லி மங்கலம் கேது (தெற்குக் கோயில்)
9. பெருங்குளம் - சனி

நவ திருப்பதியில் முதற்தலமும், பூலோக வைகுந்தமான ஸ்ரீவைகுண்டத்திற்குத் திருநெல்வேலியிலிருந்து ஏராளமான பேருந்துகள் உள்ளன. ஒரு மணி நேரப் பேருந்துப் பயணத்தில் ஸ்ரீவைகுண்டத்தை அடையலாம்.

புண்ணியநதியாம் தாமிரபரணியின் வடகரையில் புதுப்பொலிவுடன் திகழும் இப்பழமை வாய்ந்த கோயிலின் கலைநயமும், சிற்ப வேலைப்பாடுகளும் நம் கண்களையும், கருத்தையும் வெகுவாகக் கவரும்.

மலைபோல் வரும் துன்பம் யாவும், பார்த்ததும் பனியாக உருகிவிடும் என்று கூறும் வகையில் மூலவர் ஸ்ரீவைகுண்டநாதர் அருள்பாலிக்கிறார். தாயார் ஸ்ரீவைகுந்த வல்லியும்,, ஸ்ரீசோரநாயகியும் தனிச் சன்னதியில் அமர்ந்து அருள்பாலிக்கின்றனர்.

சோமுகாசூரன் என்ற அரக்கன் பிரம்மாவிடமிருந்து நான்மறைகளை அபகரித்துச் சென்றபடியால், பிரம்மாவால் படைப்புத் தொழிலைச் செய்ய முடியவில்லை.

பிரம்மா புண்ணிய நதியாம் தாமிரபரணி நதிக்கரையில் கடுந்தவம் செய்தார். ஸ்ரீ விஷ்ணு வைகுண்டத்திலிருந்து கருடன் மீது அமர்ந்து பறந்து வந்து காட்சி தந்தார். பிரம்மனுக்கு அருள் புரிந்து கோமுகாசூரன் அபகரித்துச் சென்ற நான்மறைகளை மீட்டுத் தந்தார். ஆகவே தாமிரபரணி நதிக்கரையில் ஸ்ரீவிஷ்ணுவிற்கு ஆலயம் அமைத்து அவருக்கு வைகுண்டநாதர் எனத் திருநாமம் சூட்டி வழிபட்டான் பிரம்மா என இத்தலபுராணம் கூறுகின்றது.

உற்சவருக்குக் கள்ளபிரான் எனப் பெயர் வந்த வரலாறும் இத்தலபுராணத்தில் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ வைகுண்டத்திற்கு அருகில் உள்ள காட்டில் காலதூஷகன் என்னும் கள்வர் தலைவன் இருந்தான். அவன் தந்தை சோமுகன் என்னும் முனிவர்.

முன்னைவினைப் பயனால் முனிவர் மகன் திருடனாக மாறிவிட்டான். எனினும் அத்திருடன் திருட்டுத் தொழிலிலும் ஒரு நியாயம் வைத்திருந்தான்.

அறம் செய்யாத தீய செல்வந்தர்களிடமே திருடுவது அவன் வழக்கம். திருடப் போகும் முன்பு ஸ்ரீவைகுண்டப் பெருமாளை வணங்கி நான் திருடும் பொருளில் பாதியை உமக்குத் தந்து விடுகிறேன். மீதி உள்ளதில் என் திருட்டுக் கூட்டத்திற்குக் கொடுத்தது போக மீதம் உள்ளதை ஏழை எளிய மக்களுக்குக் கொடுத்து உதவுவேன் என்று உறுதி கூறி அவ்விதமே திருடனாயினும், அதிலும் ஒரு நீதிமானாகவே வாழ்ந்து வந்துள்ளான் காலதூஷன்.

அவன் காலத்தில் ஸ்ரீவைகுண்டத்தை ஆண்ட மன்னனே அறம் தவறிய அநீதியாளனாக

இருந்துள்ளான். ஆகவே அரண்மனையிலேயே காலதூஷகன் கன்னம் வைத்துத் திருடினான்.

திருடிக் கொண்டு பொன்பொருளுடன் காலதூஷகன் வெளியேறும் போது காவலர்கள் பார்த்துவிட்டானர்.

காலதூஷகனை விரட்டிக் கொண்டு வந்தனர்.

காலதூஷகன் பெருமாளின் திருக் கோயிலுக்குள் நுழைந்து ஸ்ரீவைகுண்டநாதருக்கு உரிய பாதிப் பொருளை உண்டியலில் போட்டு வணங்கி நின்றான்.

விரட்டி வந்த காவலர்கள் காலதூஷகனைப் பிடித்துச் சென்று அரசன் முன் நிறுத்தினார்கள்.

என்னே விந்தை!

அரசனின் கண்ணுக்குக் காலதூஷகன் மேனி ஸ்ரீவைகுண்டநாதராகக் காட்சி அளித்தது.

''தெய்வபுருஷனாகக் காட்சி வழங்கும் நீயா என் அரண்மனையில் வந்து களவாடினாய்?'' என்று அரசன் கேட்டான்.

''மன்னா! நீதருமம் தவறி ஆட்சி செய்தாய். ஆகவே அதர்மத்தால் வரும் பொருள் தீயாலும், கள்வராலும் அழிந்து போகும் என்பதை உனக்கு உணர்த்தவே உன்னிடம் களவாட காலதூஷகனை அனுப்பிவைத்தேன்''

இவ்வாறு காலதூஷகன் மேனியில் ஸ்ரீவைகுண்டநாதராகக் காட்சியளித்து இறைவனே வாக்குமூலம் அளித்ததால் அரசன் திருந்தினான். இறைவனிடம் மன்னிப்பைக் கோரி அறநெறியில் ஆட்சி செய்யலானான்.

இவ்வாறு கள்ளனாக வந்து அரசனுக்கு அறம் உரைத்த இறைவனுக்கு ஸ்ரீகள்ளபிரான் என்பது திருநாமமாக இத்தலத்தில் அமைந்து விளங்குகின்றது.

இவ்வாலயத்தில் வைகுண்ட ஏகாதசி அன்று பரமபத வாசல் மாலை 6 மணி அளவில் திறக்கப் படுவது விசேஷமாகும்.

இத்தகைய மகிமைமிக்க ஸ்ரீவைகுண்டம் திவ்விய தேசத்திலிருந்து மூன்று கி.மீ. தொலைவில் அமைந்திருப்பது இயற்கை எழில் கொஞ்சும் திருவரகுணமங்கை திருத்தலமாகும்.

இத்திருத்தலத்தில் ஆதிசேடன் அழகாய்க் குடைப்பிடிக்க மூலவர் ஸ்ரீவிஜயாசனப் பெருமாள் அற்புதமாய் கிழக்கு நோக்கி வீற்றிருக்கிறார்.

தாயார் வரகுணவல்லித் தாயார், வரகுண மங்கைத்தாயார் என திருநாமம் கொண்டுள்ளார்.

திருமாலின் அறிவுரைப்படி வேதவி என்னும்

நூல் மதிப்புரை



நூல்பெயர்: நல்லாற்றூர் - துறைமங்கலம்
கற்பனைக்களஞ்சியம்
ஸ்ரீசிவப்பிரகாசசுவாமிகள்
செந்தமிழ் நூல்கள்
முதல் தொகுதி மற்றும் இரண்டாம் தொகுதி

வெளியீடு: பதிப்பாசிரியர்
குமாரசிவ இராஜேந்திரன், பி.காம்., பி.எல்.
மயிலம் திருமடம்,
மயிலம் 604304

விலை: இருதொகுதிகள் இணைந்து ரூ.450

பக்கங்கள்: 1536 (மொத்தம் 30 நூல்கள்)

கி.பி. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த ஒப்பற்ற அருட்கவிஞர், கற்பனைக் களஞ்சியம் ஸ்ரீசிவப்பிரகாசசுவாமிகள்; மயிலம் - பொம்மபுரம் மடத்தின் முதன்மைச்சீடர்.

சிவபெருமானிடம் அவர் மதுரத்தமிழ்ப் பாடும் பிறவியே வேண்டும் என வேண்டியுள்ளமை அவர்தம் தமிழ்ப்பற்றை நன்குணர்த்தும்.

''மதுரம் பெருகுறு தமிழ்ச்சொல்
மலர்நினக்கு அணியும்
பிறவியே வேண்டுவன் தமியேன்''

என்பது அவர் திருவாக்கு.

அவர் இறையருளால் அருளிச்செய்த 30 அருள்நூல்களை இரு தொகுதிகளாக 1536 பக்கங்களில் மிக அருமையாகப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார் மயிலம் திருமடத்தின் இளவரசு குமாரசிவ இராசேந்திரன், பி.காம்., பி.எல். அவர்கள்.

தமிழையும், வீரசைவத்தையும் குருவழி உணர்ந்து இருகண்களாகக் கொண்ட ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாசசுவாமிகளின் ஞானநூல்கள் ஒவ்வொருவர் இல்லத்திலும், உள்ளத்திலும் இருக்க வேண்டிய அருள் நூல்கள் ஆகும்.

மெய்யன்பர்கள் யாவரும் இந்நூல்களைப் பயின்று பவப்பிணி அகன்று, பேரின்ப வீடு பெற்று இன்புறுமாறு அன்பினில் வேண்டப்படுகின்றது.

முனிவர் இந்த வரகுணமங்கை திருத்தலத்தில் தவமிருந்து பரமபதம் அடைந்ததாகத் தலவரலாறு கூறுகின்றது.

விஜயம் தரும் (வெற்றிதரும்) ஆசன மந்திரம் ஜெபித்த வேதவி முனிவருக்குத் திருமால் வைகுந்தம் அளித்த தலம் ஆதலால் விஜயாசனர் என்ற திருநாமம் இறைவருக்கு உண்டாயிற்று.

இத்திருத்தலத்தில் பாவிகள் இறந்தாலும் நரகம் அடையாமல் வைகுந்தமே அடைவர் என்பதை இத்தலவரலாறு விவரிக்கின்றது.

வேடன் ஒருவன் இங்குள்ள நீர்நிலை ஒன்றில் ஏராளமான மீன்களைப் பிடித்தான். மீன்களுக்கு எமனாக வாழ்ந்த அவ்வேடன் கொடிய பாம்பு கடித்து உயிர் துறந்த போது அவனது உயிரைக் கந்தர்வர்கள் தேவலோக விமானத்தில வந்து அழைத்துச் சென்றனர்.

ரோமசமுனிவரின் சீடர் ''அந்தப் பாவியான வேடன் பரமபதம் அழைத்துச் செல்லப்படுவதற்கு என்ன காரணம்?'' என்று கேட்க ரோமசமுனிவரும் ''இது இத்தலத்தின் மகிமை. இங்கு எத்தகைய பாவியின் உயிர் பிரியப் பெற்றாலும் அவ்வுயிர் பாவம் நீங்கி நற்கதி பெறும்'' என்று தெரிவித்துள்ளார்.

இனி நவதிருப்பதிகளில் மூன்றாவது இடத்தைப் பெறும் திருக்கோளூர் செல்லலாம். திருவைகுண்டம் - திருச்செந்தூர் சாலையில் ஆழ்வார் திருநகரிக்குக் கிழக்கே உள்ள பால்குளம் என்ற சிற்றூருக்குத் தெற்கேதான் திருக்கோளூர் திருத்தலம் உள்ளது.

பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான மதுரகவி ஆழ்வார் அவதரித்த திருத்தலம் இது.

திருக்கோளூர் திருத்தலத்தில் மூலவராக நித்ய பவித்திரப் பெருமாளும், தாயாராக கோளூர்வல்லி, குமுதவல்லியும் அருள் பாலிக்கின்றனர்.

இத்திருத்தலத்தில் உற்சவர் ஸ்ரீவைத்த மாநிதிப் பெருமாள் என அழைக்கப்படுகின்றார்.

நிதிக் கடவுளான குபேரர் ஒருமுறை சிவபெருமானைத் தரிசிக்க சென்றபோது ஏகாந்தமாக சிவபெருமானும், பார்வதிதேவியும் தனித்திருக்கும் வேளையில் அனுமதியின்றிச் சென்றுவிட்டார்.

இதனால் பார்வதி தேவியார் கோபம் கொண்டு சபித்தபடியால் குபேரனை விட்டு நவ நிதிகளும் அகன்று விட்டன. அவருடைய உருவமும் விகாரமாய், ஒரு கண்ணையும் இழந்தார்.

நவநிதிகளும் திருக்கோளூர் பெருமாளை அடைக்கலம் அடைந்தபடியால் இவருக்கு வைத்த மாநிதிப் பெருமாள் எனத் திருநாமம் உண்டானது.

வாசகர் எண்ணங்கள்

நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறநிலையத்துறையில் பொற்காலச் சாதனைகள் நித்தமும் புரிந்து வருவதைத் ''திருக்கோயில்'' இதழ் உள்ளங்கை நெல்லிக்கனி போல் எடுத்துக் காட்டி வருகின்றது. ''திருக்கோயில்'' இதழைச் சீரிய முறையில் வெளியிட்டு வரும் அறநிலையத் துறை ஆணையாளர் அவர்களுக்குப் புத்தாண்டில் வாழ்த்துக்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். ''வாழ்க திருக்கோயில்''! வெல்க அறநிலையத் துறையின் சீரிய பணிகள்!!

- தெய்வத் தமிழ் மன்றம், சென்னை - 600 021.

அன்புடையீர்!

வணக்கம். திருக்கோயில் டிசம்பர் இதழ் கண்டேன். திருவண்ணாமலையைக் குறித்த கட்டுரைகள் மிக அருமை.

''எழுத்துச் சித்தர்'' பாலகுமாரன், திருப்புகழ் மாமணி மு. அருணகிரி, டாக்டர் டி. செல்வராஜ் ஆகியோரின் கட்டுரைகள் சிந்தனைக்கு விருந்து.

''மகாபாரதம்'' தொடர் படித்துப் பயன் பெறத்தக்க அழகிய காவியம்.

''திருமந்திரச் செல்வர்'' டி,வி. வெங்கட்ட ராமன் அவர்களின் ''திருமந்திர உபதேசம்'' திருமந்திரத்தின் அருமை பெருமைகளைப் பறைசாற்றும் பயனுள்ள தொடர்.

மொத்தத்தில் ஆன்மீகச் சிறப்பினை எடுத்துக் காட்டும் பயனுள்ள படைப்புகளின் தொகுப்பாகத் திகழ்கின்றது ''திருக்கோயில்'' என்றால் மிகையாகாது.

- 'எழுத்துச்செம்மல்' பி.வி.கிரி

குபேரனும் தன் தவறுணர்ந்து தவம் புரிந்து வைத்த மாநிதிப் பெருமாளை வணங்க ''உன் தனம் யாவும் உன்னிடம் வராது. அதில் நடுபாகம் தான் உனக்குத் தருவோம்'' என்று வைத்த மாநிதிப் பெருமாள் திருவருள் புரிந்ததாகத் தலவரலாறு கூறுகின்றது.

இத்திவ்விய தேசத்தில் நவநிதிகள் நீராடிய நிதி தீர்த்தமும், குபேரன் நீராடிய குபேர தீர்த்தமும் உள்ளன.

இத்தீர்த்தங்களில் நீராடிப் பெருமாளை வழிபடும் அன்பர்கள் பெருஞ்செல்வத்திற்கு அதிபதியாக சுகவாழ்வு பெறுவார்கள் எனத் தலவரலாறு கூறுகின்றது.

(தொடரும்)

தாமிரபரணி நதி ஓரம் அமைந்த நவ கயிலாயங்கள்

- நிறைமதி, பி.எல்.,

அகத்திய முனிவரின் முக்கிய சீடர் உரோமசமுனிவர்.

சிவபெருமானின் திருக்காட்சி பெற்று அவர் திருவடிப் பதம் பெறவேண்டும் என்பது அவர் பேரவா.

''குருநாதரே ! எம் ஆவல் நிறைவேற வழி காட்டியருள வேண்டும்'' என்று அகத்தியரிடம் வேண்டுகோள் விடுத்தார் உரோமசமுனிவர்.

''அன்பனே ! உன் ஆவல் நிறைவேற வழி கூறுவோம். கங்கையை விட அதிகப் புண்ணியம் தாமிரபரணிக்கு உண்டு.

தாமிரபரணி நதிக்கரையில் ஒன்பது சிவாலயங்கள் நவ கயிலாயங்களாகத் திகழும் பெருமை பெற்றன.

அங்கெல்லாம் தாமிரபரணியில் நீராடி, சிவபெருமானை மனமுருக வேண்டி வழிபடு.

நீ செல்கின்ற பாதையில் உனக்கு வழிகாட்டுவதற்கு ஆற்றில் ஒன்பது மலர்களை மிதக்கவிடுகிறேன்.

ஒன்பது மலர்களும் ஒவ்வொரு இடத்தில் போய் நிற்கும். அந்த இடங்களில் எல்லாம் நீராடிச் சிவபெருமானை வழிபடு.

நவ கயிலாயங்களாகத் திகழும் அத்திருத்தலத்து எழுந்தருளியுள்ள எல்லாம் வல்ல சிவபெருமானின் திருவருளால், சிவபெருமானின் அருள்கிடைத்து முக்தி பெறலாம்'' எனத் திருவருள் புரிந்தார் அகத்தியர்.

அகத்தியர் ஆற்றில் மிதக்கவிட்ட ஒன்பது மலர்களும் ஒவ்வொரு ஊரின் கரையோரத்தில் ஒதுங்கியது.

அங்கெல்லாம் உரோமசமுனிவர் நீராடிச் சிவபெருமானை வழிபட்டார்.

அவர் வழிபட்ட இடங்களில் எல்லாம் சிவபெருமானுக்குத் தனித்தனி கோயில்கள் அமைந்து சிறப்புற்றன.

அச்சிவாலயங்களே நவகயிலாயங்கள் எனப் போற்றப்படுகின்றன.

உரோமசமுனிவர் வழிபட்ட ஒன்பது சிவாலயங்களும் நவகிரங்களின் ஆட்சி பெற்று அருள்புரியும் நவகயிலாயங்களாகத் திகழ்கின்றன.

உரோமசமுனிவர் வழிபட்ட தாமிரபரணி நதிக்கரையில் அமைந்து விளங்கும் நவகயிலாயங்களும் அவற்றில் ஆட்சி பெற்று அருள் புரியும் நவகிரகங்களும் பின்வருமாறு :

1. பாவநாசம் - சூரியன்
2. சேரன்மகாதேவி - திங்கள்
3. கோடகநல்லூர் - செவ்வாய்
4. குன்னத்தூர் - ராகு
5. முறப்பநாடு - வியாழன்
6. ஸ்ரீவைகுண்டம் - சனி
7. தென்திருப்பேரை - புதன்
8. ராஜபதி - கேது
9. சேர்ந்தபூமங்கலம் - வெள்ளி

இதில் முதல் மூன்று கயிலாயங்கள் ஆன 1. பாபநாசம் 2. சேரன் மகாதேவி 3. கோடகநல்லூர் ஆகிய மூன்று தலங்களும் மேலைக் கயிலாயங்கள் எனச்சிறப்பிக்கப்படுகின்றன.

அடுத்த மூன்று கயிலாயங்களான 4. குன்னத்தூர் 5. முறப்பநாடு 6. வைகுண்டம் ஆகிய மூன்று தலங்களும் நடுக்கயிலாயங்கள் என்று சிறப்பிக்கப்படுகின்றன.

அடுத்த மூன்று கயிலாயங்களான 7. தென் திருப்பேரை8. ராஜபதி 9. சேர்ந்த பூமங்கலம் ஆகிய மூன்று தலங்களும் கீழ்க் கயிலாயங்கள் என அழைக்கப்படுகின்றன.

இந்த ஒன்பது தலங்களும் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் அமைந்துள்ள படியால் திருநெல்வேலியில் ஒருநாள் அல்லது இரு நாட்கள் தங்கும் அன்பர்கள் இந்த ஒன்பது நவ கயிலாயங்களையும் அகத்தியர் கூறிய முறைப்படி

கல்லிடுங்குன்று

அரக்கி மஹிசியை வதைப்பதற்காகவே ஸ்ரீஐயப்பன் அவதாரம் நிகழ்ந்தது.

புலிப்பால் கொண்டுவரச் சென்ற ஐயப்ப சுவாமி எதிர்ப்பட்ட மஹிசியை வதைத்து அருள்புரிந்தார்.

தரையில் மலைபோல் கிடந்த மஹிசியின் உடலை தேவர்கள் கற்கள் போட்டு மறைத்தார்கள்.

இந்த இடமே கல்லிடுங்குன்று. பெரிய பாதை வழியாக சபரிமலை செல்லும் ஐயப்ப சுவாமிகள் இன்றும் கல்லிடுங்குன்றில் கல்இடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்கள்.

உரோமசமுனிவர் வழிபட்டுப் பயன் பெற்றதைப் போல் வழிபட்டு சிவனருளும், அவர்தம் திருவடிப் பேறும் பெற்று உய்யலாம்.

மேலைக் கயிலாயத்தில் முதலாவதாக உள்ள திருத்தலம் பாவநாசம்.

அறிந்தும் அறியாமலும், தெரிந்தும் தெரியாமலும் நாம் செய்த பாவங்களை எல்லாம் போக்கும் புண்ணியம் மிக்க திருத்தலம் என்பதாலேயே பாபநாசம் என்ற பெயர் கொண்டு விளங்குகின்றது இத்திருத்தலம்.

பொதிகை மலையில் தோன்றும் தாமிரபரணி ஆறு, சமவெளியை அடையும் இடமே பாபநாசம். அகத்திய முனிவர் தங்கித் தவம் புரிந்த இடம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

சிவபெருமான் பார்வதியை மணந்த திருக் கயிலாயத் திருக்காட்சியை அகத்தியர் தரிசித்து மகிழ்ந்த அற்புதத் திருத்தலமாகும் பாபநாசத் திருத்தலம்.

இத்திருத்தலத்தைத் தரிசிப்போர்க்குப் பாவங்கள் நாசம் ஆகும். எண்ணிய யாவும் எளிதில் கைகூடும்.

சேரமன்னன் தன் மகளான மகாதேவியின் பெயரைச் சூட்டிய படியால் சேரன்மகாதேவி எனப் பெயர் பெற்றுத் திகழும் தலம் நவகயிலாயங்களில் இரண்டாவது தலமாகத் திகழ்கின்றது.

நெற்குத்தும் தொழில் செய்து வந்த இரண்டு சகோதரிகள் சிவபெருமானின் திருக்கோயிலைச் சீர்படுத்திக் கட்டித்தர ஆசைப்பட்டார்கள்.

அவர்கள் ஆவலுக்கேற்ப பணமோ சேரவில்லை. ''இறைவா ! உன் கருணை நோக்கம் அமையாதா?'' என்று நாளும் கைகூப்பி வழிபட்டு வந்தனர் அச்சகோதரிகள்.

ஒருநாள் மாலைநேரம் அந்தணர் ஒருவர் அச்சகோதரிகளின் வீட்டிற்கு வந்தார்.

அவ்வந்தணருக்குப் பசியாற உணவு பரிமாறினர் அச்சகோதரிகள்.

அந்தணர் உருவில் வந்தது வேறு யாருமில்லை. சாட்சாத் சிவபெருமானரேதாம். அவர் சாப்பிட்டு அச்சகோதரிகளை வாழ்த்தி விட்டுச் சென்றார்.

அன்றிலிருந்து சகோதரிகளுக்குச் செல்வம் பெருகியது.

சகோதரிகள் இணைந்து சேரன் மகாதேவி கோயிலின் மூலஸ்தானத்தைக் கட்டினர்.

இதற்குச் சான்றாக இக்கோயிலில் உள்ள தூணில் இரண்டு சகோதரிகள் நெல்குத்துவதாய் அமைந்துள்ள சிற்பத்தை இன்றும் பக்தர்கள் கண்டு மகிழலாம்.

இத்தகைய மகிமை மிக்க அருள்மிகு ஆவுடைநாயகி உடனுறை ஸ்ரீ அம்மநாத சுவாமியைச் சேரன் மகாதேவியில் கண்டு வழிபட்டு இன்புறலாம்.

நவகயிலாயங்களில் மூன்றாம் இடத்தைப் பெறுவது கார்கோடக க்ஷேத்திரம் என வழங்கப் படும் கோடகநல்லூர் திருத்தலம் ஆகும்.

பரிசித்து மகாராஜாவையும் நளனையும் தீண்டிய கார்க்கோடகன் பாம்பு வழிபட்டு முத்தி பெற்ற திருத்தலம் ஆதலால் இத்திருத்தலம் கோடகநல்லூர் என வழங்கப்படுகின்றது.

அருள்மிகு சிவகாமியம்மன் உடனுறை ஸ்ரீ கைலாசநாதரை இத்திருத்தலத்தில் வழிபட்டுப் பயன்பெறலாம்.

நவகயிலாயங்களில் நான்காவது கயிலாயமான குன்னத்தூரிலும் எழுந்தருளி யுள்ளவர் அருள்மிகு சிவகாமியம்மன் உடனுறை ஸ்ரீ கைலாசநாதரே ஆவார்.

காலசர்ப்பதோஷம், நாக தோஷம் நீங்கப்

பக்தர்கள் பலரும் இத்திருத்தலத்து இறைவரையே வழிபட்டுப் பயன் பெற்று வருகிறார்கள்.

நவகயிலாயத்தில் ஐந்தாவது முறப்பநாடு ஆகும். சூரபதுமனாகிய அரக்கனின் தொல்லை தாங்க முடியாமல் முனிவர்கள் வழிபட்டு முறையிட்ட இடம் இது என்பதால் முறைப்பாடு என வழங்கி முறப்பநாடு என மருவியதாகத் தலவரலாறு குறிப்பிடுகின்றது.

கிழக்கு நோக்கி ஓடிவரும் தாமிரபரணி ஆறு இங்கு திரும்பி வடக்காக ஓடிப் பின் தெற்கு நோக்கி ஓடுவதால் தட்சிணகங்கை என அழைக்கப்படுகின்றது. காசியிலும் கங்கை இவ்வாறாகத் திசைதிரும்பி ஓடும்.

இந்தத் தட்சிணக் கங்கையில் நீராடினால் காசியில் கங்கையில் நீராடிய பலன் பெறலாம்.

ஒரே கல்லில் செதுக்கப்பட்ட மகா விஷ்ணுவின் பத்து அவதாரங்கள் கொண்ட தசாவதாரத் தீர்த்தக் கட்டமும் இங்கு அமைந்திருப்பது ஒரு விசேடமாகும்.

நவகயிலாயங்களில் ஆறாவதாகத் திகழ்வது ஸ்ரீவைகுண்டம். நவதிருப்பதியில் முதலாவது தலமான ஸ்ரீவைகுண்டம், நவகயிலாயங்களிலும் ஆறாவதாகத் திகழும் சிறப்பினைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

பூலோக வைகுண்டமும் இதுவே. பூலோகக் கயிலாயமும் இதுவே என இத்திருத்தலத்தில் பிறந்தவரான ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் கயிலைக்கலம்பகத்தில் பாடியுள்ள அற்புத தலமாகும் இது.

நவதிருப்பதியில் ஒன்றான தென் திருப்பேரை நவகயிலாயங்களிலும் ஒன்றாகத் திகழ்வது நாம் உணர்ந்து மகிழ வேண்டிய ஒன்று.

இங்கு அண்மைக் காலத்தில் நடைபெற்ற ஒரு அதிசய நிகழ்ச்சி குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஆங்கிலேயக் கலெக்டர் கேப்டன் துரை அரசுப் பணியாகத் தென் திருப்பேரை வந்தவர் இங்குள்ள ஒரு சாவடியில் தங்கியுள்ளார்.

மதியவேளை, எதிரே தெரிந்தது ஒரு தென்னந்தோப்பு. தன் சேவகரை அழைத்து அந்தத் தோப்பிலிருந்து இளநீரைக் கொண்டு வா எனக் கூறியுள்ளார்.

கலெக்டருடைய சேவகனும் தோப்பிற்குச் சென்று தோப்புக் காவலாளியிடம் இளநீரைப் பறித்துப் போடு என்று மிரட்டியுள்ளான். தோப்புக் காவலாளி ''இது சுவாமி கைலாசநாதர் அபிஷேகத்திற்குப் பயன்படுத்தக்கூடிய இளநீர். இதைப் பறிக்கக் கூடாது'' என்று மறுத்து விட்டான்.

இதையறிந்த கலெக்டர் கேப்டன்துரை கோபத்துடன் நேரே தோப்பிற்கே வந்து ''கோயில் தோப்பு இளநீருக்கு என்ன கொம்பா முளைத்திருக்கிறது? சும்மாபறித்துப் போடு'' என்று அதிகாரம் செய்ய மறுக்க முடியாத தோப்புக் காவலாளி இளநீர் காயைப் பறித்துக் கீழே போட்டுள்ளான்.

என்ன விந்தை? இளநீரில் மூன்று கொம்பு முளைத்திருந்தது. அதைக் கண்டு பயந்து போன கலெக்டர் கேப்டன் துரை பயந்து சுவாமி கோயிலுக்குச் சென்று மன்னிப்புக் கேட்டு வணங்கிச் சென்றுள்ளார்.

மேலும் கோயிலின் மகிமை அறிந்து நித்திய பூசைக்காக மானியமும் வழங்கியுள்ளார்.

அந்தக் கொம்பு முளைத்த தேங்காய் இன்றும் அம்மன் சன்னதியில் தொங்க விடப்பட்டு உள்ளது.

பொது மக்கள் தொட்டுத் தொட்டுப் பார்த்து இப்போது அந்தத் தேங்காயில் ஒரு கொம்பு மட்டுமே உள்ளது.

நவகயிலாயங்களில் எட்டாவது இடத்தைப் பெறுவது இராஜபதித்தலமாகும்.

இங்குச் சிறப்புற்றிருந்த கோயில் இயற்கைச் சீற்றத்தில் அழிந்து விட்டபடியால் கோயிலின் முன்பு கைலாசநாதர் வீற்றிருந்த இடத்தில் அடையாளமாக ஒரு கல் மட்டுமே இருந்து வருகின்றது.

இங்குச் சிறந்த முறையில் ஆலயம் அமைக்கப் பக்தர்கள் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

அகத்திய முனிவர் தாமிரபரணியில் மிதக்கவிட்ட ஒன்பது மலர்களில் எட்டாவது மலர் நின்ற இடம் இராஜபதி என்பதால், கோயில் இல்லா விட்டாலும் இராஜபதிக் கோயில் இருந்த திசைநோக்கி மக்கள் கும்பிட்டு வருவது இத்திருத்தலத்தின் பெருமையை நமக்கு இன்றும் அறிவிப்பதாகவே உள்ளது.

நவகயிலாயத்தில் ஒன்பதாவதாகத் திகழ்வது சேர்ந்த பூமங்கலம்.

தாமிரபரணி ஆறும், கடலும் சங்கமிக்கும் இடத்தில் இத்தலம் அமைந்து விளங்குகின்றது.

வாழ்வில் சுக்கிரயோகம் பெற விழைவோர் இத்திருத்தலத்தில் கோயில் கொண்டுள்ள அருள்மிகு சிவகாமியம்மன் உடனுறை கைலாசநாதரை வழிபாடு செய்ய வேண்டுவது அவசியமாகும்.

நவகைலாயங்களும் வழிபட நம் வாழ்வில் அனைத்துச் சுபிட்சங்களும் கைகூடுவது திண்ணமாகும்.

சிவபெருமானார் கொண்டுள்ள வீணை

சிவபெருமானார் வீணைக்கு நாலம்பீ என்பது பெயர்.

நாரதரின் வீணைக்கு மஹதி என்பது பெயர்.

சரஸ்வதி தேவியின் வீணைக்குக் கச்சபீ என்பது பெயர்.

மகாபாரதம்

முனைவர் த.அமிர்தலிங்கம்

21

பாரதப் போரில் முதல்நாள் போரில் பாண்டவர்களின் தானைத் தளபதியான சுவேதனும், அவன் உடன் பிறந்த தம்பி உத்தரனும் இறந்துபட, பாண்டவர்கள்

மிகுந்த துயரத்திற்கு ஆளாகிறார்கள். மக்கள் இருவரை ஒரே நாளில் பறிகொடுத்த மச்சநாட்டு மன்னன் விராடனின் துன்பமும் அளவிட முடியாததாக உள்ளது. கண்ணபெருமானும், பாண்டவர்களும் பாண்டவர் அணியைச் சார்ந்த மற்ற பிற மன்னர்களும் விராடனுக்கு ஆறுதல் கூறுகிறார்கள்.

''வஞ்சகத்ததால் அல்லவா சுவேதனை வீடுமர் கொன்று விட்டார். வீடுமருக்கு அது பெரும் பழி, சுவேதனுக்கு அதுவே பெரும் புகழ், வீரமரணம் அடைந்த சுவேதனும் உத்தரனும் விண்ணவர்க்கு விருந்தினர் ஆகும் சிறப்புப் பெற்றமையை எண்ணி நாம் ஆறுதல் அடைய வேண்டுமே அன்றித் துயரம் கொள்ளலாகாது'' என்று விராடனைத் தேற்றுகிறார் கண்ணபெருமான்.

அப்பொழுது தருமரும் விராடனை அணைத்து அவன் கண்ணீரைத் துடைத்து ஆறுதலைக் கூறுகிறார்.

''காடுகளில் பேய்களைப் போல அரசினை இழந்து அலைந்து கொண்டிருந்த எங்களுக்குத் தாயைப் போல அன்பு காட்டி ஆதரவு அளித்தாய். உன்னுடைய மக்கள் இருவரையும் இன்று எங்களுக்காகவே போரில் பலிகொடுத்து விட்டாய். உன்னுடைய வீர மைந்தர்கள் தேவர்களின் வணக்கத்திற்குரியவர்கள் ஆகிவிட்டார்கள். நீஎங்களுக்குச் செய்திருக்கும் பேருதவிக்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்யப் போகிறோம்?'' என்று தருமர் கூறி விராடனைத் தேற்ற, மக்கள் இருவரைப் பறிகொடுத்த விராடன், அந்தச் சோகத்திலும், பாண்டவர்களுக்குக் கூறும் உறுதிமொழி நாம் எண்ணிப் பாராட்டத்தக்கதாய் இருப்பது குறிப்பிடத்தக்கது.

''உன்னுயிர்போல் நீவளர்த்த உத்தரன்
தன்னுயிரும்,
உருத்தெழும்சுவேதன் தன்னுயிரும் பேரரசர்
தாமிருந்து
கொண்டாடச் சமரிலீந்தார்
என்னுயிரும் நினதன்றி யாரது இனி?
சதுர்முகத்தோன் ஈன்றபாரின்
மன்னுயிர்க்கு உயிரனையாய் என
வுரைத்தான் வளமலிசீர்
மச்சர்கோமான்''

(முதற்போர்ச்சருக்கம், 87)

''பிரமதேவனால் படைக்கப்பட்ட அனைத்துயிர்களுக்கும் உயிரைப் போன்ற தருமரே! உம் உயிரைப் போல உம்மால் பாசம் காட்டி வளர்க்கப்பட்ட உத்தரனும், போரென்றால் பொங்கியெழக் கூடிய சுவேதனும், உமக்காக உயிர் கொடுத்துப் புகழ் கொண்டு விட்டார்கள். இனி எஞ்சியிருக்கக் கூடிய என்னுயிரும் உமக்கே உரியது. அதனையும் உம் பொருட்டே ஈவதல்லால் வேறென்ன செய்யப்போகிறேன் நான்?'' என்று

கூறிப் புகழின் உச்சிக்கே விராடன் 'போய்விடுவதைப் பார்த்து நாமும் புளகாங்கிதம் அடைகிறோம்.

நம்முடைய பாரதபூமி பழம்பெரும் பூமி; வீரமும் ஈரமும் இம்மண்ணோடு பிறந்த பெருமை உடையவை. உலக சமாதானத்திற்கு உயிர் உண்டாகுமானால் அது இந்த மண்ணிலேதான் உருவாகும். உலுத்தவர்கள் சிலர் இரத்த வெறி பிடித்துப் போருக்குச்சிந்து பாடுவார்களே யானால், அவர்களின் தலைக்கனம் தீர வீரத்தின் இலக்கணம் உரைக்கப்படுமானால் அதுவும் இந்த மண்ணிலே தான் உருவாகும். அப்படிப்பட்ட ஆண்மை பூமியே இந்த ஞான பூமி. முறத்தால் புலியை விரட்டிய வீரப் பெண்கள் அறத்தோடு மறம்காத்த அற்புத சரித்திரங்கள் ஒன்றல்ல ஓராயிரம் இம்மண்ணுக்கே உரியவை.

தமிழ்ச்சங்கம் தழைத்திருந்த நம் தமிழகத்தில் தோன்றி வாழ்ந்திருந்த ஒரு தமிழ் நங்கை முன்னாளில் நடைபெற்ற போரொன்றில் முகம் மலர்ந்து தன்னை ஈன்ற தந்தையை முதல் நாள் போரில் பலிகொடுத்தாள். தன்னுடன் பிறந்த சகோதரனையும் பலிகொடுத்தாள் மறுநாள் போரில், மூன்றாம் நாள் போரில் அவளுடைய அங்கம் தழுவிய ஆண்மைக் கணவனையும் பலி கொடுத்தாள்.

தந்தையை, சகோதரனை, கணவனை அடுத்தடுத்த நாட்களில் நாட்டிற்காகப் பலி கொடுத்துவிட்ட அந்த நங்கையின் வீரம் அவள் கொண்ட சோகத்தால் சிறிதும் மட்டுப்பட்டு விட வில்லை. நான்காம் நாள் காலையிலும் போர்ப் படை முழங்கக் கேட்டாள் அந்தத் தமிழ் நங்கை.

வீட்டு வாசலில் விளையாடிக் கொண்டிருந்த ஐந்து வயதும் நிறையாத தன் வாரிசான ஒரே மகனை வாரி அணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டு, அவனுக்குப் போர்க் கோலமும் தானே புனைந்து, கையிலே வாளும் கேடயமும் கொடுத்து, ''மகனே போருக்குப் போய் வா, மாற்றானை வென்று மண்ணின் மானம் காத்து வா'' என்று ஆர்வமுடன் கூறி அனுப்பி வைத்தாள். அத்தகைய வீரக்காட்சிகள்- பிற நாட்டு இலக்கியங்களில் எளிதில் காணக் கிடையாத ஏற்றமுறும் காட்சிகள் - எத்தனையோ உண்டு நம்முடைய இலக்கியங்களிலே. இந்த மண்ணில் பிறந்த மங்கையர்க்கே இத்தகைய வீரம் இருக்குமானால், ஆடவர்களின் வீரத்தைக் கேட்கவாவேண்டும்?

அத்தகைய வீரர்களில் ஒருவனாகிய விராடன் தன்னுடைய புத்திரர்களின் உயிர்போனமைக்குச் சற்றும் கலங்காமல் தானும் தன்னுயிரைப் பாண்டவர் களுக்காக அர்ப்பணிக்கத் தயார் எனக் கூறுவதைக் கேட்டு நாமும் அகம் மகிழ்ந்து போகிறோம்.

அன்றைய இரவில் பாண்டவர்கள் அணியில் ஒருவருக்குமே உறக்கம் வரவில்லை. ஐந்து நாள் நடைபெறும் கிரிக்கெட்டுப் போட்டியில் முதல் நாள் விளையாட்டில் அத்தனை மட்டையாளர்களையும் இழந்து சொற்ப ஓட்டங்களையே எடுத்திருக்கும் அணி, மறுநாள் விளையாட்டிலேனும் தம்பகை அணியைப் பழிதீர்க்க எண்ணித் துடிதுடித்துத் தூங்காமல் எப்போது விடியும் என எதிர் பார்த்திருக்கும் அல்லவா!

அதைப் போலவே முதல் நாள் போரில் தோல்வியைக் காண நேர்ந்த பாண்டவர் அணியினரும் துரியோதனாதியரைப் பழி தீர்க்க எப்போது விடியும் எனத் துடித்துக் கொண்டு இருக்கின்றனர். வெற்றி எவர் பக்கம் என்பதைக் கண்டறியும் ஆசையால், ஆதவனும் சீக்கிரமாகவே தோன்றி வர இரண்டாம் நாள் யுத்தமும் ஆரம்பிக்கிறது.

பாண்டவர்கள் அணிக்குப் பாஞ்சால மன்னன் துருபதனின் மகனாகிய திட்டதுய்மனைத் தளபதி ஆக்குகிறார் கண்ணபெருமான்.

பாஞ்சாலன் மகனாகிய திட்ட தூய்மனைப் பார்த்தசாரதியாகிய கண்ணபெருமான பாண்டவர் அணிக்குத் தளபதியாக்குவதற்கும் முக்கிய காரணம்இருக்கின்றது. திட்டதுய்மன் துரோணரைக் கொல்வதற்காகவே சிவபெருமானின் அருளால் தோன்றியவன். அவன் தோன்றிய அந்த வரலாற்றை நாம் இந்த நேரத்தில் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

துரோணரும், பாஞ்சால நாட்டு இளவரசன் ஆகிய யாகசேனனும் ஒருசாலை மாணாக்கர்கள். அங்கிவேசன் என்ற முனிவரிடத்தில் இருவரும் ஒன்றாகப் படைக்கலங்களைப் பயின்றவர்கள். அவ்வாறு பயின்ற காலத்தில் யாகசேனனுக்குத் துரோணர் உற்ற நண்பராக விளங்கி, அவனுக்கு எளிதில் கைவராத ஆயுதக் கலைகளை எல்லாம் அன்போடு கற்பித்து வந்தார். யாகசேனனும் துரோணரிடத்தில் நன்றி பாராட்டித் தான் பாஞ்சால தேசத்தின் மன்னன் ஆனவுடன் தன் நாட்டில் பாதியைத் துரோணருக்கு வழங்குவதாக உறுதி கூறினான். படைக்கலப் பயிற்சிகள் நிறைவு பெற்றவுடன் இருவரும் தம்தம் ஊர்களுக்குப் போய்ச் சேர்ந்தனர். தந்தைக்குப் பின் பாஞ்சால நாட்டின் மன்னன் ஆனான் யாகசேனன்.

துரோணரும் கிருபி என்ற மங்கையை மணந்து அசுவத்தாமன் என்ற ஆண்மகவிற்குத் தந்தை யானார். குழந்தைக்குப் பாலும் வாங்கி ஊட்ட இயலாத வறுமைத் துன்பத்திற்கு ஆளானார் துரோணர்.

இவ்வாறு கொடிய வறுமையில் வாட நேர்ந்தபோதுதான் அவருக்கு யாகசேனன் தன்னுடைய நாட்டில் பாதி வழங்குவதாகக் கூறிய உறுதிமொழி நினைவிற்கு வந்தது. காடு மலைகளைக் கடந்து பல நாட்கள் நடந்து போய் பாஞ்சால மன்னனாய்க் கோலோச்சிய யாகசேனனைக் கண்டார் துரோணர்.

நீண்ட நெடு நாட்களுக்குப் பின் தன்னைத் தேடிவந்த துரோணரை யாகசேனன் நடத்திய விதம் அவருக்கு அதிர்ச்சியாக இருந்தது.

புத்தாண்டில் நாம் விடவேண்டிய ஏழு தீய குணங்கள்

1. காமமாகிய உட்பகைவன்
2. கோபமாகிய வெங்கொடியவன்
3. கனலோபம் எனும் முழுமூடன்
4. கடுமோகமாகிய வீணன்
5. கொடுமதம் எனும் துட்ட கண்கெட்ட ஆங்காரி
6. மாச்சரியம் எனும் விழலன்.
7. கொலை என்று இயம்பும் பாதகன்

- அருட்பிரகாசவள்ளலார்

அங்கிவேசமுனிவரிடத்தில் ஒன்றாகப் படைக்கல பயிற்சிகள் பெற்றதையும் துரோணரின் உதவியால் தானும் வித்தைகளில் தேறியதையும் நினைவு கொள்ளாமல் துரோணரை அவமானப் படுத்துவதைப் போல ''நீயார்?'' என்று வினவினான் யாகசேனன்.

துரோணர் யாகசேனனின் ஆணவத்தைக் கண்டு அதிர்ச்சியுற்றாலும் ''யாகசேனா! நீஅன்றைக்கு உறுதி கூறிய பாதி நாட்டை நான் பெற வந்திருப்பதாக எண்ணியா அச்சப்பட்டு யார் நீஎன்று என்னையே தெரியாதவன் போல் வினவுகிறாய்? நீதந்த வாக்குறுதியை நீமறந்தாலும், என்னால் அடைந்த நன்மைகளை நீமறவாதே ! எனக்கு நாடு வேண்டாம். என் மகன் பசியால் நலிகிறான். அவனுக்கு பாலூட்ட ஒரு பசுவினை எனக்கு அளித்தால் அது எனக்குப் போதும்'' என்று வேண்டினார் துரோணர்.

ஆனால் மன்னன்ாகி விட்ட மமதையில் மனிதாபிமானமும் மறந்து போன யாகசேனன் ''யானோ மன்னன் ; நீஏதுமில்லாத முனிவன். உனக்கும் எனக்குமா நட்பு ? நீஉதவி செய்ய நான் வித்தை கற்றேனா?'' என்று எகத்தாளமாக நகைத்து, துரோணரை ஏசி இகழ்ந்ததோடு ''உளறுகின்ற இந்த பித்தனை ஊரைவிட்டுத் துரத்துங்கள்'' என உத்தரவு இடலானான்.

யாகசேனனின் நன்றி கொன்ற செயலுக்கு நல்ல பாடம் புகட்ட விரும்பிய துரோர்ணர், ''என்னால் வித்தைகளைப் பயின்று இன்றைக்கு என்னையே அவமானப்படுத்தும் உன்னை நான் சும்மா விட மாட்டேன். என்னிடம் வித்தை கற்கும் மாணவனைக் கொண்டே உன்னை வென்று உன்னைத் தேர்க்காலில் கட்டி வரச் செய்வேன். உன் அரசையும் கவர்வேன். இது உறுதி'' என வஞ்சினம் செய்தார். அதன் பிறகே அத்தினாபுரம் அடைந்து வீடுமரால் பாண்டவர்களுக்கும் துரியோதனாதி யர்கஞம் படைக்கலப் பயிற்சியளிக்கும் ஆசானாய் அமர்த்தப் பெற்றார்.

துரோணர் தாம் செய்த சத்தியம் பொய்க்காத வண்ணம் அர்ச்சுனனுக்குத் தாம் பயின்ற வித்தைகளை எல்லாம் கற்பித்து அர்ச்சுனனைக் கொண்டே பின் யாக சேனனையும் வென்று, தேர்க்காலில் கட்டிவரச் செய்தார். அர்ச்சுனனும் துரோணருக்குத் தன்னுடைய குருதட்சிணையாக யாகசேனனை வென்று, தேர்க்காலில் கட்டி வந்து அவனைத் தன் குருவிடம் சேர்ப்பித்தான்.

முன்னொரு நாளில் பாஞ்சால நாட்டில் தம்மை அவமானப்படுத்திய யாகசேனனைப் பின்னொரு நாளில் தம் முன் அவமானப்பட வைத்த துரோணரும், அர்ச்சுனால் தமக்கு அளிக்கப்பட்ட பாஞ்சால நாடு முழுவதையும் தானே ஏற்றுக் கொள்ளாமல் அங்கிவேசனிடம் பயின்ற காலத்து அவன் உரைத்த உறுதிமொழிப்படியே பாதியைத் தான் ஏற்றுக் கொண்டு, மற்ற பாதி நாட்டை யாகசேனனே ஆள அவனுக்கு அளித்து அவனை உயிரோடு அனுப்பி வைத்தார்.

இவ்வாறு துரோணரால் பாடம் புகட்டப் பெற்ற யாகசேனன், துரோணரைக் கொன்று அவரை பழிதீர்த்துக் கொள்வதற்கு ஒரு மகனையும், தன்னையே வெற்றி கொண்ட சிறுவனான அர்ச்சுனனைப் பாராட்டும் முகத்தான் அவனுக்கு மணம் செய்து வைக்க ஒரு மகளையும் பெறுவதற்காக மாபெரும் புத்திரகாம யாகத்தைச் செய்தான். அவ்வாறு செய்யப்பட்ட யாகத் தீயிலிருந்து துரோணரைக் கொல்வதற்கென்று தோன்றியவனே திட்டதுய்மன். அதே யாகத்தீயில் தோன்றியவளே பாஞ்சாலி.

அந்த பாஞ்சாலியைத்தான் அர்ச்சுனன் உள்ளிட்ட பாண்டவர்கள் ஐவரும் மணந்து கொள்கின்றனர். பாண்டவர்களின் மைத்துனனும், துரோணருக்கு எமனும் ஆன திட்டதுய்மனைத்தான் சுவேதனின் மறைவுக்குப் பிறகு பாண்டவர்களின் தளபதி ஆக்குகிறார் சூழ்ச்சித் திறம் வல்லவரும், பாரதப் போரின் சூத்திரதாரியும் ஆன நம் கண்ணபெருமான்.

இரண்டாம் நாள் போரில் வீடுமர், தம்முடைய படையைக் கருடவியூகமாக வகுக்கிறார். கருடனது வடிவம் போலப் படை வகுக்கப்படுவது கருட வியூகமாகும். கருட வடிவத்தின் வாயிடத்தில் வீடுமர் நிற்க, கண்களிடத்தில் துரோணரும் கிருதவர்மாவும் நிற்கின்றனர். அசுவத்தாமா கிருபர் ஆகியோர் தலையிடத்திலும், பூரிசிரவன் சல்லியன், பகதத்தன், ஜயத்திரதன் ஆகியோர் கழுத்திடத்திலும் நிற்கின்றனர். மாகதரும் கலிங்கரும் வலச் சிறகென அணி வகுத்து நிற்க, பிருகத்பலனும் காரூசரும் இடச் சிறகென நிற்கின்றனர். துரியோதனனும் அவனுடைய தம்பிமார்களும் கருடனின் வால்புறமெனப் படையின் இறுதி இடத்தில் இருக்கின்றனர். துரியோதனனுக்கு ஒருதுன்பம் நேராமல் அவனைக் காத்து நிற்கம் பொருட்டே, கருட வியூகமாகத் தம்படையை அணிவகுத்து நிற்கச் செய்து கடைசியாக இருக்கும் வால்புறத்தில் துரியோதனனை வீடுமர் இருக்கச் செய்கின்றார்.

வீடுமர் இவ்வாறு கருட வியூகம் வகுக்க, கண்ணபெருமான் திட்டதுய்மனிடம் பாண்டவர் படையை அர்த்தசந்திர வியூகமாக வகுக்கக் கூறுகிறார். பாதிச் சந்திரனது வடிவம் போலப் படை வகுக்கப்படுவது அர்த்தசந்திர வியூகமாகும். பிறையின் வலப்பக்கத்துக் கொம்பில் வீமனும், இடப்பக்கத்துக் கொம்பில் அர்ச்சுனனும் நிற்க, அபிமன்யு, கடோத்கஜன், திட்டதுய்மன், விராடன், துருபதன், சிகண்டி, சாத்யகி ஆகியோர் பிறைச் சந்திரனின் நடுவில் நின்று போர் புரிய ஆயத்தமாக இருக்கிறார்கள். கருட வியூகத்தைக் கலைப்பதற்கும், கண்ணாக நிற்கும் வீடுமரை இருபுறமாக வளைத்துத் தாக்குவதற்கும் ஏதுவாக இருக்கும் என்பதனாலேயே அர்த்தசந்திர வியூகத்தை அமைக்கக் கூறினார் கண்ணபெருமான். இரண்டு கடல்கள் மோதிக் கலப்பதைப் போன்ற பெருத்த ஆரவாரத்தோடு பாண்டவர் படையும், துரியோதனன் படையும் மோதிக் கலக்கின்றன.

(தொடரும்)

புத்தாண்டில் நாம் போற்ற வேண்டிய ஏழு தூய குணங்கள்

1. நிராசை
2. உயர்குலப் பெண்டிரோடு நிகழ் சாந்தமாம் புதல்வன்
3. உதாரகுணம்
4. அறிவாம் துணைவன்
5. நிராங்கார நண்பன்
6. சுத்தமுறுமனம்
7. சகல கேவலம் இலாத இடம்

- அருட்பிரகாசவள்ளலார்

திருவிளையாடல் புராணம்

இரா. அரங்கசாமி

மாயப் பசுவை வதைத்த படலம்

அனந்தகுண பாண்டியன், தாங்கள் ஏவிய நச்சுப்பாம்பு வடிவெடுத்த அரக்கனையும் கொன்று விட்டான் என்பதை அறிந்த சமணர்கள் மேலும் அதிகக் கோபம் கொண்டு, அனைவரும் ஓரிடத்தில் கூடி 'நாம் முன்பு அனுப்பிய யானையைக் கொன்றதைப் போலவே இன்று சென்ற பாம்பையும் அழித்து விட்டனர் 'இனிமேல்' நாம் என்ன சூழ்ச்சி செய்யலாம்' என்று ஆலோசித்தனர்.

'சைவர்கள், பசுவுக்கு துன்பம் செய்ய மாட்டார்கள். ஆகையால் இம்முறை பசுவை விடுப்போம். அதுவே சரியான வழி' என்று முடிவு செய்தனர். மீண்டும் முன்பு போல் கொடியதொரு வேள்வியைச் செய்தனர். அப்போது ஓம குண்டலத்தில் இருந்து கொடிய அரக்கனான ஓர் அவுணன் வந்து தோன்றினான். அந்த அரக்கனிடம் 'பசு வடிவெடுத்துச் சென்று பாண்டியனையும் மதுரை நகரையும் அழித்து விட்டு வா' என்று கூறி அனுப்பிவைத்தனர்.

அந்த மாயப்பசு, தன் கொம்புகளினால் பூமியைக் குத்தியும், நிமிர்ந்து மேகங்களைச் சேர்த்துக் கொண்டும் மதுரையை நோக்கிப் பாய்ந்து சென்று பெரிய குன்றுகளையும் பெயர்த்தெறிந்து வழியில் எதிர்ப்பட்ட மக்களையும் துன்புறுத்தியது.

அப்பசு மதுரை எல்லையை நெருங்குவதை அறிந்த பாண்டியன், மதுரை திருக்கோயிலை அடைந்து, கருணைக் கடலான சோமசுந்தரக்கடவுளைப் பணிந்து, நடந்தவற்றைக் கூறி முறையிட்டான்.

சிவபெருமான் நந்தியை நோக்கி, 'நீசென்று சமணர்கள் ஏவி விட்டுள்ள அக்கொடிய பசுவை வென்று இழுத்து வருவாய்' என்று கட்டளை இட்டருளினார்.

உடனே நந்தி புயல் போல் வேகத்துடன் சென்று அந்த மாயப்பசுவை நெருங்கியது. அதை நான்கு திசைகளிலும் ஓட ஓட விரட்டியது. அதன் உடலைத் தன் கொம்பில் சேர்த்து முதுகு தரையில் படும்படி தள்ளியது. உடனே அந்த மாயப்பசு நந்தியின் முன் கட்டுப்பட்டு அமைதியாக அடங்கியது. அப்பசு நந்தியின் முன் சரணடைந்தது. அப்போது அதன் உடல் மலையின் வடிவம் பெற்றது.

மதுரை மக்கள் கொடிய பசுவிடமிருந்து தாங்கள் தப்பியதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தனர். மன்னன் அனந்தகுண பாண்டியன் சில காலம் சிறப்பாக ஆடசிசெய்து தன் திருக்குமாரன் குலபூடணனிடம் அரசாட்சியை அளித்த பின்னர் சிவபதம் அடைந்தான்.

(தொடரும்)

அணுகுண்டை விட ஆபத்தானது

படிப்பில்லாதவனிடம் பணம் அகப்பட்டால் அது அணுகுண்டை விட ஆபத்தானது.

- அருளரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

திருமந்திர உபதேசம்

திருமந்திரச்செல்வர் டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. (ஓய்வு)

"களிம்பணுகாத கதிரொளி காட்டிப்
பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே"
(திருமந்திரம் 114)

திருமந்திரத்தில் முதல் தந்திரத்தில் இரண்டாவது மந்திரத்தில் கடைசி இரண்டு அடிகளாக வருபவை இவை. ஆழமான அனுபவ உணர்வை வெளிப்படுத்துகின்றன. சைவ சமய அடிப்படைக் கருத்துக்களைத் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றன. ஒவ்வொரு சொல்லினுடைய பொருளையும் பொதுப் படையாக எடுத்துக் கொள்ளக் கூடாது. நாம் இங்கே காணப் போவது அகராதிப் பொருள் அல்ல. சொல்லின் பொருளைப் பொதுப் படையாகத் தெரிந்து கொள்வதோடு இல்லாமல், அந்தப் பொருளை ஆழ் மனதில் போட்டுச் சிந்தித்து, தெளிவு பெறுவதன் வழியாக மெய்ப்பொருள் உண்மையைப் பெறுவதே, நாம் மேற்கொள்ளும் முயற்சி பயனுள்ள வகையில் அமையத்துணைசெய்யும்.

இறைவன் படிப்படியாக நம்மை வளர்ச்சி பெற உதவுகிறான். 'நம்மை' என்பது நமது ஆன்மாவை. ஆன்மாவே நிலையான பொருள். 'நான்' என்று சொல்லிவருகிற 'உடம்பு' நிலையற்ற பொருள். அழியும் தன்மையுடையது. நாம் வளர்ச்சி பெறுவது, பக்குவம் அடைவது என்பது எல்லாம் ஒரே பொருளைத் தருகின்றன.

உயிர், தன்னைக் கட்டுப்படுத்தி, துன்பத்தில் ஆழ்த்தி வைக்கும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்களிலிருந்து விடுதலை பெறவேண்டும். தனது கருமங்களை முடித்துக் கொள்ள வேண்டும். உயிர் தன்னை சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டும். உயிர் ஒரு அறிவுப் பொருள் ஆயிற்றே. இருந்தாலும் தன்னைத் தெரிந்து கொள்வதில்லை. மலங்கள் அந்த அளவுக்கு, ஒரு அறியாமை நிலையை உருவாக்கி வைக்கின்றன. உயிர் தன் தலைவனையும் உண்மையாகத் தெரிந்து கொள்வதில்லை.

பல பிறவிகளில் பெற்ற இன்ப, துன்ப அனுபவங்களின் விளைவாக, சிறிது விளக்கம் கிடைக்கின்றது. அதுவும் திருவருள் துணையால் நடக்கின்றது. உலகப் பற்றினை நீக்க விரும்பும் உயிரால், தானாக எவ்வளவு முயற்சி செய்தும் முழுமையாக, உலகத் தொடர்புகளிலிருந்து வெளிவர இயலவில்லை. அப்போது தான் உயிர்க்கு திருவருள் நாட்டம் துணை செய்கின்றது.

இறைவன் இதற்காகத் தானே காத்துக் கொண்டிருக்கின்றார். மலங்களின் தாக்கத்தை நீக்க உதவும் இறைவன் உயிரினுடைய திருவருள் வேட்கையைத்தூண்டிவிடுகின்றான்.

கண்கள் போன்ற அறிவுஉறுப்புகள் எப்போதும் புலன்கள் வழியாக உலக அனுபவங்களையே தேடிப் பெறுவதில் முனைப் போடு இருக்கின்றன. அதை இறைவன் மாற்றுகிறான். தன்வசம் போகச் செய்கிறான். அருட்கண் விழிப்பித்தல் என்பது இதுவே எனக் கொள்ளலாம். இறைவனுடைய படைப்பின் நோக்கமும் அதுவே. இறைவன் உயிர்களுக்கு உடலைக் கொடுத்து, பொறி புலன்களைக் கொடுத்து, கருவிகள் வழியாக மயக்கத்தைக் கொடுத்து, மயக்கம் தீர மருந்தையும் கொடுத்து, ஆட் கொள்கிறான். அவன் பெரும் கருணையாளன் அல்லவா.

கண்கள் வெறும் கருவிகள், சடப் பொருள்கள் அவை. அறிவற்றவை. ஆனாலும் கண்கள் வார்க்கின்றன என்று சொல்வோம். அது நமது அறியாமையையே சுட்டிக் காட்டுகிறது. கண்கள் காணும் கருவிகள். கண்ணுக்கென்று ஒரு ஒளி உண்டு. அது காணும் ஒளி. ஆனால் காட்டும் ஒளி ஒன்று அங்கே இருக்க வேண்டும். காட்டும் ஒளி இல்லை என்றால் கண் ஒளி இயங்காது. பகல் நேரத்தில் கதிரவனின் ஒளியால் பொருள்களைப் பார்க்கின்றோம். கதிரவன் இல்லாத நேரத்தில், கண்ணில் ஒளி இருந்தும், அது பயன் படாது. நாம் வேறு விதமான விளக்குகளை நாட வேண்டியுள்ளது. இவ்வகையாலே கதிரவன் புறஇருளை நீக்குவதற்கு உதவுகிறான்.

ஆனால், நம்முடைய பிரச்சினை அக இருள் அல்லவா! ஆணவமலச் சேர்க்கையால் ஒரு விதமான இருள் நமது உள்ளத்திலும், உயிரிலும், படர்ந்து கிடப்பதை நம்மால் அறிந்து கொள்ள வாய்ப்பில்லை. திருவருள் துணையுடன் தான், அவ்வாறு ஒரு இருள் நம்மை மூடிக் கொண்டு, அறியாமையைத் தந்து, நமது வாழ்க்கையை விபரீத வழிகளில் அழைத்துச் செல்லுகிறது என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

திருவருள் தானே இயங்கும் ஈடு இணையற்ற ஒளி. ஆன்மாக்களின் பக்குவத்திற்கேற்ப திருவருள் ஒளி, ஆன்ம ஒளியுடன் கலந்து கொள்ளுகின்றது. அது இறைவனிடமிருந்து வரும் ஒளியாகையால் அது தூய்மையானது. இறைவன் விமலன், மலமற்றவன், அவன் தரும் ஞானமும் அருளும் மலமற்றவை. ஆன்மாக்களுடைய மலங்களை நீக்கும் ஆற்றல் பெற்றவை, எனவேதான் திருமூலர் இறை ஞானத்தைக் "களிம்பணுகாத கதிரொளி" என்கிறார்.

இறை ஒளி தானே விளங்கும். வேறொரு பொருள் வந்து அதை விளக்கத் தேவையில்லை. அந்த ஒளியே சிவன் என்பார் திருமூலர். கதிரவனுடைய ஒளியை நாம் பார்க்கின்றோம் என்றால் அதற்கு ஏதுவாக இருப்பது கதிரவனுடைய கதிர்கள். அதே போல சிவப்பரம் பொருளின் ஞானம், கருணை, அருள் போன்றவை வெளிப்படுவதற்கு ஏதுவாய் இருப்பது சிவனுடன் இணைபிரியாமல் சேர்ந்துள்ள சக்தியேயாகும். ஆகவே சிவஒளி என்பது ஒன்று. அது வெளிப்பட வேறு ஒளி தேவை.

இரண்டாவதாக எல்லா ஒளிக்கும் காரணமாக உள்ள சீவஒளி. மூன்றாவது சிவஒளியின் கதிர்களாக அமைந்து சீவனுடன் சேர்ந்து, சீவனைப் பக்குவப்படுத்தும் ஒளியாகிய இறைவனின் திருவருட்சக்தி. இறைவன் உயிருக்கு உயிராக இருந்து கொண்டு உணர்த்துகிறார் என்பது சான்றோர் வாக்காகும். தன்னை நினைக்கின்ற உயிர்களுடைய நெஞ்சங்களிலே புகுந்து, அங்கே வெளிப்பட்டு, உயிரினுடைய ஒளியைத் தன் ஒளிக்குள் அடக்கிக் கொண்டு, அங்கே சிவன் விளங்குவான் என்கிறார் திருமூலர்.

''இலங்கிய தெய்வொளி அவ்வொளி ஈசன்
துலங்கொளி போல்வது தூங்கருசத்தி
விளங்கொளி மூன்றே விரிசுடர் தோன்றி
உளங்கொளி யுள்ளே ஒடுங்குகின்றாளே''

(திருமந்திரம் 2689)

இறைவன் ஒடுங்குவது மட்டுமில்லை. ஒடுக்கவும் செய்கிறான். அதுவும் இறைவனுடைய திருவருளே என்று எண்ணி எண்ணி வியக்கின்றார் சுந்தரமூர்த்தி நாயனார்.

இறைவன் மக்களுக்கு இன்பத்தையும் துன்பத்தையும் மாறி மாறிக் கொடுக்கின்றான். அவற்றை அனுபவித்து, மக்கள் தங்களை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்பதே திருவருள் இயக்கத்தின் நோக்கமாகும். மாசு மறைந்து தூய்மை பரவ வேண்டும். இதற்காக இறைவன் உயிர்களை ஒறுக்கின்றான். பொறுக்கவும் செய்கிறான். நாம் செய்யும் தீங்குகளைப் பொருட்படுத்தாமல், நாம் நம்மைத் திருத்திக் கொள்வதற்கு வாய்ப்புகளைக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றார். நம்மையும் ஒரு பொருளாக்குவதற்காக அவ்வப்போது நமக்குத் தண்டனையும் கொடுத்து, உயிர்களைத் தீயிலிட்ட தங்கமாக்குகிறான். சுந்தரமூர்த்தி நாயனார் மனமுருகிச் சொல்வதைக் கேளுங்கள்!

''ஒறுத்தாய்நின் அருளில்; அடியேன் பிழைத்தனகள்
பொறுத்தாய் எத்தனையும்; நாயேனைப் பொருட்படுத்திச்
செறுத்தாய்; வேலை விடம்அறியாமல் உண்டு கண்டம்
கறுத்தாய்; தண்கழனிக் கழிப்பாலை மேயானே!;''

அதாவது ஆன்மாகிய என்னிடம், தன் ஒளியைக் காட்டி, சிவப்பரம்பொருள் தன்னை விளங்க வைத்தான். பாசத்துடன் சேர்ந்து பாசமாய் சேவித்துக் கொண்டிருந்த ஆன்மா திருவருள் வசத்தால், சிவத்தோடு சேரும் பேறு பெற்று, பசுத்துவம் நீங்கி, சிவமாம் தன்மையைப் பெற்றிருத்தல் அந்தப் பதியாலேயே நடக்கின்றது என்று திருமூலர் தெளிவுபடுத்துகிறார்.

அதுஎப்படி? ஆன்மா பளிங்கு போல. நீலநிறப் பொருளோடு சேரும் போது நீலமாயும், சிவப்பு நிறப்பொருளில் சிவப்பைப் பெற்றும், தனக்கென்று ஒரு தன்மையும் இல்லாதது போல் சார்ந்த பொருளின் தன்மையை வெளிக்காட்டும் இயல்பினைப் பளிங்கு பெற்றிருக்கின்றது. அதே போல் ஆன்மா பாசம் நீங்கி, சிவத்துடன் சேர, சிவமாம் தன்மை பெற்று விளங்குகிறது. ''சித்தமலம் நீக்கி, சிவமாக்கி எனை ஆண்டு கொண்ட அத்தன்'' என்றார் மாணிக்கவாசகர்.

பளிங்கில் பவளம் பதித்தாற் போல், ஆன்மாவில் தன்னைச் சிவம் பதித்துக் கொள்கிறது என்பதே இங்குள்ள விளக்கம். சிவம் என்னும் நாமம் தனக்கே பெற்ற செம்மேனி அம்மான் ஆகையால், பளிங்கு என்னும் உவமை மிகப் பொருத்தமாயிற்று.

(தொடரும்)

தைத்திங்களில் நாயன்மார் நட்சத்திரங்கள்



கண்ணப்பர் - மிருகசீரிடம்
அரிவாட்டாயர் - திருவாதிரை
சண்டேசுவரர் - உத்திரம்
திருநீலகண்டர் - விசாகம்
அப்பூதியடிகள் - சதயம்
கலிகம்பர் - இரேவதி

இராமலிங்கம் கண்ட மயிலும் குயிலும்

''வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்
மயில் குயில் ஆச்சுதடி - அக்கச்சி
மயில் குயில் ஆச்சுதடி''

என்று அருட்பிரகாசவள்ளலார் பாடியுள்ளார்.

யோக நிலையில் உண்டாகும் அனுபவமே இது. அழகிய ஒளிமயலைப் போல அருட்பெருஞ் ஜோதியின் காட்சி முதலில் தோன்றிப் பின்பு இனிய ஞாதம் கேட்கும்.

இந்த யோகானுபவத்தையே மேற் கண்டவாறு பாடியுள்ளார் அருட்பிரகாசவள்ளலார்.

ஆண்டாள் ஆண்ட தமிழ்

டாக்டர் பு.ஏ. இராமையா,இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை,
தலைமைச் செயலகம்

ஆழ்வார்கள் ஆண்டவனை இறைவனாகவும் தோழனாகவும் கணவனாகவும் காதலனாகவும் அருளாளனாகவும் ஆசானாகவும் பல்வேறு கோணங்களிலே பார்த்துப் பரமபதம் அடைந்தனர். அந்த வகையில், ஆழ்வார்களில் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளான

ஆண்டாள் எம்பெருமானை ஆண்டதோடு மட்டுமல்லாமல் ''திருப்பாவையும்'', ''நாச்சியார் திருமொழியும்'' எழுதித் தமிழையும் ஆண்டாள்.

ஆடிமாதம், சுக்கில சதுர்த்தசி, செவ்வாய்க் கிழமை, பூர நட்சத்திரத்தில் பெரியாழ்வார் நந்தவனத் திருப்பணிக்காகக் கொத்தி வைத்த பூமியில் துளசியடியில் திருஅவதாரம் செய்தவர் ஆண்டாள். அவருக்குக் ''கோதை'' என்று அழகிய பெயரைச் சூட்டிப் பெரியாழ்வார் வளர்த்து வந்தார். கூந்தல் அவருக்குச் சிறப்பாக விளங்கிய காரணத்தினால் ''சுரும்பார் குழல் கோதை'' என்றும் அவர் அழைக்கப்பட்டார்.

ஆண்டாள் சூடிக் கொடுத்த மாலையை இறைவன் விரும்பி ஏற்றதால் சூடிக் கொடுத்த சுடர்க்கொடி ஆனார். நற்றமிழால், நல்லிசையால் இறைவனைப் பாடிய காரணத்தால் நாச்சியார் ஆனார். கண்ணனுடைய ஆயர்பாடியையும், கோபிகைகளையும் கற்பனையில் உணர்ந்து தாமும் அந்த பெண்களுள் ஒருவராக இருந்து ஆழ்ந்த பக்தி உணர்ச்சியோடு திருப்பாவை என்று சொல்லக்கூடிய முப்பது பாடல் கொண்ட தீந்தமிழ் இலக்கியத்தைப் பாடி திருமாலைத் தரிசித்தவர் ஆண்டாள்.

திருமால் சங்கினை ஊதுகின்றார். சங்கிற்கு திருமாலின் திருவாயில் வாசம் செய்யும் வாய்ப்புக் கிடைக்கின்றது. ஆண்டாள் ஏங்குகின்றார்! தனக்கு அந்த அரிய வாய்ப்புக் கிடைக்கவில்லையே என்று அங்கலாய்க்கிறார். ''ஏ! வெண்சங்கே! மாதவனின் வாயும் சுவையும் நீஅறிவாய். நான் விருப்பமாய் கேட்கிறேன் சொல். மாதவனின் வாய் கருப்பூர மணம் கமழுமோ? அவனுடைய பவளம் போன்ற திருவாயிதழ் தித்திப்பாய் இருக்குமோ? சொல்வாயாக'' என்று தேன்தமிழில் இறைஞ்சுகிறார்.

''கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல் ஆழி வெண்சங்கே''

என மனமுருக வேண்டுகிறார்.

ஆண்டாள் என்று உலகோரால் அழைக்கப்பட்ட இவர், 8ம் நூற்றாண்டில் வாழ்ந்து இறைவனை ஆட்கொண்டவர்.

நீண்ட வடிவம் கொண்டு உலகத்தை அளந்த உத்தமன் பெயரைப் பாடிப் போற்றி நீராடினால் தீங்கில்லாமல் நாடு முழுவதும் நன்மழை பொழியும். வயலில் செழித்து வளரும் நெற்பயிருக்கு இடையே கயல் மீன்கள் துள்ளி விளையாடும். குவளை மலரில் தேன் உண்டு வண்டுகள் மயங்கி உறங்கும். தொழுவத்துள் புகுந்து முலைக் காம்பைப் பற்றிக் கறக்கக் குடம் குடமாக பால் நிரப்பும் வள்ளல் தன்மையுடைய பசுக்கள் கிடைக்கும். இப்படி பெருமாளை வணங்குகின்றபோது அனைத்துச் செல்வங்களும் கிடைக்கும் என்று பக்தி மணம் கமழப் பாடுகிறார் ஆண்டாள்.

மார்கழி மாதம் மதி நிறைந்த நன்னாளில் நீராடுங்கள். நீராடியபின் கூர்வேல் கொடுந்



விரத சித்திக்குத் தித்திக்கும் நெல்லி

மகாவிஷ்ணுவிற்குப் பிடித்த கனி நெல்லிக்கனி.

நெல்லிமரத்தில் மகாவிஷ்ணுவும், திருமகளும் வா செய்வதாக நம்பப்படுகின்றது.

ஏகாதசி விரதம் இருப்போர், துவாதசி அன் நெல்லிக்கனியை உணவில் சேர்த்துக் கொண்டால்தான் ஏகா விரதம் சித்தியாகும்.

'ஹரிபலம்' என்ற பெயர் பெற்ற நெல்லிமரம் ஒரு வீட் வளர்க்கப்பட்டால் அந்த வீடு லட்சுமி கடாட்சம் நிறைந்தத விளங்கும்.

நெல்லிக் கனியின் புளிப்புத் தன்மை இளமையைத் தரு காயகல்பம் என்று சித்தர்கள் பாடியுள்ளார்கள்.

தொழிலன் நந்தகோபன்குமாரன், யசோதை இளஞ்சிங்கம் கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தானை பறை முழங்க அவனுடைய திருப்பாதங்களைப் பற்றி வணங்குங்கள்! வணங்குகின்றபொழுது அனைத்துச் செல்வங்களும் நமது வீட்டிலே குவியும் என்பது திருப்பாவை மூலமாக ஆண்டாள் நமக்கெல்லாம் அளிக்கும் பக்திக்கட்டளையாகும்.

''ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீர் ஆடினால்
தீங்குஇன்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ் செந்நெல் ஊடு கயல்உகள
பூங்குவளைப்போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்''.

ஆண்டவனை அடைந்து அவனுக்குத் தொண்டாற்றுவதும் மற்றைய விருப்பங்களை விலக்கிக் கொள்வதும் அவனைச் சரணடைவதும் தான் ஆன்மாக்களின் பணி என்பதை மிகவும் அருமையாக கீழே வரும் திருப்பாவை பாடல் வாயிலாக உணர்த்துகிறார்.

''சிற்றஞ்சிறுகாலே வந்து உன்னைச் சேவித்து உன்
பொற்றாமரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம்மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல்எங்களைக் கொள்ளாமல் போகாது!
இற்றைப்பறைகொள்வா னன்று காண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமேயாவோம் உனக்கேநாம் ஆட் செய்வோம்
மற்றைநங்காமங்கள் மாற்றேலோ ரெம்பாய்''

பலராலும் போற்றிப் பாராட்டப்படும் திருப்பாவையைப் பாராயணம் செய்வதால் சகல பயன்களும் கிடைக்கும் என்பது வைணவர்கள் கணிப்பு.

தமிழர்கள் மட்டுமல்லாது அனைத்துத் தென்னிந்தியர்களும் திருப்பாவையைப் பாடிப் பயன் பெற்று வருகின்றனர். திருப்பதியில் ஆண்டாளின் திருப்பாவை அனுதினமும் ஓதப்படுகிறது.

திருப்பாவை பாடினால் இறைவனின் திருவருள் கிடைக்கும். திருவருள் மட்டுமல்லாமல் திருவும் வந்து சேரும். சபலமும் சஞ்சலமும் கொண்ட மனித மனம் ஒருமுகப் படுத்தப்பட்டு வாழ்க்கையில் வளம் பெருகும். வான் கொழித்த காரணத்தினால் இந்த மண்வளம் கொழிக்க இருக்கும் நிலையில் இந்த அழகிய குளிர் காலத்தில் அதிகாலையில் எழுந்து நீராடித் திருப்பாவை ஓதி அந்தக் கண்ணபிரானின் திருநாமத்தை மனதில் ஏற்றுகின்றபோது மனச் சஞ்சலங்களும் கவலைகளும் மறையும் என்பது ஆண்டாள் உலகிற்களித்த அறிவுரை. அதுதான் அவரின் அருளுரையும் கூட. அதை இந்த மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாட்களில் அவரின் திருப்பாவையை அனுதினமும் ஓதி ஆண்டாள் ஆண்ட தமிழ் மூலம் ஆண்டவனை அண்டுவோம்.

தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை - கடுவெளிச் சித்தர்

முனைவர் இரா. செல்வக்கணபதி

அழகும், அணிநயமும் நிரம்பிய இனிய கவிதைகளை வழங்கினார் ஒரு சித்தர். அவர் பெயர் தெரியவில்லை. எனவே, பின்வந்தோர் அவரை, அவர் கவிதை அழகைக் கருத்தில் கொண்டு அழகு அணிச் சித்தர் என அழைத்தனர். காலப்போக்கில் அப்பெயர் திரிந்து, அவரை அழுகுணிச் சித்தர், அழுகணிச் சித்தர் என்றெல்லாம் மக்கள் அழைக்கத் தொடங்கினார்.

இவர் பெயரும் நவநாத சித்தர்கள், பதினெண் சித்தர்கள் பட்டியலில் இடம் பெறவில்லை. பாரதியாருக்கு முன்னதாகப் பெண் ஒருத்தியைக் 'கண்ணம்மா' என விளித்துப் பாடியவர் இவரே. இவர் இயற்றினவாக 40 கலித்தாழிசைப் பாக்கள் மட்டும் கிடைத்துள்ளன. இவர் வரலாறு பற்றியோ, காலம் பற்றியோ ஏதும் தெரிந்தில.

நாம் இவரை அழகணிச் சித்தர் என்றே அழைக்கலாம். இவர் பாடல்களில் காணப்படும் சிலவகைச் சொல்லாட்சிகள் இவரை கி.பி. 15ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர் என்று காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக, பஞ்சாயக்காரர் (2), ஆக்கினைக்குத் தான்பயந்து (2) தேனாமிர்தம் (4), கூடுதில்லை (7), கிட்டுவதில்லை (8), சாகவல்லோ (9) மச்சினியோ நானறியேன் (11), தோணாமல் (17), உண்ணாக்கு (20), சாயச்சரக்கெடுத்து (21), ராசாக்கள் (24), நிட்டூரன் (27) பரக்க விழிக்கிரண்டி (31), ஆத்தாடி (33-40) போன்ற சொல்லாட்சிகள் இவர் வாழ்ந்த காலத்தை ஓரளவு தீர்மானிக்க உதவுகின்றன.

முதல் 32 பாடங்களில் காணப்படும் 'கண்ணம்மா' என்ற விளிகள் சிவசக்தியாகிய உமையைக் குறிப்பனவாகவே தெரிகின்றன.

'கண்ணம்மா உன் பாதம் சேரேனோ?'
'கண்ணம்மா கண் குளிரக் காண்பேனோ?'
'அஞ்சாதே என்று சொல்லி என் கண்ணம்மா ஆண்டிருந்தால் ஆகாதோ?'
'கண்ணம்மா பொருள் எனக்குத் தாரோயோ?'
'கண்ணம்மா விழித்து வெளி காட்டாயோ?'

எனவரும் பதிவுகள் இதனை உறுதி செய்கின்றன. 'சித்தர் போக்குச் சிவம்போக்கு' எனக் கூறப்பட்டாலும், சிவ சக்தியை 'வாலை' எனப் பெயரிட்டு வணங்கும் போக்கு, சித்தர் நூல்களிலே காணப்படுகிறது. விழித்து வெளி காட்டாயோ என்ற பதிவால் சிவனையே - சிவசக்தியாக உருவகித்துப் பாடியுள்ளார் என்றும் கருத இடம் உள்ளது.

நில்லாத உலகியல்பு கண்டு, நிலையா வாழ்க்கை இது என்று உணர்ந்து, துறவில் தலைப்பட்டு, வீடுபேற்றை வேண்டி நிற்கும் சித்தரின் உள்ளப் பாங்கைப் பாடல்கள் எங்கும் பரவலாகக் காண முடிகிறது. உடம்பை இவர் ''ஊற்றைச் சடலம்'' என்று குறிக்கிறார். சைவ சித்தாந்தம் பிற்காலத்தே விரித்த 96 தத்துவங்களை இவர் ''தொண்ணூற்றோடு ஆறதிலே'' என்று பதிவு செய்கிறார்.

மயக்கம் தரும் 'கஞ்சா' என்ற போதைப் பொருளைக் 'கஞ்சா வெறியனடி' எனத் தன்மேலிட்டுக் குறித்துக் காட்டுகிறார். சைவ சித்தாந்தம் பேசும் ஆறு ஆதாரங்கள் இவரால் சுட்டப்பட்டுள்ளன. மலர் தூவி வழிபடும் பூசைமுறைகளை ஏற்கிறார். சிவனைத் 'தோற்றம் ஒடுக்கமில்லா தொல்பொருள்' எனக் குறிக்கிறார். இவர் சிவநெறி நின்று வீடுபேற்றை விரும்பியவர் என்பதற்குச் சான்றுகள் வேறு பலவும் இவர் கவிதைகளிலே நிறைந்துள்ளன.

'மலஞ்சோரும் ஒன்பது வாயில் குடிலை' என உடலை மாணிக்கவாசகர் திருவாசகம் சிவபுராணத்துள் குறித்தார். உடலை வெறுத்துப் பேசும் சித்தர் மரபில் வந்த இவரும்,

'ஊற்றைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி
மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுதில்லை'

எனக் குறித்து, உடல்விட்டு, இன்பமயமான வீடுபேற்றை வழங்குமாறு யாசிக்கிறார். 'வைத்துக் கொண்டே' இலன் என்னும் எவ்வம் உரைக்கும் கீழோரிடம் சென்று கையேந்தி நிற்கும் நிலை வாராது காத்தருளக் கண்ணம்மாவிடம் வேண்டுகோள் வைக்கிறார்.

''புல்லரிடத்தில் போய்ப் பொருள் தனக்குக் கையேந்திப்
பல்லை மிகக் காட்டிப் பரக்க விழிக்கிறண்டி
பல்லைமிகக் காட்டாமல் பரக்க விழிக்காமல்

புல்லரிடம் போகாமல் என் கண்ணம்மா
பொருள் எனக்குத் தாராயோ?''

கண்ணம்மாவோடு, விநாயகப் பெருமானையும் சித்தர்

''ஐங்கரனைத் தெண்டனிட்டேன்
அருளடைய வேணுமென்று
தாங்காமல் வந்தொருவன் - ஆத்தாடி
தற்சொருபம் காட்டி யென்னே?''

என வினவி அருள் வேண்டி நிற்கிறார்.

சித்தர்கள் பாடல்களில் பரிபாஷைகளும், தத்துவக் குறியிடுகளும் நிறைந்திருக்கும். பலவற்றிற்கு உண்மைப் பொருள் கூறுவார் எவரும் இலர். அழகணிச் சித்தர் பாடல்களிலும் இவ்வாறான குறியீடுகள் மிகுந்து காணப்படு கின்றன. இத்தகைய மறைபொருள் உரையாடல்களால்தான் சித்தர் இலக்கியம் மக்களைச் சென்றடையாமல் உள்ளது. சில எடுத்துக் காட்டுக்களைக் காணலாம்.

'முத்து முகப்படியோ முச்சந்தி வீதியிலே
'பத்தாம் இதழ் பரப்பிப் பஞ்சணையின் மேலிருத்தி'
'எட்டாப் புரவியடி ஈறாறு காலடியோ
விட்டானும் பாரமடி'
'மூக்கால் அரும்பெடுத்து மூவிரண்டாய்த் தான்தூக்கி
நாக்கால் வளைபரப்பி நாற்சதுர வீடு கட்டி'
'சாயச் சரக்கெடுத்தே சாதிலிங்கம் தான் சேர்த்து
மாயப் பொடிகலந்து வானுமுவை நெய்யூற்றி'
'பாதாள மூலியடி பாடாணம் தான் சேர்த்து
வேதாளம் கூட்டியல்லோ வெண்டாரை நெய்யூற்றி'

இவ்வாறான பூடகப் பதிவுகளைச் சித்தர்கள் கையாண்டதற்கான காரணம் புலப்பட்டிலது. திருமந்திரம் போன்ற நூல்களில் பூடக உரையாடல்களைச் ''சூனிய சம்பாஷணை'' என ஒரு தலைப்பில் அடக்கி, எஞ்சிய பகுதிகளைப் புரியுமாறு படைத்த அருமைப் பாட்டைச்சித்தர்கள் ஏற்றுப் போற்றாமை ஏன் என்பது புலப்பட்டிலது.

நிறைவாகச் சித்தர் அமைத்துள்ள கண்ணிகளில் சரியை வழிபாட்டு நெறி போற்றப் பட்டுள்ளது. மஞ்சன நீராட்டி, மலர் பறித்துத் தூவுதல்; பாடிப் படித்துப் பன்மலர்கள் சாத்துதல் முதலியனவற்றைப் பேசும் சித்தர், சிவனைப் பலபடப் போற்றி நிறைவு செய்கிறார். திரிபுரம் எரித்த வரலாற்றை, 'சூதான கோட்டை எல்லாம் சுட்டான் துரிசறவே' எனக் குறிக்கிறார். இறைவன் 'மாணிக்கத்து உள்ஒளி போல் உலகெங்கும் மருவி நிற்பவன்' என்று அடையாளப் படுத்துகிறார். சிவனைப் பேசாப் பெருமையன் எனச் சிறப்பிக்கவும் செய்கிறார். பிறவா நெறிக்கு வழி அறியாதார்போல் இச்சித்தர் பாடியுள்ள ஒரு பாடல் யாவரும் அறிந்த ஒன்று.

''ஊற்றைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி
மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுவதில்லை
மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுமென்றால்
ஊற்றைச் சடலம் விட்டே என் கண்ணம்மாஉன் பாதம் சேரேனோ?''

பொங்கலோ பொங்கல்

கவிஞர் சொ. பொ. சொக்கலிங்கம்

இயற்கையோடு ஒன்றிவாழும் இன்பம் பொங்கும் இனியதினம்
இயற்கை தந்த நிலம், நீர், நெருப்பு, காற்று தந்தவளம்
இயல்பான வாழ்க்கைமுறை இயங்க வைக்கும் உழவர்தினம்
இன்பத்தமிழ் இனம்ஒன்றி எல்லோரும் போற்றும்தினம்

புன்னகையை முகம்ஏந்தப் புத்தாடை உடலேந்தப்
புத்தரிசிப் பாலோடு, புதுவெல்லம், புதுப்பானை
கன்னலோடு கனிபடைத்துக் கதிரவனைக் காணும் பொங்கல்
கன்னித்தமிழ் நாடெல்லாம் களிப்போடு காணும்பொங்கல்

செங்கரும்பும், செந்நெல்லும், செவ்வெல்லம், முக்கனியும்,
திக்கெல்லாம் நிறைந்துவரும், செந்தமிழர் பொங்கல்தினம்,
மங்கலங்கள் பொங்கிவர மறத்தமிழர் இல்லமெல்லாம்
மகிழ்ச்சிவெள்ளம் கரைபுரள மண்டிவரும் பொங்கல்தினம்
பொங்கிவரும் பால்போலப் பொங்கிடவே இன்பமெங்கும்
தங்குதடை இல்லாமல் தமிழரினம் ஒன்று சேர்ந்து,
எங்கும் வளம், என்றும் நலம் ஏந்திவரும் இனியபொங்கல்
இன்பமயம் என்றென்றும் எம்நாட்டில் பொங்கிடவே.

அகத்தியர் அருளிய ஆதித்யஹிருதயம்

வால்மீகி ராமாயணத்தில், அகத்திய முனிவர் இந்த மந்திரத்தை ராமனுக்கு உபதேசித்தார் என்று எழுதுகிறார் வால்மீகி.

ராம ராவண யுத்தத்தைப் பார்ப்பதற்காக வந்தவர் அகத்திய முனிவர், ராமனுக்கு வெற்றியின் ரகசியத்தை உபதேசிக்கிறார்.

இது மனச் சோர்வை நீக்கி வெற்றியைக் கூட்டுவிக்கும் மந்திரமாகக் கருதப்படுகிறது.



உள்ளத்தில் உறுதி, மனத்தில் புதிய சக்தி, தெளிவு, வலிமை, தீய சக்திகளை எதிர்த்துப் போராடும் திறன் எல்லாம் கிடைக்கும் என்று அகத்தியர் கூறுகிறார்,

வலிமையைப் பற்றி எண்ணினால் வலிமை கூடும் என்ற மனவியல் தத்துவத்தின்படி ஆதித்ய இதயம் ஒரு அற்புதமான மந்திரம் படியுங்கள், பயன் பெறுங்கள்.

அகத்தியர் ராமனிடம் கூறுகிறார்

ராமா! ரகசியமும் சாசுவதமுமான இம் மந்திரத்தைக் கேள்!
இம்மந்திரத்தை ஜெபி, நீ போரில் வெல்வாய்.
இந்த ஆதித்ய இதயம் புனிதமானது.
எல்லா எதிரிகளையும் அழிப்பது.
வெற்றியைத் தருவது அழிவற்றது.
நன்மையைப் பயக்க வல்லது,
மங்களம் தருவது.
பாபங்களைப் போக்குவது.
கவலையையும் துயரங்களையும் ஒழிப்பது,
ஆயுளை வளர்ப்பது.
இதை நீ தினமும் பாராயணம் செய்.
தினமும் மூன்று முறை ஜெபி.
உலகிற்கெல்லாம் ஆண்டவனான சூரியனைப் பூஜை செய்.

சூரியனை பூஜிக்கும் மந்திரங்களை அகத்தியர் கூறுகிறார்

ஒளிக்கதிரைப் பரப்புவன் சூரியன்.
அவனைத் தேவரும் அசுரரும் வணங்குகிறார்கள்.
அவன் தன் ஒளியால் பிறஒளியை எல்லாம் மறைக்கிறான்.
தேஜஸ் படைத்தவன். ஒளிக்கதிரின் உறைவிடமானவன்.
எல்லா தேவதைகளாயும் அவன் உரு எடுக்கிறான்.
எல்லோரையும் தன் ஒளிக்கதிர்களால் காப்பாற்றுகிறான்.

இவனே பிரம்மா, விஷ்ணு, சிவன், யமன், சந்திரன், மழை,
இவனே கடவுள், தேவதை, தந்தை,
காற்று, அக்கினி, ஒளி,
எல்லாவற்றிற்கும் ஆரம்பம்,
ஆதியில் தோன்றிய சோதி
உருக்கிய தங்கமாய் ஒளிர்பவன்.
அனைத்தையும் அரவணைத்து வளர்ப்பவன்.
ஏழு வண்ணக் குதிரைகளிலே பவனி வருபவன்.
இருளை அழித்து ஒளியை ஊட்டுபவன்.
உயிரற்ற உலகிற்கு உயிரைக் கொடுப்பவன்.
உருவங்களை ஆக்குபவன்.
உலகைப் படைக்கும் தாய்.
குளிரும் இவனே, வெயிலும் இவனே.
நெருப்பும் இவனே. பனியும் இவனே.
வானின் தலைவன் மேகங்களின் மழையும் இவனே.

விந்தியமலைமீது பாய்ந்து செல்பவன்.
வேதத்தில் வியாபித்திருப்பவன்.
வெப்பமாயும் செந்நிறமாயும் இருப்பவன்.
எல்லாவற்றையும் பார்ப்பவன்.
தானே எல்லாமாயும இருப்பவன்.

பேரொளி கொண்டவன். அன்பு கொண்டவன்.
பிறப்பனவற்றிற்கெல்லாம் பிறப்பிடம் இவனே.
நட்சத்திரங்களுக்கும் கோள்களுக்கும் தலைவன்.
உலகம் உருவாகக் காரணமானவன்.
ஒளிகளுக்கெல்லாம் ஒளி.
பன்னிரண்டு ஆதிகளின் சோதியே
உன்னை வணங்குகிறேன்.

நீ உதயமாகும் கிழக்கு மலைக்குத் தெண்டனிடுகிறேன்.
நீ மறையும் மேற்கு மலைக்குத் தெண்டனிடுகிறேன்.
சோதி மண்டலத்தின் தலைவன் நீ
பகலின் தலைவா, உன்னை நெஞ்சிறுத்தி வணங்குகிறேன்.
வெற்றி தருபவன் நீ: நன்மை தருபவன் நீ: உன்னை வணங்குகிறேன்.
ஏழு வண்ணக் குதிரைகளில் ஏறிவரும் உன்னைத் தொழுகிறேன்.
ஆயிரம் கதிர்கள் கொண்ட சூரியனே
ஆதிசோதியே, உன்னை வணங்குகிறேன்.
எல்லாவற்றையும் தூண்டி உயிர்ப்பிக்கிறாய்.
விரைந்து செல்கிறாய். தாமரையை மலரச் செய்கிறாய்.
உயிரற்ற உலகிற்கு உயிர் கொடுக்கிறாய்.
ஆதிசக்தியே சோதியே உன்னை வணங்குகிறேன்.

பிரம்மா, விஷ்ணு, சிவன் - மூவருக்கும் அதிபன் நீ.
பன்னிரண்டு சோதியாய் ஒளிர்பவன் நீ.
எல்லாவற்றையும் துலக்குபவன் நீ.
அனைத்தையும் உட்கொண்டு வலிமை படைத்தவனாக விளங்குபவன் நீ.
பகைவரை அழிப்பவன் நீ, நன்றி கெட்டவரை ஒழிப்பவன் நீ.
எதிலும் மிதத்தன்மை கொண்டவன் நீ.
ஒளியின் தலைவா! உன்னை வணங்குகிறேன்.

உருக்கிய தங்கத்தின் ஒளி நீ, அனலின் உரு நீ.
உலகைப் படைக்கும் தேவசிற்பி நீ.
உலகில் நடக்கும் விஷயங்களுக்கெல்லாம் நீ சாட்சியாய் நிற்கிறாய்.
தேவா உன்னை வணங்குகிறேன்.

சூரிய தேவா நீ இவ்வுலகின் அதிபதி.
இதை அழித்து மீண்டும் மீண்டும் ஆக்குகிறாய்.
நீரை உறிஞ்சி, காயவைத்து மீண்டும் மழை பெய்விக்கிறாய்.
உறங்குபவருக்குள் விழித்துக் கொண்டிருக்கிறாய்.
எல்லா உயிர்களிலும் நிலை கொண்டிருக்கிறாய்.
வேள்வியும் நீயே வேள்வியின் பயனும் நீயே.
வேதமும் நீயே வேதங்களின் பலனும் நீயே
செய்யப்படும் எல்லாக்காரியங்களிலும் நீதான் இயக்கம்.

கடைசியாக அகத்தியர் இராமனிடம் சூரிய பூஜையின் மகிமையைக் கூறுகிறார்

ராமா! இந்த சூரியனை யார் வழிபடுகிறானோ
அவன் ஆபத்துக்களுக்கும், பயங்களுக்கும் கஷ்டங்களுக்கும் ஆளாவதில்லை.
இவன் தேவர்களுக் கெல்லாம் தேவன்.
ஒருமைப்பட்ட மனதுடன் சூரியனைப் பூஜை செய்.
தினம் மூன்று தரம் ஜபி. வெற்றி அடைவாயாக.

நொடிப்பொழுதில் ராவணனை வெல்வாய் என்றார் அகத்தியர் முனி.

காக்கைக்கு உள்ள நற்குணங்கள்

''காலை எழுந்திருத்தல் காணாமலே புணர்தல்
மாலை குளித்து மனைபுகுதல் - சாலவே
உற்றாரோடுண்ணல் உறவாடல் இவ்வைந்தும்
கற்றாயோ காக்கைக் குணம்''

1. அதிகாலை எழுதல், 2. காணாமலே புணர்தல், 3. மாலையில் குளித்து மனை புகுதல், 4. உற்றாரோடு

திருக்குறட் செல்வர் - நேயத்தே நின்றவர்

பாலசுந்தரி, எம்.ஏ.

சித்ரகுப்தன் எழுதும் கணக்கு என்று கூறுகிறோம். இதுபற்றி ஒரு கதை.

அன்பரசன் என்பவன் மிகச் சிறந்த மனித நேயம் மிக்க ஒருவன். அவன் மீது அன்பு கொண்ட இரண்டு தேவதைகள் ஒருநாள் அவனைச் சந்தித்தன.

''இறைவனைப் பிடித்தவர்கள் பற்றிய பட்டியல் என்னிடம் உள்ளது. நீஎந்தத் தர வரிசையில் இருக்கிறாய் என்று பார்ப்போம்'' எனக்



கூறி முதல் தேவதை தேட ஆரம்பித்தது. அவன் பெயர் புத்தகத்தில் இல்லை. திகைத்தது முதல் தேவதை.

''இறைவனுக்குப் பிடித்தவர்கள் பட்டியல் கொண்ட புத்தகம் என்னிடம் உள்ளது. அதில் பார்ப்போம்'' என்றது இரண்டாவது தேவதை. என்ன ஆச்சரியம் ! முதல் இடத்தில் அன்பரசனின் பெயர். தேவதைகள் மகிழ்ந்தன.

புத்தகம் - பட்டியல் இதெல்லாம் நிஜமா? என்ற சந்தேகம் சிலருக்கு வரலாம். அமெரிக்காவில் வாழ்ந்தவர் எட்கார்கேசி என்ற புகைப்படக் கலைஞர். இவரிடம் மனிதரின் பெயரும் ஊரும் கூறிவிட்டால் அவர் எங்கு வாழ்ந்தாலும் அவரைப் பற்றிய அனைத்து விபரமும் கூறிவிடுவார். அவர்களுடைய முந்தைய பிறவி பற்றியும் கூறி விடுவார். ஹிப்னாடைஸ் நிலையில் மருத்துவர்க்கு உதவி வந்தார். நோயாளிகளின் நோய் பற்றியும், அது குணமடையும் வழி பற்றியும் தெளிவாகக் கூறினார். இது எப்படி சாத்தியம் என்று வினவிய போது ''ஆகாயப் பேரேடு மூலமாக அறிகிறேன்'' என்றார். இது பற்றி டாக்டர்எம்.எஸ். உதயமூர்த்தி அவர்கள் தனது மனம், பிரார்த்தனை, மந்திரம் என்ற நூலில் விரிவாகக் கூறி உள்ளார்.

இதனையே பட்டினத்தார்,

''நின் தமர் பெயர் எழுதிய வரி நெடும்
புத்தகத்து
என்னையும் எழுத வேண்டுவன்''

என்கிறார்.

இதனையே திருநாவுக்கரசரும் வலியுறுத்திக் கூறுகிறார்.

''தொழுது தூமலர்த் தூவித் துதித்து நின்று
அழுது காமுற்று அரற்றுகின்றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப்பாரையும்
எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே''

எனவே ஆண்டவனிடம் நம்மைப் பற்றிய குறிப்பேடு உள்ளது என்ற முடிவுக்கு வருகிறோம். அப்படி இறைவனுக்குப் பிடித்தவர்கள் என்ற பட்டியலில் முதலிடம் பிடித்தவர் பற்றிப் பார்ப்போமா?

திருக்காளத்தியை ஒட்டிய பொத்தப்பி என்ற மலைநாட்டில் உள்ள ஊர் உடுப்பூர். இங்கு வேடர் குலத்தலைவன் தன் மனைவி தத்தையுடன் வாழ்ந்து வந்தான். இவர்களின் தவப்புதல்வன் திண்ணன். வாலிப வயது வந்ததும் இவரே தலைவன் ஆகிறார். நண்பர்களுடன் ஒரு நாள் வேட்டைக்குச் செல்கிறார். ஏராளமான மிருகங்கள் வீழ்ந்தன. ஒரு பெரிய காட்டுப் பன்றி மட்டும் வீழாமல் போக்குக் காட்டி காளத்தி மலை அருகே வருகிறது. துரத்தி வந்த திண்ணன் பசியால் வாடிக் கொன்ற

மிருகங்களை வேக வைக்கக் கூறுகிறார் நண்பன் காடனிடம். மற்றொரு நண்பன் நாணனுடன்மலையேறுகிறார்திண்ணன்.

மலையேறும் போதே அவரிடம் மகிழ்ச்சி துள்ளுகிறது. நெருங்கிய உறவினரின் ஊரை நெருங்கும் போது ஏற்படும் நெகிழ்ச்சி அவரை ஆட்கொள்ளுகிறது. அவருள் ஒரு பரவசம். மலையுச்சியில் குடுமிநாதரைக் காண்கிறார். களிப்புமிகக் கொள்கிறார். கொடிய வனத்தில தனித்து இருக்கிறாயே என உருகுகிறார். சிவாச்சாரியார் சிவகோசரியார் இறைவனுக்குப் பூஜை செய்யும் முறைகள் பற்றி நாணன் விவரிக்கிறான். தானும் அதுபோல் செய்ய விழைகிறார் - என்ன செய்யலாம் என்று யோசிக்கிறார்.

வெந்த பன்றி இறைச்சியைத் தான் சுவை பார்த்து சிறந்தவற்றை இலையில் எடுத்துப் பொன் முகலியாற்றின் நீரை வாயில் முகர்ந்து கொள்கிறார். காட்டுமலர்களைத் தன் தலைமுடியில் செருகிக் கொள்கிறார். தன் வாய் நீரை உமிழ்ந்து இறைவனை நீராட்டி, தான் சூடிய மலரை இறைவனுக்குச் சூட்டித்தான் சுவைத்த இறைச்சியைப் படைக்கிறார். இது தினமும் தொடர்கிறது. சூடிக் கொடுத்த ஆண்டாள், சுவைத்துக் கொடுத்த சபரி என இவரது பூஜை அமைகிறது.

காலையில் வரும் சிவாச்சாரியார் இது என்ன அபச்சாரம் என்று சுத்தம் செய்து பூஜை செய்வதும், மதியம் திண்ணன் இறைச்சி படைத்து மகிழ்வதும் ஐந்து நாட்களாய்த் தொடர்கிறது. இறைவனிடம் முறையிடுகிறார் சிவாச்சாரியார். கனவில் வந்து திண்ணனின் பக்தித் திறத்தை உரைக்கிறார் இறைவன். மறைந்து நின்று பார்க்கும்படி கூறுகிறார். கனவு கலைந்தது. ஆறாவதுநாள் காலையும் வந்தது. கூடவே கவலையும் வந்தது. சிவாச்சாரியார் தனது வழக்கம் போல் பூஜை செய்து, மறைவாகநின்று கவனிக்கிறார்.

திண்ணன் வருகிறார். வாயில் கங்கையினும் புனித மஞ்சன நீர், சிகையில் தேவ உலக பாரிஜாத மலருக்கு நிகரான காட்டுமலர்கள், மறையவர்கள் யாகங்களில் இடும் அவிர்ப்பாகத்திலும் சிறந்த எச்சில் இறைச்சி. எல்லாவற்றையும் இறைவனுக்கு சமர்ப்பிக்கிறார். இறைவனின் நாடகம் ஆரம்பம் ஆகியது.

தமது வலக்கண்ணில் குருதி காட்டுகிறான் இறைவன். திண்ணனின் இதயத்தில் குருதி வடிகிறது. ஆற்ற முடியாத துயரத்துடன் பச்சிலை வைத்தியம் செய்கிறார். மூலிகை வைத்தியத்தால் மூல முதல்வனின் கண் குணமடையவில்லை.

திருவள்ளுவர்

இம்மை மறுமையின் - பயன்கள்
எவருமேயடையச்
செம்மை நெறியினை - விளக்கும்
தெய்வ நூல் செய்தோன்.

வழுக்கள் போக்க வந்தோன் - நல்ல
வாழ்வை ஆக்க வந்தோன்
ஒழுக்கம் காட்ட வல்லோன் - தமிழுக்
குயிரை ஊட்ட வந்தோன்.

தொன்மை நூல்களெல்லாம் - நன்கு
துருவ ஆராய்ந்து
நன்மை தீமைகள் - வகுத்த
நாவலர் கோமான்.

- கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை

திகைக்கிறார் திண்ணன். தனது கண்ணை எடுத்து இறைவனுக்கு வைத்தால் குணமடையும் என்ற முடிவுக்கு வருகிறார். அம்பினால் தன் விழியைத் தோண்டி அன்புடன் அப்புகிறார். குருதி நின்றது. குதூகலம் கொள்கிறார்.

குதூகலம் நீடிக்கவில்லை. இடது கண்ணிலும் குருதி. கைவசம் மருந்து இருக்கக் கலக்கம் ஏன்? என்று மறு கண்ணையும் தோண்டி வைக்க முடிவு செய்கிறார். தனது செருப்பு அணிந்த காலை அடையாளம் காண இடது கண்ணில் ஊன்றுகிறார். தனது இடது கண்ணையும் அம்பினால் தோண்ட முற்படுகிறார். நில்லு கண்ணப்ப ! என்று இறைவன் தடுக்கிறான். சிவாச்சாரியார் வியக்கிறார்.

கண்ணப்பிய திண்ணனைக் ''கண்ணப்ப'' என அழைத்து தமது வலப்பக்கத்தில் நிற்பாயாக என அருளுகிறார் இறைவன். நோய் தீர எல்லோரும் இறைவனிடம் முறையிடுவர். அந்த முறையையே மாற்றித் தன் நோய் தீரத் தன் பக்தனை இறைவன் நாடிய வரலாறு இது. எனவே தான் ''நாளாறில் கண்ணிரண்டும் அப்பவல்லேன்'' என பின் வந்த அருளாளர்கள் ஏங்கினர், அதனைப் பாடலிலும் வடித்தனர்.

உலகில் முதன் முதலில் கண்தானம் செய்தவர் கண்ணப்பரே. இன்றைய மாற்று விழி பொருத்தும் மருத்துவத்திற்கு முன்னோடி இவரே. இதனையே வள்ளுவர் கூறுகிறார்.

''அன்பிலார் எல்லாந் தமக்குரியர்
அன்புடையர்
என்பும் உரியர் பிறர்க்கு''

நாரதர் தந்த நன்மை

இலங்கை வேந்தனாகிய இராவணன் நெடுங்காலம் தவமியற்றி அளவற்ற சக்திகளைப் பெற்றிருந்தான். தேவர்களை அடக்கி ஆண்டான், நவக்கிரகங்களும் சக்தியற்று அவன் ஏவல் வழி நின்றனர்.

இராவணனுடைய சிம்மாசனத்திற்கு ஒன்பது படிக்கட்டுக்கள் இருந்தன. ஒவ்வொன்றிலும் ஒரு கிரகம் வீதம் படுத்திருந்தனர். அவர்கள் முதுகில் கால் வைத்து ஏறிச் சென்று இராவணன் ஆசனத்தில் அமர்வது வழக்கம்.

ஒரு நாள் நாரத முனிவர் இராவணன் அவைக்கு வந்தார். தேவர்கள் தொண்டு செய்வதும், நவக்கிரகங்களின் முதுகின் மேல் கால் வைத்து ஆசனத்திற்கு ஏறி செல்வதும் அவர் மனத்தைத் துன்புறுத்தின. இந்த அவல நிலைக்கு ஒரு வழி செய்யவேண்டுமென்று சிந்தித்தார். அடுத்த முறை அங்கு செல்லும் போது ஆவன செய்ய வேண்டுமென்று முடிவு செய்தார்.

அடுத்தமுறை இலங்கை வேந்தனுடைய அவைக்கு நாரதர் வந்தார், இராவணன் முனிவரை எதிர் கொண்டழைத்து. உபசரித்து, ஆசனம் கொடுத்து கௌரவித்தான்.

''இராவணேஸ்வரா! படிகளில் படுத்திருப்பவர்கள் யார்?'' என்று இழுத்தார்.

''நவக்கிரகங்கள் தான், அவர்கள் என்னை எதிர்த்துப் போரிட்டதன் பலனாக இப்போது அவர்கள் என் ஆசனத்திற்குப் படிகளாகக் கிடக்கின்றனர்'' என்று பெருமிதத்துடன் பதிலளித்தான் இராவணன்.

''நல்ல காரியம் செய்தாய், உன்னுடைய தவ வலிமையையும் குலப்பெருமையையும் அவர்கள் சீர்தூக்கிப் பார்க்காமையால் அவர்களுக்கு இது ஏற்ற தண்டனைதான். இருந்தபோதிலும்-'' என்று நிறுத்தினார்.

''என்ன நாரதரே! சொல்லுங்கள்'' என்றான் தசக்கிரீவன்.

''அதோ படுத்திருப்பவன் யார்?'' என்று படியைச்சுட்டிக்காட்டினார் நாரதர்.

''அந்தப் படியில் படுத்திருப்பவர் யார்? என்று அதட்டினான் இராவணன்.

அந்தப் படியில் படுத்திருந்த சனிபகவான் மெல்லத்தலையைத்தூக்கினார்.

''இராவணா! குப்புறப் படுத்திருப்பதால் அவனுக்கு தன்னுடைய இழிவான நிலை தெரிய வில்லை. பிறர் தன் அவமான நிலையைக் கண்டு முகம் சுளிப்பதைப் பார்க்க வேண்டும். அப்போதுதான் அவனுக்குப் புத்திவரும். இனி மேல் அவனை மட்டும் மேல்நோக்கிப் படுக்கச் சொல். அவன் மார்பில் காலை அழுத்தி வைத்து ஏறிச் செல். அப்போதுதான் அவனுக்குப் புத்தி வரும்'' என்றார்.

''சரியான தண்டனைதான் முனிவரே; இனி அவ்வாறே மேல்நோக்கிப் படுக்கச்சொல்கிறேன்'' என்றான் இராவணன்.

உடனே சனிபகவான் மல்லாந்து படுத்துக் கொண்டார். ''கர்வம் கொண்ட சனிக்கு இனி புத்தி வரும்'' என்று எக்காளமிட்டான். கெடுமதி கண்ணுக்குத் தோன்றவில்லை. நாரதரின் கபட நாடகம் அவனுக்குப் புரியவில்லை.

சனிபகவான் பார்வை அவன்மீது பட்டதால், அன்றிலிருந்தே அவனுக்கு அழிவுகாலம் வந்துவிடும் என்று நாரதர் திட்டமிட்டுச் செய்த செயலை அவன் அறிவானா? அவ்வாறே அவனுடைய சக்தியும் பராக்கிரமும் அன்றிலிருந்தே குறையத் தொடங்கின. திட்டம் குறைவின்றி நிறைவேறியது. நாரதர் மகிழ்ச்சியடைந்தார். சனீசுவரனுடைய பார்வை இராவணன் மீது பூரணமாக விழத் தொடங்கியது. இராவணன் அழிந்து போனான்.

புன்னை நல்லூர் மாரியம்மன் புகழைப் பாடுவோம்

தஞ்சையை ஆண்ட சோழப் பேரரசர் தஞ்சையைச் சுற்றிலும் எட்டு திக்குகளிலும் அஷ்ட சக்திகளைக் காவல் தெய்வங்களாக அமைத்தார்கள். அவ்வாறு தஞ்சைக்குக் கீழ்புறத்தில் அமையப் பெற்ற சக்தியே புன்னைநல்லூர் மாரியம்மன். இத்திருக்கோயில் தஞ்சையிலிருந்து கிழக்கே 7கி.மீ தொலைவில் உள்ளது.

கீர்த்தி சோழன் என்னும் அரசர் இவ் அம்பிகையின் அருளால், ஒரு ஆண்மகனைப் பெற்று, அதற்குத் தேவசோழன் என்னும் பெயரைச் சூட்டி அவன் பல ஆண்டுகள் சோழ சாம்ராஜ்யத்தை ஆண்டு வந்தான். தஞ்சையை ஆண்ட வெங்கோஜி மகாராஜா 1680-ல் திருத்தல யாத்திரை செய்யுங்கால் கண்ணபுரம் என்னும் சமயபுரத்தில் தங்கி வழிபாடு செய்தார். அன்றிரவு அம்பிகை அரசனின் கனவில் தோன்றி, தஞ்சைக்கு கிழக்கே 7 கி.மீ தூரத்தில் உள்ள புன்னை காட்டில் புற்று உருவாய் உள்ள தன்னை வந்து சேவிக்கும்படி கூறவே, அவ்வரசன் தலைநகராகிய தஞ்சைக்கு வந்து, புன்னைக் காட்டிற்கு வழியமைத்து, அம்பிகை இருப்பிடத்தைக் கண்டு சிறிய கூரையமைத்து, புன்னைநல்லூர் என்று பெயரிட்டு அக்கிராமத்தையும் ஆலயத்திற்கு வழங்கினார்.

1728- 1735-இல் தஞ்சையை ஆண்ட துளஜா ராஜாவின் புதல்விக்கு வைசூரியால் கண் மங்கியது. அரசனின் கனவில் அம்பிகை ஓர் அந்தணச் சிறுமி போல் தோன்றி, தன் சன்னதியில் புதல்வியுடன் வந்து வழிபடும்படி கூறி மறைந்தார். அரசனும், அரசகுமாரியுடன் சென்று அம்பிகையை வழிபட்டவுடன், அரசகுமாரி தனது பார்வையை திரும்பப் பெற்றாள். அரசன் அம்பிகையின் அருளில் மெய்மறந்து அம்பிகைக்குச் சிறிய கோயிலைக் கட்டுவித்துத் திருச்சுற்று மாளிகையையும் அமைத்தார்.

இத்திருக்கோயில் தஞ்சைஅரண்மனை தேவஸ்தானத்தைச் சேர்ந்த 88 திருக்கோயில்களில் ஒன்றாகும்.

இத்திருக்கோயிலின் மூலஸ்தான மாரியம்மன் புற்று மண்ணால் உருவாக்கப்பட்டது ஒரு தனிச் சிறப்பாகும். ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திர சுவாமிகளால் மாரியம்மன் யந்திர பிரதிஷ்டை செய்யப் பட்டதாகும். இங்கு ஆகம விதிப்படி தினசரி நான்கு கால பூஜைகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

மூலவர் புற்று மண்ணால் ஆனதால் மூலஸ்தான அம்பாளுக்கு அபிஷேகங்கள் செய்யப் படுவதில்லை. தைலக்காப்பு சாற்றப்படுகிறது. விஷ்ணு துர்க்கைக்கும், அம்பாள் உற்சவ மூர்த்திக்கும் நித்தியபடி அபிஷேகம் நடைபெற்று வருகிறது.

அம்பாளுக்கு 5 வருடத்திற்கு ஒரு முறை ஒரு மண்டலம் தைலக் காப்பு அபிஷேகம் நடைபெறும். இவ்வமயம் ஒரு மண்டலம் அம்பாளை ஒரு

சமயபுரம் மாரியம்மனுக்கு உகந்த மாவிளக்குப் பிரார்த்தனை



மாவிளக்குப் பிரார்த்தனை சமயபுரம் மாரியம்மன் கோயிலில் பிரசித்தி பெற்று விளங்குகின்றது.

பக்தர்களின் வேண்டுதல் நிறைவேறியவுடன் அவர்கள் ஆலயத்தில் வந்து பிரகாரத்தில் படுத்துக் கொள்ள, அவர்கள் மேல் சிறு வாழையிலைத் துண்டு வைத்து, அதில் அகல் விளக்கு மாதிரி மாவிளக்கில் திரிபோட்டு ஏற்றுகிறார்கள்.



யானைகள் நலவாழ்வுப் புத்துணர்வு முகாம்

நம் சமய நம்பிக்கையின் அடையாளமாகவும், வழிபாட்டுச் சடங்குகளின் சிறப்பம்சமாகவும் திகழும் திருக்கோயில் யானைகள் உரிய முறையில் பேணிப் பராமரிக்கப்பட வேண்டி நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2003ஆம் ஆண்டு தொடங்கி வைத்த ஒப்பற்ற திட்டம் தான் **"யானைகள் நலவாழ்வுப் புத்துணர்வு முகாம்"** எனும் திட்டம் ஆகும்.

கடந்த 2003, 2004 ஆம் ஆண்டுகளில் சிறப்புற நிகழ்த்தப் பெற்ற **"யானைகள் நலவாழ்வுப் புத்துணர்வு முகாம்"**, 2005 ஆம் ஆண்டு நவம்பர் 21ஆம் நாள் முதுமலையில் சிறப்புறத் தொடங்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு ஜனவரி 7ம் நாள் முடிய 48 நாட்கள் நடைபெறவுள்ள இந்த யானைகள் நலவாழ்வுப் புத்துணர்வு முகாமில் கோயில் யானைகளுடன் தனியார் யானைகளுமாக மொத்தம் 65 யானைகள் பங்கேற்றுப் பயன் பெற்று வருகின்றன.

வெண்திரையில் வரைந்து ஆவாகனம் செய்து, அதற்குத்தான் அர்ச்சனை ஆராதனைகள் நடைபெறும். அப்போது மூலஸ்தான அம்பாளுக்கு 48 நாட்களிலும் தினமும் இரு வேளை சாம்பிராணி தைலம், புனுகு அரகஜா, ஜவ்வாது ஆகியவற்றால் அபிஷேகம் நடைபெறும்.

தைலாபிஷேக நேரத்தில் அம்பாளுக்குத் தைலக்காப்பின் போது உக்ரம் அதிகமாகும். அதைத் தவிர்க்க அம்பாளுக்குத் தயிர் பள்ளயம், இளநீர் வைத்து நைவேத்தியம் நடைபெறும்.

உள்தொட்டி மற்றும் வெளித்தொட்டி இரண்டிலும் நீர் நிரப்பி, அம்பாளின் உஷ்ணத்தை தணிக்க ஏற்பாடு செய்யப்படும். ஒவ்வொரு வருடமும் கோடை நாட்களில் அம்பாளுக்கு முகத்திலும், சிரசிலும் முத்து முத்தாக வியர்வை வியர்த்து தானாகவே மாறிவிடும் வழக்கம் தற்போதுவரை உள்ளது.

இதன் காரணமாகவே அன்னையை நாம் முத்து மாரியம்மன் என்று அழைக்கிறோம். குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு வைசூரி வார்க்கும் சமயத்தில் அம்பாளுக்குப் பிரார்த்தனை செய்து உள்தொட்டி, வெளித்தொட்டிகளில் நீர் நிரப்பினால் விரைவில் எந்தவித சிரமமும் இன்றி குணமடைந்து வருவது இன்றுவரை கண்கூடாக உள்ளது. ஸ்ரீ அம்பாளுக்கு ஒவ்வொரு வருடமும் ஆடி, ஆவணி, புரட்டாசி மாதங்களில் திருவிழா நடைபெறும்.

ஆடி மாதம் முத்துப் பல்லக்கு நடைபெறும். ஆவணி மாதம் கடைசி ஞாயிற்றுக் கிழமை தேரோட்டம் வெகு சிறப்பாக நடைபெறும். புரட்டாசி மாதம் தெப்ப உற்சவம் மற்றும் நவராத்திரி திருவிழா சிறப்பாக நடைபெறும்.

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையிலும் இத்திருக்கோயிலுக்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் பல ஊர்களிலிருந்தும் வந்து அம்பாளைத் தரிசித்துப் பேரானந்தம் அடைவர். கோடை காலத்தில் அம்பாளுக்கு பிரார்த்தனை செய்து பல ஆயிரக் கணக்கான மக்கள் பால்குடம் மற்றும் காவடி எடுத்து அபிஷேகம் செய்து பரவசம் அடைவர். மேலும் பக்தர்கள் தங்களது பிரார்த்தனையின் பேரில் முடிகாணிக்கை செலுத்துதல், உயிர்க்கோழி செலுத்துதல், உடல் உறுப்புக்களைத் தங்கம் மற்றும் வெள்ளியில் செய்து செலுத்துதல், ஆடு, மாடுகளைக் காணிக்கையாக செலுத்துதல் முதலியவைகளையும் செலுத்தி மனநிம்மதி அடைகின்றர்.

வெல்லக்குளம்:

திருக்கோயிலின் உட்புறத்தில் அலுவலகத்தின் எதிரில் உள்ள குளம் வெல்லக்குளம் என்று அழைக்கப்படுகிறது. உடம்பில் கட்டி மற்றும் பரு ஏற்படுபவர்கள் அம்பாளை வேண்டிக்கொண்டு வெல்லம் வாங்கி வந்து வெல்லக்குளத்தில் இடுவர். வெல்லம் தண்ணீரில் கரைவது போல் முகப்பரு மற்றும் கட்டிகளும் கரைந்து விடும் என்பது இன்று வரை வழக்கமாக உள்ளது.

இதைக்கண்ணுரும் மெய்யன்பர்கள் அனைவரும் இத்திருக்கோயிலுக்கு வருகைபுரிந்து, அம்பிகையின் அருளால் எண்ணியவற்றை எண்ணியவாறு கைகூடப் பெற்று, இன்புற்று உய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

திருவரங்க அற்புதம் : ஸ்ரீராமானுஜரின் "தானான திருமேனி" தரிசனம்

ப.சிவகுமார். பி.எஸ்.சி., பி.எல்.
இணை ஆணையர்/செயல் அலுவலர்

"அற்புதன் செம்மை இராமாநுஜன்
என்னை ஆளவந்த கற்பகம்"

என்று "இராமாநுஜ அந்தாதி" கொண்டாடும் இராமாநுஜர் ஆற்றிய அற்புதங்கள் அநேகமாகும்.

திருக்கோட்டியூர் நம்பிகளிடம் "ஓம் நமோ நாராயணாய" எனும் திருமந்திரப் பொருளை ஸ்ரீராமாநுஜர் கற்றுக் கொண்ட போது ஒரு அற்புதம் நடந்தது.

மந்திரப் பொருளை உணர்த்துமுன் திருக்கோட்டியூர் நம்பிகள் ஒரு நிபந்தனை விதித்தார். "தம் அனுமதி இன்றி இத்திருமந்திரப் பொருளை யாருக்கும் கூறுதல் கூடாது. அவ்வாறு கூறினால் நரகமே கிடைக்கும்" என்று திருக்கோட்டியூர் நம்பிகள் தடை விதித்திருந்தார்.



"இம்மந்திரத்தை உரைப்பதால் தமக்கு நரகமே கிடைத்தாலும் கேட்கும் பல்லோரும் பயன் பெற்று பரகதி அடைவர்" என்று எண்ணிய இராமாநுஜர் திருக்கோட்டியூர் திருக்கோயில் அட்டாங்க விமானம் மீது ஏறி நின்று "ஆசைஉடையோரெல்லாம் வாருங்கள். வாழ்வில் நலம் பயந்து பரமனடி சேர்க்கும் மறைப் பொருளைக் கேட்டுப் பயன்பெறவே வாருங்கள்" என்று கூவி அழைத்து "ஓம் நமோ நாராயணா" எனும் திருமந்திரத்தை உபதேசித்த இவர்தம் கருணை அற்புதத்தை என்னென்று வியப்பது?

"என் கட்டளையை மீறி மந்திர உபதேசம் ஏன் செய்தனை?" என்று இராமாநுஜரை மிகக் கடுமையாகக் கோபித்தார் திருக்கோட்டியூர் நம்பிகள்.

"சுவாமி! தேவரீர் திருவடி சம்பந்தம் பெற்ற அடியேன் ஒருவன் நரகம் சென்றாலும், இத்தனை கோடி ஆத்மாக்கள் மோட்சசாம்ராஜ்ய மாளிகைக்குச் செல்லும் வழியறிந்து பெரும் பயன் அடையும் பேறு பெறுகிறார்களே! அது நினைந்தே யான் மந்திர உபதேசம் செய்தேன்" என விளக்கினார் இராமாநுஜர்.

இராமாநுஜரின் விளக்கம் கேட்டு வியப்புற்றார் திருக்கோட்டியூர் நம்பிகள். "இத்தகைய பரந்த கருணை உள்ளம் தமக்கு இதுகாறும் இல்லாமற் போயிற்றே! எம் பெருமானைக் கருணைக்கடல் எனக் கேட்டு இருக்கின்றோம். அத்தகைய கருணைக் கடலாகவே நம் இராமாநுஜரும் திகழ்கின்றார். இனி இராமாநுஜரையும் "எம்பெருமானார்" என்றே சிறப்புப் பெயரிட்டு அழைப்போம். இனி நம் வைணவ சமயமும் "எம்பெருமானார் தரிசனம்-எனப் பெயர் பெறும்" என இராமாநுஜரை ஆசி கூறி அகம் பூரித்தார் திருக்கோட்டியூர் நம்பிகள்.

இவருடைய திவ்விய திருமேனிகள் பற்பல வைணவத் திருத்தலங்களையும் அலங்கரிக்கின்றன.

அவற்றுள்ளும் மூன்று அற்புதத் திருமேனிகளை நாம் அறிந்து இன்புற வேண்டியது மிகமிக அவசியமாகும்.

பன்னிரண்டு ஆண்டுகள் திருநாராயண புரத்தில் வீற்றிருந்து அரும்பணிகள் ஆற்றிய ஸ்ரீராமாநுஜர் திருவரங்கம் புறப்படும் வேளையில் இவர்தம் பிரிவாற்றாமல் சீடர்கள் யாவரும் வருத்தமுற்று உளம் உருகினர்.

தம்மைப் போன்ற திருமேனி ஒன்று வடிக்கச் செய்த ஸ்ரீராமாநுஜர் அதனை ஆலிங்கனம் செய்து தம் திவ்விய சக்தியை அதனுள் செலுத்தினர். சீடர்கள் மகிழ்ந்து ஏற்ற இராமாநுஜர் தம் திருமேனி தமர் உகந்த திருமேனியாகத் திருநாராயணபுரத்தில் சிறந்து விளங்குகின்றது.

இராமாநுஜர் திருவரங்கத்திற்கு வந்தபிறகு அவர் பிறந்த திருப்பெரும்புதூர் அன்பர்கள் ஸ்ரீராமாநுஜரைப் போல் திருமேனி வடிவமைத்துக் கொண்டு வந்து காட்டினர். ஸ்ரீஇராமாநுஜரும் அவ்விக்கிரத் திருமேனியைக் கட்டி அணைத்துத் தம் பிராண ஜீவனை அவ்விக்கிரகத்திற்குக் கொண்டு செலுத்தினார். இராமாநுஜரே உகந்த அவர் ஜீவசக்தி பொருந்திய அந்த விக்கிரகம் "தாம் உகந்த திருமேனி" யாக அவர் பிறந்த ஸ்ரீபெரும்புதூர் ஆலயத்தில் வீற்றிருக்க வழிபட்டு மகிழலாம்.

ஸ்ரீஇராமாநுஜர் தம் 120வது வயது நிறைவில் திருமால் திருவடி சேர்ந்தார். அவரது திவ்விய திருமேனி திருவரங்கனின் திருக்கோயில் வளாகத்தில் பள்ளிப்படுத்தப்பட்டது.

ஆயின் சில நாட்களில் அவர்தம் திவ்விய திருமேனி மேலே வந்து அமர்ந்த திருக்கோலத்தில் வீற்றிருக்க, இன்றும் அவர்தம் திருமேனி தனிச் சந்நிதியில் சேவை சாதித்து வரும் அற்புதத்தைத் திருவரங்கத்தில் தரிசித்து மகிழலாம்.

மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் அவர்களின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி

மலர்கின்ற புத்தாண்டை உற்சாகத்துடன் கொண்டாடும் தமிழக மக்கள் அனைவருக்கும் எனது இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் வளர்ச்சிப் பாதையில் புதிய வரலாறு படைக்கச் செய்த 2005-ஆம் ஆண்டு விடைபெற்றுச் செல்கின்ற வேளையில், வாராது வந்த மாமழை என்று நாம் வரவேற்று மகிழ்ந்த வான் மழை ஓயாது பெய்து பெரும் பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

மழை வெள்ளம் பாதித்த தமிழகத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பெருகச் செய்ய வேண்டியது நமது மகத்தான கடமை ஆகும். நமது வாழ்க்கை என்ற வானத்தைச் சூழ்ந்திருந்த கருமேகங்கள் அகன்றுவிட்டன. நிவாரணப் பணிகளில் வெற்றி பெற்ற நாம், புதிய நிர்மாணப் பணிகளிலும் வெற்றி பெற்றே தீருவோம்.

இடைமறிப்பது இயற்கையானாலும், செயற்கையானாலும் அந்தத் தடையை உடைப்பது நமக்கு வாடிக்கை தானே! இயற்கைத் தடைகளை எதிர்கொள்வோம். செயற்கைத் தடைகளைத் தகர்ப்போம்.

புதிய பொறுப்புகள் நம்மை அழைக்கின்றன. புதிய வளர்ச்சியையும் மலர்ச்சியையும் தமிழக மக்களுக்கு வழங்குவோம். கூடுதல் நம்பிக்கையும், முயற்சியும், உழைப்பும், உறுதியும் நமக்கு வெற்றியை நல்கியே தீரும்.

2006-ஆம் ஆண்டு புதிய வாழ்வையும் வளத்தையும் வெற்றிகளையும் வழங்கும் புத்தாண்டாக மலரட்டும் என்று வாழ்த்தி, என் அன்பிற்கினிய தமிழக மக்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

புத்தமுதப் பொங்கல்



பொங்கல் இன்று பொங்கல்
புதுவருஷப் பொங்கல்
மங்கலங்கள் பொங்க
மனையிலிடும் பொங்கல்.

தங்கத்தினால் பானை
தரளமென அரிசி
பொங்கலும் பால் பொங்கல்
புத்தமுதப் பொங்கல்.

பானையுமே பொங்கிப்
பால்வடியும் வேளை
வானமெழக் குரவை
வழங்கிவலம் வருவோம்.

கடவுட்கமு தளிப்போம்
காகத்துக்கும் இடுவோம்
உடனிருந் தெல்லோரும்
உண்டு மகிழ்ந் திடுவோம்.

- கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை



சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் } திருமிகு த. பிச்சாண்டி, இ.ஆ.ப., ஆணையர்.
: தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034. தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் : கவிஞர் டாக்டர். த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
அச்சிடுவோர் : குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

திருப்பரங்குன்றம், மதுரை - 5

தொலைபேசி எண்கள் : 0452- 2482248, 2484359



தமிழ்நாட்டின் மதுரையம்பதியில் பாண்டிய நாட்டின் 14 சைவத் திருத்தலங்களுள் இது இரண்டாவது மிகப்பெரியது ஆகும். பரம் என்றால் உயர்ந்தது என்று பொருள். இதற்கு அப்பாற்பட்டது என்று ஏதுமில்லை. இது கந்த மலை, திருப்பரங்கிரி, சுகந்தவனம், பரங்குன்றம் என வழங்கி இன்று திருப்பரங்ககுன்றமாக பீடுற்று நிற்கிறது. இங்கு வருடம் முழுவதும் வரும் - பன்னிரெண்டு மாதங்களிலுமே திருவிழா நடைபெறும்.

திருவிழாக்கள் விபரம்

1.	தமிழ் சித்திரை மாதம்	-	சுவாமி - மதுரை சித்திரை திருவிழாவிற்கு மதுரைக்கு எழுந்தருளல்.
2.	வைகாசி	-	வசந்த உற்சவம் - 10நாள் விழா - விசாகம் பாற்குடக் காட்சி
3.	ஆனி	-	ஊஞ்சல் திருவிழா - முப்பழ பூஜை 10 நாள் விழா
4.	ஆடி	-	ஆடிக் கார்த்திகை, ஆடிப் பூரம் விழா
5.	ஆவணி	-	ஆவணி மூலத் திருவிழாவிற்கு மதுரைக்கு எழுந்தருளல்
6.	புரட்டாசி	-	நவராத்திரி - 10 நாள் விழா
7.	ஐப்பசி	-	கந்தசஷ்டி விழா - 7 நாள்
8.	கார்த்திகை	-	திருக்கார்த்திகை மலைதீபம் சொக்கப்பன் திருவிழா - 10 நாள்
9.	மார்கழி	-	மாணிக்கவாசகர் உற்சவம் - திருவாதிரை 10 நாள் விழா வைகுண்ட ஏகாதசி விழா
10.	தை	-	தை - தெப்பத்திருவிழா - 10 நாள்
11.	மாசி	-	வெயிலுகந்தம்மன் விழா, மகாசிவராத்திரி விழா
12.	பங்குனி	-	பிரமோற்சவத் திருவிழா - திருக்கல்யாணம் திருத்தேர் விழா - 15 நாள்

தற்போது தெப்பத்திருவிழா 29.1.2006 முதல் 7.2.2006 முடிய நடைபெற உள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வரின் அன்னதான திட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 23.2.2002 முதல் இத்திருக்கோயிலில் நித்திய அன்னதான திட்டம் துவக்கப்பட்டு தினசரி 100 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி அன்னதானத் திட்டத்தில் பங்கு கொள்ள விரும்பும் பக்தர்கள் ரூ.15000/- முதலீடு செய்தால் அதிலிருந்து கிடைக்கப் பெறும் வட்டித் தொகையிலிருந்து வருடத்தில் தாங்கள் விரும்பும் ஒரு நாளில் அன்னதானம் செய்யப்படும். இம்முதலீட்டிற்கு வருமானவரிச் சட்டம் 1961இன் படி 80G இல் வரிச்சலுகை உண்டு. அன்னதானம் செய்ய விரும்புவோர் திருக்கோயில் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

கட்டளை வேண்டுகோள்

இத்திருக்கோயிலில் கட்டளைதார் இல்லாத திருவிழாக்களை ஏற்றுநடத்த கட்டளைதாரர்கள் பெரிதும் வரவேற்கப்படுகிறார்கள். ஆண்டுக்கொருமுறையோ, மாதந்தோறுமோ பக்தர்கள் தாங்கள் விரும்பும் ஒரு நாளில், பெயரில் வட்டித் தொகையிலிருந்து அர்ச்சன செய்து பிரசாதம் அனுப்ப முதலீடுகள் வரவேற்கப்படுகிறது.

- பக்தர்கள்தங்கித்தரிசித்துச்செல்ல24அறைகள்கொண்ட பயணிகள்தங்கும்விடுதி இங்குச்செயல்பட்டுவருகிறது.
- வள்ளி - தேவசேனா திருமண மண்டபங்கள் குறைந்த வகையில் நவீன வசதிகளுடன் குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு விடப்படுகிறது.
- பிரதி பௌர்ணமிதோறும் கிரிவலம் நடைபெற்று வருகிறது.
- பிரதி மாதகார்த்திகைதோறும் சுவாமி மயில் வாகனத்தில் உலா வரும் காட்சி நடைபெற்று வருகிறது.

Visit Our Web Site :- www.thiruparankundramtemple.org
E-mail ID :- thiruparankundramdc@sancharnet.in

ஆர். சேக்கப்பச் செட்டியார்
தலைவர், அறங்காவலர் குழு

இரா. பத்மநாபன், பி.எஸ்ஸி., பி.எல்., டி.எல்.ஏ.
துணை ஆணையர் / நிர்வாக அதிகாரி

எஸ்.பி. அண்ணாமலை , கோ. பாரி, கா. சரவணன், அ. முத்துமாரி
அறங்காவலர்கள்

பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 03-05 / WPP No. 451/03-05

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

திருத்தணி - 631209. திருவள்ளூர் மாவட்டம்

திருப்புகழ்த் திருப்படித் திருவிழா அழைப்பிதழ்

1. ''திருப்புகழ் ஓதும் கருத்தினர் சேரும்'' திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் 2005-2006 ஆம் ஆண்டு திருப்புகழ் திருப்படித்திருவிழா 31.12.2005 மற்றும் 01.01.2006 ஆகிய நாட்களில் சீரும் சிறப்புடன் நடைபெறவுள்ளது.

2. இச்சிறப்புமிகு மாவட்ட அளவிலான பெருவிழாவில் கலந்து கொள்ள வரும் பக்தர்களுக்கு இவ்வாலய நிர்வாகத்தின் சார்பாக அனைத்து மாவட்டங்களிலிருந்தும் மட்டுமின்றி அண்டை மாநிலங்களான பாண்டிச்சேரி, கேரளா, ஆந்திர, கர்நாடகா ஆகிய மாநிலங்களிலிருந்தும் சிறப்பு பேருந்துகள் வசதியும் சென்னை திருப்பதியிலிருந்து சிறப்பு பேருந்துகளும் இயக்கப்பட உள்ளன.

3. பக்தர்கள் வசதிக்காக மலைக்கோயிலிலும் குடில்களிலும் எந்நேரமும் சுத்தமான குடிநீர் வசதியும், பக்தர்கள் தங்களின் முடிக்காணிக்கையை செலுத்திட பெருவிழாவில் தேவையான அளவு ஆங்காங்கே முடிக்கொட்டைகளும், கழிப்பிட வசதிகளும் செய்யப்பட்டுள்ளது.

4. பக்தர்களுக்காக இத்திருக்கோயில் சித்த மருத்துவர் மற்றும் அரசு மருத்துவ துறையினர் மூலமும் மருத்துவ வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

5. பக்தர்கள் விரைவாக மூலவரை தரிசிப்பதற்கு பொது வழியாகவும், சிறப்பு தனி வழியாகவும் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சேவார்த்திகளுக்கு உதவிடவும், பாதுகாப்புக்கும் சாரண சாரணியர்களும், காவல்துறையினர்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

6. பக்த பெருமக்கள் இத்திருவிழாவில் கலந்து கொண்டு திருத்தணிகைப் பெருமானைத் தரிசித்து திருவருள் பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

திருப்பணி வேண்டுகோள்

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் சுமார் ரூ. 2 கோடிக்கு மேலான அளவில் உபயத்திருப்பணிகள் நிறைவு பெற்று 06.07.2003 அன்று மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. மேலும் இத்திருக்கோயிலின் உப கோயில்களில் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றிற்கு 2006 ஆம் ஆண்டு திருவருள் துணையுடன் திருக்குடமுழுக்கு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திருப் பணிகளுக்குத் தாராளமாக நன்கொடை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம். நன்கொடைகளுக்கு வருமானவரி விலக்கு உண்டு.

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர் !

நிதி குறைந்தோர் காசுகள் தாரீர் !

உபயத்திருப்பணி செய்ய விரும்பும் நன்கொடையாளர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

இணை ஆணையர் / செயல் அலுவலர்

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருத்தணி.

தொலைபேசி எண்கள் : 044 - 27885225, 27885303

திரு. ப. ராஜா, பி.எஸ்.ஸி., பி.எல்.
இணை ஆணையர் / செயல் அலுவலர்

திரு. எஸ். நரசராஜீ
அறங்காவலர் குழுத் தலைவர்

அறங்காவலர்கள்

திரு. இரா. கருணாகரன்,
திருமதி ஹேமாவதி,

திரு. எம்.கே. முருகேசன்,
திரு. எம். குணாளன்